விலை
ரூபா 20

பக்கங்கள்
32

# உதயன்

35உ - 29உ
தெளிவான
வானிலை

சுடர் 31 | கதிர் 160 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 21, புதன்கிழமை 04.05.2016


3 லட்சம்
பெறுமதியான
நகைகள்
துப்பாக்கி
முனையில்
கொள்ளை

பக்.02

# ரணகளமானது நாடாளுமன்று

## சபையில் நேற்றுக் கடும் மோதல்
## ஐ.தே.க எம்.பி. சமரசிங்க காயம்



கொழும்பு, மே 4
மகிந்தவின் பாதுகாப்புத் தொடர்பில், நாடாளுமன்றில் ஏற்பட்ட சர்ச்சையால் ஆளுந் தரப்பினரும் மகிந்த ஆதரவுப் பொது எதிரணியினரும் கடுமையாக மோதிக் கொண்டனர்.
இதன்போது, கட்டிப்புரண்டு, சண்டையிட்டு, ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கிக் கொண்டனர். தாக்குதலில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சந்தீப் சமரசிங்க காயமடைந்தார்.
இதனால் சபை போர்க் களமாகிப் பெரும் பக். 30

## 200 பொலிஸார் மகிந்தவுக்கு போதும்

*கூறுகிறார் பொன்சேகா*



கொழும்பு, மே 4
போரை முடிவுக்குக் கொண்டு வந்த எனக்கு 15 பொலிஸார் தான் பாதுகாப்பு வழங்குகின்றனர். ஆனால் மகிந்தவுக்கு 200 பொலிஸார் பாதுகாப்பு வழங்குகின்றனர். இது அவருக்குப் போதுமானது. அதற்கு மேலதிகமாக தேவை என்றால், அவர்தான் அதனைக் கேட்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் பக். 06

## மோதல் விசாரணை அறிக்கை இன்று

கொழும்பு, மே 4
நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பான விசாரணை அறிக்கை இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது. இவ்வாறு பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்தார். விசாரணை அறிக்கைக்கு அமைய நாடாளு மன்றத்தின் பக். 06

முச்சந்தி முரளி



உயர் சபைக்குள்ளையும் இப்பிடிக் கேவலம் பாருங்கோ...

## பொருத்து வீடுகள்; இன்று ஆராய்கிறார் ஜனாதிபதி மைத்திரி

யாழ்ப்பாணம், மே 4
பொருத்து வீடுகள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் இன்று முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலுக்கு, வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.
மீள்குடியேற்ற அமைச்சினால், வடக்கு-கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இந்த வீடுகள் தலா 21 இலட்சம் ரூபா பக். 27

## நிலத்தடி நீரில் கழிவு ஒயில்; மூன்று மாதங்களுள் ஆய்வு

### அதன் அறிக்கையை ஓகஸ்டில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், மே 4
சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நிலக்கீழ் நீரில் ஒயில் கலந்தமை தொடர்பில் ராடர் கருவி மூலமான பரிசோதனை உள்ளிட்ட அனைத்து ஆய்வுகளையும் 3 மாதங்களுக்குள் முன்னெடுத்து, அதன் அறிக்கையை எதிர்வரும் ஓகஸ்ட்டில் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண் டும். இவ்வாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன், வடக்கு மாகாண பிரதம செயலாளரைப் பணித்துள்ளார். பக். 27

## ஐ.நா. உதவிச் செயலராக விரைவில் சொல்ஹெய்ம்



கொழும்பு, மே 4
இலங்கைக்கான சமாதானத் தூதுவராகப் பணியாற்றிய நோர்வேயின் முன்னாள் அமைச்சர் சொல்ஹெய்ம், ஐ.நா.வின் உதவிச்செயலராக நியமிக்கப்படவுள்ளார்.
ஐ.நா. சுற்றுச் சூழல் திட்டத்தின் உதவிச் செயலராக எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்படவுள்ளார் எனச் சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ - மூன், இந்த நியமனம் பற்றிய அறிவிப்பை விரைவில் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
நோர்வேயின் முன்னாள் அமைச்சரான எரிக் சொல்ஹெய்ம், பொருளாதார மற்றும் பக். 27

# சமஷ்டி பற்றி தெற்குக்கு புரியும்படி விளக்குங்கள்

## சம்பந்தனிடம் எடுத்துரைத்தனர் ஏழு கட்சிகளின் தலைவர்கள்



கொழும்பு, மே 4
சமஷ்டி தொடர்பில் தென்பகுதி மக்களுக்குத் தெளிவுபடுத்துங்கள். இதன் மூலமாகவே தென்பகுதி மக்களின் அச்சத்தைப் போக்க முடியும்.
இவ்வாறு தெரிவித்துள்ளனர் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திப் போராட்டம் நடத்திய ஏழு கட்சிகளின் தலைவர்கள்.
எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், குறித்த கட்சிகளின் பக். 27

## வடக்கிலும் பாடசாலைகளை நண்பகலுடன் மூடவேண்டும்

### மாகாணக் கல்வி அமைச்சரிடம் மாவை. எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 4
வட மாகாணத்தில் அதிகரித்த வெப்பம் நிலவுகின்றது. இதன் காரணமாக ஏனைய மாகாணங்கள் போன்று, வட மாகாணத்தின் பாடசாலைகளையும் நண்பகல் 12 மணியுடன் மூடவேண்டும். இதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று வடக்கு பக். 30





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 லட்சம் பெறுமதியான நகைகள் துப்பாக்கி முனையில் கொள்ளை

## வவுனியா மகாறம்பைக்குளத்தில் சம்பவம்

வவுனியா,மே 4

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் 3 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நகைகளை ஆயுத முனையில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகத்தை மூடிய தலைக்கவசம் அணிந்து வந்த 3 பேரைக் கொண்ட குழுவே துப்பாக்கியைக் காட்டி மிரட்டி நகைகளைக் கொள்ளையடித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் நடந்துள்ளது.

மகாறம்பைக்குளம், காத்தார்சின்னக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் ஆயுதங்களுடன் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த பெண்களை மிரட்டித் தேடுதல் நடத்தியுள்ளனர்.

அதில் எதுவும் அகப்படாத நிலையில் நகைகளைத் தருமாறும், இல்லை என்றால் சுடுவோம் என்றும் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியுள்ளனர்.

வேறு வழியின்றி தாய், மகள் இருவரும் அணிந்திருந்த காப்பு, சங்கிலி போன்றவற்றைக் கழற்றி கொள்ளையர்களிடம் கொடுத்துள்ளனர்.

ஆனாலும் திருப்திப்படாத கொள்ளையர்கள் மீண்டும் மிரட்டிய போது அலுமாரியில் இருந்த நெக்லஸ்ஸை எடுத்துக் கொடுத்துள்ளனர். அதன் பின்னர் அச்சுறுத்திவிட்டுக் கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை வீட்டினுடைய உரிமையாளரான தந்தையை யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டு மகள், தாய் ஆகியோர் தனிமையில் இருந்தபோதே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொள்ளைச் சம்பவத்தில் இரண்டு சங்கிலி, ஒருசோடி காப்பு, நெக்லஸ் உட்பட 3 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-21)

# விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே 4

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 23 ஆவது வருடாந்த நிகழ்வுகள் இன்று புதன்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறவுள்ளன.

முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் பீடாபதிபதி மிகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன. அதில் இலங்கையின் வடபிராந்தியத்துக்கான கழிவு முகாமைத்துவம் எனும் தலைப்பில் கருத்தரங்கும், தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம், மருத்துவ விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் 43 ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவுள்ளன. மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட இயற்கை விஞ்ஞான விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. சமூக விஞ்ஞானப் பிரிவினரின் கருத்துரைகளும், சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் இறுதி நிகழ்வுகள் பி.ப. 1.30 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவர் கலாநிதி கதிரவேலு தபோதரன் தலைமையில் நடைபெறவுள்ளன. வைத்திய கலாநிதி இராஜேந்திரா சுரேந்திர குமாரன் இளைஞர்களை வலுவூட்டல் எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை மட்ட விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (ற-ஜ-ரி)

# கள்ளியடி கிராமத்தில் ஒரே வீட்டில் இரண்டாவது தடவையாகத் திருட்டு

மன்னார், மே 4

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கள்ளியடி கிராமத்தில் உள்ள வீடொன்றில் இரண்டாவது தடவையாக திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கள்ளியடி கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் மருத்துவத் தேவைக்காக யாழ்ப்பாணம் சென்றிருந்த நிலையிலேயே வீட்டின் பின்புற ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள், பெறுமதியான பொருள்கள், தங்க ஆபரணங்கள், மடிக்கணினி போன்றவற்றைத் திருடியுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

குறித்த வீட்டில் ஏற்கனவே ஒரு தடவை திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த வருடம் கள்ளியடி கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழாவின் போது பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பிரித்தானிய ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ் போன்றன குறித்த வீட்டில் இருந்து திருடப்பட்டன என வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

இவ்வாறு இரண்டு தடவைகள் ஒரே வீட்டில் திருட்டுச் சம்பவம் இடம்பெறுவதற்கு பொலிஸாருடைய அசமந்தப்போக்கே காரணம், முதல் திருட்டின் போது சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து பின்னர் அவரை விடுவித்து விட்டனர்.

தற்போது மீண்டும் திருட்டு இடம்பெற்றுள்ளது. திருடர்களை உடனுக்குடன் கைது செய்து தண்டனைகளை பெற்றுக் கொடுத்தால் இவ்வாறு இரண்டாவது தடவையாகவும் திருட்டுப் போயிருக்கமாட்டாது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தத் திருட்டு சம்பந்தமான விசாரணைகள் இரண்டு பிரிவுகளாக இடம்பெற்று வருகின்றன. ஆனால் இவை ஒன்றும் பொது மக்களுக்குத் தெரியவில்லை இரகசியமான முறையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குற்ற வாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள்-என்று தெரிவித்தனர். (ற-ஜ-21,ரி4,56)

# அத்துமீற முயற்சித்த நபரின் நாக்கை துண்டாடிய மாணவி

கொழும்பு, மே 4

பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றவரின் நாக்கைக் கடித்துக் குதறித் தப்பியுள்ளார் மாணவி ஒருவர்.

துஷ்பிரயோகம் செய்ய முயன்றவர் நாக்கின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்ட நிலையில், குருதி சிந்தச் சிந்த அங்கிருந்து தலைதெறிக்க ஓடியுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு மாவத்தகமவில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து அத்துமீறி நுழைந்த குறித்த நபர் அங்கிருந்த மாணவியைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார். .அந்த நேரம் வாய்க்குள் குறித்த நபரின் நாக்கு அகப்படவே அதனை கடித்து நாக்கின் ஒரு பகுதியை வேறாக்கியுள்ளார் மாணவி.

அதையடுத்து வலி தாங்காது அங்கிருந்து தலை தெறிக்கத் தப்பியோடியுள்ளார் குறித்த நபர். இந்த துணிச்சலான செயலால் குறித்த மாணவி தப்பித்துக் கொண்டுள்ளார்.

அதன் பின்னர் அந்த மாணவி, பெற்றோருக்கு அது பற்றித் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறையிட்டு நாக்குத் துண்டையும் ஒப்படைத்துள்ளனர்.

நாக்கின் ஒருதுண்டை இழந்த நபரை இன்னும் கண்டறியமுடிவில்லை என்று தெரிவித்த பொலிஸார், அந்த நாக்குத்துண்டு வைத்தியசாலையில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# வடக்கில் சீருடையினர் வசமுள்ள காணிகளின் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 4

வடக்கு மாகாணத்தில் முப்படையினர் மற்றும் பொலிஸ் படையினரிடம் உள்ள சகல காணிகளின் விவரங்களும் தொகுக்கப்படவுள்ளன.

வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

வடமாகாணத்தில் தனியாருக்குச் சொந்தமான காணிகள், அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகள், அரசுக்குச் சொந்தமான காணிகள் என மூன்று வகுதிகளின் கீழ் இந்த விவரங்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தில் உள்ள சகல பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபை ஆணையாளர், சபைச் செயலாளர்கள் ஊடாக சகல விவரங்களும் திரட்டப்படவுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அவசர கவனத்துக்கு கொண்டுவரவே மேற்படி விவரங்களை வடக்கு முதல்வர் திரட்டுகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-50)

# கைதான பிரபாவின் மனைவி ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, மே 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பிரபா என்கின்ற கலைநேசன் கைது செய்யப்பட்டமை தொடர்பாக மட்டக்களப்பில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரபா பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதோடு, இன்று செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு ஆதரவாக செயற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் பிரபா கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயில் உள்ள அவரது வீட்டில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில் இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தில் பிரபாவின் மனைவி முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-4)

# சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 4

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் இரண்டாம் தடவையாக ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைப் பிரதி அதிபரின் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், 2018 ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப பிரிவுகள் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிநதியா

நகை மாளிகையின்

அட்ஷய திருதியை

அழைப்பு

09.05.2016 திங்கட்கிழமை

யாழ் நகரில் தன்நிகரில்லா
தங்க ஆபரணங்களின் சாம்ராச்சியம்

09.05.2016
திங்கட்கிழமை





அட்ஷய திருதியை
தினத்தன்று தங்கம்
வாங்கும் அனைவருக்கும்
பெறுமதியான
பரிசுப்பொருள்கள்
வழங்கப்படும்.



கண்கவர்
புத்தம் புதிய
டிசைன்களுக்கு
முந்துங்கள்

**WE CERTIFY KARAT OF GOLD**

வாடிக்கையாளர் நலன்கருதி
கரட்மெசின் மூலம் தரச்சான்றிதழ்
வழங்கி வருகின்றோம்



35 YEARS OF EXCELLENCE

35 வருடங்களுக்கு மேல்
நம்பிக்கை மிக்க
கைராசியான நிறுவனம்

## சிறிநதியா
நகை மாளிகை

இல.01. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
: 021 222 2709
இல.56. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
: 021 222 6744


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டும் வாழ்த்து



**திரு. மாரிமுத்து நவநீதமணி**
(B.A. P.G.DiP.in.Ed.Med- S.L.P.S- 1)

யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் புகழ் பூத்த அதிபராகச் சேவையாற்றி பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டு நியமனம் பெற்ற
**உயர்திரு மா.நவநீதமணி**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புப் பட்டங்களைப் பெற்று நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதைபந்தாட்ட நண்பர்கள்,
வடமராட்சி- பருத்தித்துறை

## CANE HOSPICE

NO.5, Sabapathipillai Road,
Uduvil, Chunnakam

### சமையல் உதவியாளர் தேவை

இந் நிறுவனத்திற்கு உடனடியாக சமையல் உதவியாளர் தேவை. விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

### சுகாதார பராமரிப்பு உதவியாளர் தேவை

இந் நிறுவனத்திற்கு உடனடியாக சுகாதார பராமரிப்பு உதவியாளர் தேவை. விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 12.05.2016**

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
தலைவர், கேன் புற்றுநோயாளர் காப்பகம்.
இல.05, சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில், சுன்னாகம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோப்பாய் தெற்கு. இராச வீதியில் 5 பரப்புக் காணி பாற்பண்ணை வீதிக்கு அருகில் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 431 9812**

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

### சன்றைஸ் மெடி கிளினிக்

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

### றோயல் மெடிக்கல் சென்றர்

454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் உச்சியோடையில் 2 ½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (இ/825)(2.18)

**077 630 5944**

## காசாளர் தேவை (பெண்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றுக்கு காசாளர் தேவை.
தகைமைகள்-
-A/L சித்தியடைந்துள்ளமை
-கணினி பற்றிய அறிவு
-அடிப்படை ஆங்கிலம் தெரிந்திருத்தல் வேண்டும். (திருமணம் ஆகாத 25 வயதுக்குட்பட்டவர்கள்)

**077 713 1594, 077 314 7580**

## தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 29.02.2016 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 07.05.2016ம் திகதி காலை 10.00 மணி முதல் இல.56/22/B, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு ஒத்திவைப்பு

சாவகச்சேரி,மே.4

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு நாளையும், நாளை மறுதினமும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடத்தவிருந்த வலய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளது.

நிகழ்வு நடைபெறும் திகதி பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார்.

(ற-ஐ-9)

## விருந்தோம்பல் பயிற்சிகளுக்கான விண்ணப்பம் கோரல்
## முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் (UNDP) வடமாகாண சபைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஆவண நிபந்தனைகளின் அடிப்படையிலும் மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியிலிருந்தும், வட மாகாண சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பிற்கென, இளைஞர் மற்றும் யுவதிகளை பயிற்றுவிப்பதன் மூலம் விருந்தோம்பல் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் பின்வரும் பயிற்சிகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

1. சமையற்கலை (Cookery)
2. உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல் (Food and Beverages)
3. உறைவிட பராமரிப்பு (House keeping)

**இப்பயிற்சியில் இணையவுள்ள தனிநபர்கள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:**

- இப்பயிற்சியினைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கும் நபர் இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன் இலங்கையின் வட மாகாணத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது வட மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி 30-04-2016 அன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- க.பொ.த (சாதாரண தரம்) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
- மேற்குறிப்பிட்டவற்றுடன் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இதனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்).

**சேவை நிபந்தனைகள்:**

- பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 03 மாதங்களுக்கு முழுநேர பயிற்சி, கொழும்பு அல்லது அனுராதபுரத்தில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ நிறுவனத்தில் (SLITHM), இலவசமாக வழங்கப்படும். தங்குமிடம் மற்றும் உணவுகளும் இலவசமாக வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் சுற்றுலா தங்குமிடங்களில் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- இப்பயிற்சியினை நிறைவு செய்தவர்கள் தொடர்ந்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு வட மாகாணத்தில் பணியாற்ற வேண்டியது கட்டாயமாகும். பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவுடன் தனிநபர் பிணை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது அவசியமாகும். மேலும், பயிற்சியின் போதோ அல்லது கட்டாயக் கடமைக் காலத்தின் போதோ இடைவிலகும் பட்சத்தில் பயிற்சிக்கான மொத்தச் செலவினையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி: **செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.** கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**விருந்தோம்பல் பயிற்சிகளுக்கான விண்ணப்பம்**" எனத்தெளிவாகக் குறிப்பிடுவதுடன் தெரிவு செய்துள்ள பயிற்சி நெறியினையும் குறிப்பிட்டு எதிர்வரும் 17-05-2016 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். மேலதிக தகவல்களுக்கு 021-2057114 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**திருமதி வி.கேதீஸ்வரன்**
**செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை.**
(சி.20977)
(13.18)

## பல்கலைக்கழக அனுமதி 2015/2016

**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் (SUSL)**
**ஸ்ரீ ஜெயவர்தனபுரப் பல்கலைக்கழகம் (USJP)**

கீழ்க் குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்குத் தகுதியுடைய மாணவர்களிடமிருந்து திறனறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பீ.எஸ்.சி (விசேட) விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் (இவ் இரு பல்கலைக்கழகங்களினாலும் வழங்கப்படுகின்றது SUSL & USJP)
2. பீ.எஸ்.சி. (விசேட) உடற்கல்வி (இங்கே மட்டும் வழங்கப்படுகிறது SUSL)

தகுதி காண் திறனறிவுப் பரீட்சை ஆங்கில மொழியில் மட்டும் நடத்தப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இரண்டு பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்படிவத்தினைத் தனித்தனியான முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

பீ.எஸ்.சி (விசேட) விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவப் பட்டப்படிப்புக்கான திறனறிவுப் பரீட்சை.

இவ் இரண்டு பல்கலைக்கழகங்களிலும் ஒரு பொதுவான திறனறிவுப் பரீட்சையே நடத்தப்படும். விண்ணப்பதாரிகள் தங்களுடைய விருப்பத்துக்கேற்ப ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் திறனறிவுப் பரீட்சையில் பங்குபற்றலாம். மாணவர் தெரிவில் எவரும் பாதிக்கப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரிகள் தங்களுடைய விருப்பத்துக்கேற்ப பல்கலைக்கழகத்தினை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்குறிப்பிட்ட இணையத்தளங்களில் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

www.sip.ac.lk ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் (USJP)
www.sab.ac.lk இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் (SUSL)

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 20.05.2016 ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மட்டுமே இரு பல்கலைக்கழகங்களினாலும் அங்கீகரிக்கப்படும்.

தகுதிகாண் திறனறிவுப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை ஆகியன 23 ஆம் திகதி மற்றும் 24.06.2016 ஆம் திகதிகளில் இடம்பெறும். எழுத்துப் பரீட்சை 23 ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் 11 மணிவரையும் பி.எஸ்.சி (விசேட) உடற்கல்வி 11.30 மணி தொடக்கம் ஒரு மணி வரையும் இடம்பெறும். உடல் திறன்மதிப்பிடும் பரீட்சை 23ஆம் திகதி மதியம் தொடக்கம் 24ஆம் திகதி முழுவதுமாக இடம்பெறும்.

குறிப்பிட்ட அனுமதிப்பத்திரம் பரீட்சார்த்திக்குத் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும். அனுப்பி வைக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினைப் பரீட்சார்த்தி கட்டாயமாகப் பரீட்சைக்கு எடுத்துவர வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகுதி உடைய விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார். மேலதிக தகவல்களைப் பல்கலைக்கழகங்களின் இணையத்தளங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
(சி/20628)
(11.18)

| | |
|---|---|
| **பதிவாளர், ஸ்ரீ ஜெயவர்தனபுரப் பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகயகொட.** | **பதிவாளர், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் பெலிகுலோயா** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் சட்ட வரைவில் அரசமைப்பை மீறும் 5 சரத்துக்கள்

## நாடாளுமன்றுக்கு அறிவித்தது உயர் நீதிமன்றம்

கொழும்பு, மே 4
தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைவில் 5 வாசகங்கள் அரசமைப்பை மீறுவதனால், அந்தச் சட்டத்தை உரிய திருத்தங்களின்றி நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை நேற்றுச் சபையில் அறிவித்தார் சபாநாயகர் கரு ஜயசூரிய.

தகவல் அறியும் உரிமைக்கான சட்டம் தொடர்பில், தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள் மனுக்களை ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்துள்ள தமது தீர்மானத்திலேயே உயர் நீதிமன்றம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

அரசமைப்பின் 121 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்ட தகவல் அறியும் உரிமைக்கான சட்ட வரைவு தொடர்பாக உயர் நீதிமன்றத் தீர்மானத்தில் சில விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புடன் முரண்படுகின்றன. எனவே அந்த விடயங்களை நிறைவேற்றுவதாக இருந்தால், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடனேயே நிறைவேற்ற முடியும் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

எனினும், உயர் நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டுள்ள மேற்படி வாசகங்கள் திருத்தப்படுமாயின், மேற்குறிப்பிட்ட முரண்பாடுகள் நீங்குவதனால், சட்ட வரைவு சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படலாம் எனவும் உயர்நீதிமன்றம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-வ-5)

## மோதல்

சட்டத்தை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை சபாநாயகரால் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதிச் சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார். சபைக்குள் இரத்தம் சிந்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்டமை குறித்துக் கவலையடைவதுடன், உறுப்பினர்களின் நடவடிக்கைகளைக் கண்டிப்பதாகவும் திலங்க சுமதிபால சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மக்களின் நலன் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் கௌரவம் மிக்க, அபிமானமுடைய நிறுவனத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருப்பது கவலையளிக்கின்றது.

நாடாளுமன்றத்தின் நிலையியல் கட்டளைச் சட்டங்களை மீறிப் பல உறுப்பினர்கள் நடந்துள்ளனர். குழப்பம் நடைபெற்ற சமயத்தில் பதிவான ஒலி மற்றும் வீடியோ பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு நானும், குழுக்களின் பிரதித் தலைவரும், படைக்கல சேவிதரின் உதவியுடன் விசாரணைகளை நடத்துகின்றோம்.

இந்த விசாரணை அறிக்கை இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் சபாநாயகரிடம் கையளிக்கப்படும்.

இன்றைய தினம் விசேட கட்சித் தலைவர் கள் கூட்டம் கூட்டப்பட்டு அதிலும் இதுபற்றி ஆராயப்படும்.

நாடாளுமன்றத்தில் முறையாக நடந்து கொள்ளாத உறுப்பினர்கள் பற்றி சம்பந்தப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் முடிவெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவையொன்றைத் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், உறுப்பினர்களுக்கிடையில் மோதல் சபைக்குள் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் சண்டையுடன் தொடர்புபட்ட மேலும் சிலருக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளன - என்றார். (த-வ-5)

## 200 பொலிஸார்


அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சபையில் சரத் பொன்சேகா விளக்கமளித்தார்.

இதன்போது அவர் தனது உரையில்,
போரை முடிவுக்குக் கொண்டு வந்த எனக்குத் தற்போது 15 பொலிஸாரே பாதுகாப்பு வழங்குகின்றனர். மகிந்தவுக்கு 200 பொலிஸார் பாதுகாப்பு வழங்குகின்றனர். இந்தப் பொலிஸ் பாதுகாப்பு அவருக்குப் போதுமானது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, எனது பாதுகாப்பு குறைக்கப்பட்டது. அது மட்டுமன்றி 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடனும் எனது பாதுகாப்பு மேலும் நீக்கப்பட்டது. தனக்குப் பாதுகாப்புத் தேவையாயின், அதை அவரே கோரவேண்டும். அதை விடுத்து சுற்றியுள்ளவர் களை வைத்து பாதுகாப்பைப் கோரமுடியாது - என்றார். (த-வ-5)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**அன்னக்கொடிதேவர் பார்த்தீபன்**



(வேல் மிக்சர் உரிமையாளர்- கொக்குவில்)
திதி: துவாதசி (04.05.2016)

பாசம் மிக்க மகனாக அன்பு
நிறைந்த கணவனாக
வழிகாட்டிய தந்தையாக வாழ
வைத்த சகோதரனாக
மதிப்பு மிக்க உறவினனாக
மரியாதைக்குரிய நண்பனாக
எல்லோருக்கும் எல்லாமுமாய்
வாழ்ந்த எங்கள் குல விளக்கே!
புன்னகைக்கும் உம் வதன முகம்
காணாமல் கலங்குகின்றோம்.
என்றும் உங்கள் நினைவு
சுமந்து வாழும் பாசமிகு
குடும்பத்தினர்.

மண்ணில்
30.10.1960
விண்ணில்
16.04.2015

57, கே.கே.எஸ். றோட,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **கதிரேசு கந்தையா**
(ஓய்வுபெற்ற அதிபர்)
திதி: அபரபக்க திரயோதசி (04.05.2016)



பிறப்பு
19.12.1929
இறப்பு
01.05.2011

அற்புதமான சொல் எங்கள் அப்பா
அனைத்துக்கும் ஆதாரம் எங்கள் அப்பா
உங்கள் வழிகாட்டல்கள்
காலத்தால் அழியாத கல்வெட்டுக்கள்
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்

"கமலவாசா"
கந்தரோடை, சுன்னாகம்.
குடும்பத்தினர்.

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.02.1931
மறைவு
19.04.2012

அமரர் **சேதுகாவலர் சங்கரப்பிள்ளை**
(முன்னாள் சிறிகாந்தா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் – கைதடிச் சந்தி)

எங்கள் தெய்வமே அப்பா
நான்கு ஆண்டுகள் பறந்து சென்றாலும்
உங்கள் திருமுகத்தை மறக்க முடியவில்லை அப்பா !
உங்களை நினைத்து மலர்களால் பூசிக்கின்றோம் அப்பா !
வேறு வழி தெரியாமல் தவிக்கின்றோம்
நீங்கள் சென்ற பாதையைக் காட்டுங்கள்
நாங்களும் தொடர்வதற்கு
நீங்கள் இல்லாத மனை பொலிவிழந்து போனதப்பா !
காலங்கள் மாறலாம் ஆனாலும்
எங்கள் முன்னே நிழலாடும்
உங்கள் நினைவுகள் ஒருபோதும்
எம்மை விட்டகலாதப்பா

கைதடி கிழக்கு,
கைதடி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
13 . 08 . 1930
உதிர்வு
04 . 04 . 2016


**அமரர் தங்கம்மா நாகரத்தினம்**

கடந்த 04.04.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி தங்கம்மா நாகரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று(04.05.2016) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி, கோப்பாய்
மத்தி, கோப்பாய்.
(70252)
(12.17.20)
குடும்பத்தினர்.
077 079 0454

### 45 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
30.05.1948
மறைவு
24.03.2016



கடந்த 24.03.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் இராமன் குணம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (05.05.2016) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 07.05.2016 சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

24, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
(வே/914) (11.18)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. மாவட்டத்தின் 13 வீதிகள் ரூ.70 மில்லியனில் புனரமைப்பு

## வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, மே 4

70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட 13 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா பாவற்குளம் 2 ஆம் யூனிற் நெளுக்குளம் வீதி, புனரமைப்பின் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. அவற்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி நன்கொடை மற்றும் பராமரிப்பு ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 70 மில்லியன் ரூபா நிதி, வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான 13 வீதிகளை புனரமைப்பதற்கு செலவிடப்படவுள்ளது. - என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபையின் உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், அந்தப் பகுதி மக்களது நலனைக் கருத்தில் கொண் டும் வவுனியா மாவட்ட செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாவற்குளம் 2 ஆம் யூனிற் நெளுக்குளம் வீதி 6 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் தற்போது புனரமைப்பு செய்யப் படவுள்ளது.

அத்தோடு கல்நாட்டியகுளம் ஆசிகுளம் வீதி - 4 மில்லியன் ரூபா, பிரமனாலங்குளம் பரப்புக்கடந்தான் வீதி - 6 மில்லியன் ரூபா, பூவரசங்குளம் துணுக்காய் வீதி - 4 மில்லியன் ரூபா, நெடுங்கேணி கூளாங்குளம் வீதி - 4 மில்லியன் ரூபா, பூவரசங்குளம் செட்டிகுளம் வீதி - 10 மில்லியன் ரூபா, ஓமந்தை இளமருதங்குளம் வீதி - 4 மில்லியன் ரூபா, பாவற்குளம் 2 ஆம் யூனிற் நெளுக்குளம் வீதி - 6 மில்லியன் ரூபா, பள்ளமோட்டை மூன்றுமுறிப்பு வீதி - 3.5 மில்லியன் ரூபா, மணியர்குளம் பிரப்பமடு வீதி - 6 மில்லியன் ரூபா, கந்தபுரம் இராசேந்திரன்குளம் வீதி - 2 மில்லியன் ரூபா, ஒலுமடு மரைக்காரம்பளை வீதி கல்வெட்டு - 3 மில்லியன் ரூபா, புத்தூர் பாலமோட்டை வீதி கல்வெட்டு 1 - 2 மில்லியன் ரூபா, புத்தூர் கோவில் வீதி 2 - 3.18 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுகளில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.- என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியா பாவற்குளத்தில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் முகமாக மீன் குஞ்சுகள் இந்த ஆண்டு வைப்பிலிட்டுத் தரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், வீதி அபிவிருத்தித் திணைக்கள மன்னார் வவுனியா மாவட்ட பிரதம பொறியியலாளர் ரகுநாதன், வவுனியா மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ் மற்றும் அக்கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஜ-21)

### பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் மன்றத்தின் தலைவர் கலாபூஷணம் க.ஐயம்பிள்ளை தலைமையில் கடந்தஞாயிற்றுகிழமைவவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெற்றன.

இதன் போது மன்றின் தலைவராக கலாபூணம் க.ஐயம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டதுடன் ஏனையநிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் மன்றத்தின் சைவத் தமிழ் மற்றும் சமூகப் பணியை மேலும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் இளைஞர்களின் பிரதிநிதித்துவமாக பாலச்சந்திரன் சிந்துஜன் தலைமையிலான வவுனியா கலைமகள் நற்பணி மன்றத்தினர், சேக்கிழார் மன்றத்துடன் இணைந்து கொண்டனர். (ற-ஜ-21)

### பாம்பு தீண்டிய குடும்பஸ்தர் சிகிச்சையில்

சாவகச்சேரி, மே.4

குளத்தில் போடப்பட்டிருந்த மீன்பிடி வலையை எடுக்கச் சென்ற குடும்பஸ்தரைப்பாம்புதீண்டியுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மிருசுவில் பழைய வாய்க்காலில் இடம் பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள குளங்களில் மீன் பிடிக்கும் 43வயதுக்குடும்பஸ்தர்முதல் நாள் மாலையில் குளத்தில் போடப்பட்டிருந்த வலையை எடுக்கச் சென்ற வேளையிலேயே பாம்பு தீண்டி சிகிச்சை பெறுகிறார் என தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-9)

# கூட்டுறவுப் பணியாளர் சம்பள உயர்வு குறித்துப் பரிசீலனை

## வடக்கு கூட்டுறவு அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 4

வடக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர்களுக்கான, இருபது வீத சம்பள உயர்வு குறித்து, தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றது என்று மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கூட்டுறவாளர்களால் நடத்தப்பட்ட மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் மே தினத்தை முன்னிட்டு கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்தது.

இதில் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இருபது சதவீத, சம்பள அதிகரிப்பை மேற் கொள்ள வேண்டும் என்ற முக்கிய கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தனர்.

இந்த இருபது சதவீத சம்பள அதிகரிப்புத் தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்தாலோசித்து, விரைவில் இதற்கு ஒரு சாதகமான முடிவை அறிவிப்பேன்.

அத்துடன் வடக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய கொடுப்பனவுகள் யாவும் உரிய நேரத்தில் வழங்கப்படும்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தால் முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் கூட்டுறவுத் துறையினருடன் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் யாவும் கூட்டுறவுத் துறைக்கு நன்மையானவையாகப் பயனளிக்கக் கூடியதாக இருப்பதால் அவை பரிசீலிக்கப்படும்.- என்றார். (ற-ஜ-17)

# பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் 2 வீதிகள் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே 4

இத்தாவில் முருகமூர்த்தி கோயில் வீதி, கரந்தாய் பிரதான வீதி ஆகிய இரு வீதிகளும் சுமார் 40 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பச்சிலைப்பள்ளி பிரதேசசபைச் செயலாளர் மேற் கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள இத்தாவில் முருகமூர்த்தி கோயில் வீதி, கரந்தாய் பிரதான வீதி ஆகிய இரு வீதிகளும் போர்காலச் சூழ்நிலையால் பயணம் மேற்கொள்ள முடியாதவாறு சேதமடைந்துள்ளன.

இந்தப் பிரதேசத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் மேற்படி இரு வீதிகளினதும், நிலைப்பாடு குறித்து பிரதேச சபை செயலாளருக்குச் சுட்டிக் காட்டியிருந்தனர். இரு வீதிகளையும் மக்களின் வசதி கருதி விரைவாகப் புனரமைத்துத் தருமாறும் கோரியிருந்தனர்.

மக்களின் கோரிக்கையை அடுத்து வீதிகளைப் புனரமைக்க முன்வந்துள்ள செயலாளர் இத்தாவில் முருகமூர்த்தி கோயில் வீதியை "நெல்சிப்" திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா செலவிலும், கரந்தாய் பிரதான [illegible] 20 லட்சம் [illegible] செலவிலும் புனரமைப்பதற்கான நடவடிக்கையை மேற் கொண்டுள்ளார். (ற-ஜ-115)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் சாலைப் பணியாளர்கள் வியாழனன்று பணிப் புறக்கணிப்பு

மன்னார்,மே.4

மன்னார் சாலைக்கு தனியான கணக்காளர் காரியாலயத்தை இயங்க வைக்கு மாறும், தகுதியான கணக்காளர் ஒருவரை நியமிக்குமாறும் கோரி இலங்கை அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலைப் பணியாளர்கள் நாளை வியாழக்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனுக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது–

இலங்கை அரச போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலையில் 300க்கும் அதிகமானவர்கள் கடமையாற்றுகின்றனர். மன்னார் சாலையில் 40 பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

எமது சாலையில் கடமையாற்றுகின்ற தொழிலாளர்கள் பலர் வெளி மாவட்டங்களில் இருந்து மன்னாருக்கு வந்து தங்கி நின்று கடமையாற்றுகின்றனர். எமது சாலைக்கு உரிய காணக்காளர் காரியாலயம் நீண்ட காலமாக வவுனியாவில் இயங்கி வருகின்றது. இதன் காரணமாக தொழிலாளர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கணக்காளர் காரியாலயம் வவுனியாவில் இயங்கி வருவதால் நாளாந்தம் மன்னார் சாலையில் இருந்து 4 அல்லது 5 தொழிலாளர்கள் தங்களது சொந்த விடுமுறையில் – தங்களது சம்பள விவரங்கள், கடன் விவரங்கள், விடுமுறை தொடர்பான பிரச்சினைகள், மேலதிக நேரக்கொடுப்பனவு

> “எமது காப்பாளர்களின் வழிப்பட்டியல்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் அனைத்துக்குமான கணக்காளர் காரியாலயம் வவுனியாவில் இயங்கி வருவதால், மூன்று மாதங்கள் தாமதமாகவே பரிசோதனைகள் செய்யப்பட்டு எமது காப்பாளர்களுக்கு தெரியப் படுத்தப்பட்டு வருகின்றன.”

சம்பந்தமான பிரச்சினைகள் என சகல விடயங்களுக்கும் வவுனியா சென்று வர வேண்டியுள்ளது.

இதனால் தொழிலாளர்களின் விடுமுறைகள் வீணாகுவதுடன் அவர்கள் மனப்பாதிப்புக்கும் உள்ளாகி வருகின்றனர்.

எமது காப்பாளர்களின் வழிப்பட்டியல்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் அனைத்துக்குமான கணக்காளர் காரியாலயம் வவுனியாவில் இயங்கி வருவதால், மூன்று மாதங்கள் தாமதமாகவே பரிசோதனைகள் செய்யப்பட்டு எமது காப்பாளர்களுக்கு தெரியப் படுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக காப்பாளர்களால் விடப்படும் தவறுகள் திருத்திக் கொள்ள வாய்ப்பு இல்லாமல் போவதோடு, பல காப்பாளர்கள் வேலை இழக்கவும் நேரிடுகின்றது.

சாரதி, காப்பாளர் உட்பட அனைத்துத் தொழிலாளர்களினதும் தேவைகள், பிரச்சினைகள் உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு, தொழிலாளர்கள் தங்களது கடமையை திறமையாக செய்து சாலைக்கு வருமானத்தை அதிக அளவில் ஈட்டித் தருவதற்கு கணக்காளர் காரியாலயம் மன்னார் சாலையினுள் இருக்க வேண்டியது அவசியமானது.

மன்னார் சாலைக்குதனியானதொரு கணக்காளர் காரியாலயத்தை இயங்க வைக்கக் கோரியும், தகுதியான கணக்காளர் ஒருவரை நியமிக்கக் கோரியுமே நாளை வியாழக்கிழமை முதல் மன்னார் சாலைப் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித் துள்ளோம்.– என்றனர். (ற–ஜ–21,56)

## மின் ஒழுக்கால் வீடு எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், மே.4

வீட்டில் எவருமில்லாத நேரம் ஏற்பட்ட மின் ஒழுக்கால், வீடு எரிந்து நாசமாகியதோடு மோட்டார் சைக்கிள்கள் உட்படப் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் எரிந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உறுதிகள் உட்பட வீட்டிலிருந்த அனைத்துப் பொருள்களும் எரிந்து நாசமாகிய நிலையில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மல்லாகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 அளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் வேலை நிமித்தம் வெளியே சென்றுவிட்டனர். இந்த நிலையில் வீட்டில் தீ பற்றிக்கொண்டுள்ளது. இதற்கு மின் ஒழுக்கே காரணம் என்று கூறப்படுகின்றது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

தீ பற்றிக் கொண்ட நேரம் வீட்டில் இருந்த 2 மோட்டார் சைக்கிள்கள், 3 சைக்கிள்கள், உடைகள், வீட்டு உறுதி உள்ளிட்ட ஆவணங்கள், மேசை, கதிரை எனப் பல பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன. வீட்டுக்குள் பற்றிக் கொண்ட தீ, வீட்டுக்கு மேலாக சுவாலையாக எரிந்த போதே அயல் வீட்டுக்காரர்கள் அதனைக் கண்டுள்ளனர். தீ பற்றி எரிகின்றமை தொடர்பில் பொலிஸாருக்குத்தகவல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொலிஸாரும், பிரதேச சபையினரும் தண்ணீர் பவுசர்கள் மூலமாகத் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.



தீயணைப்புப் பிரிவினரும் அங்கு அழைக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு தீ அணைக்கப்பட முன்னரே குறித்த பொருள்களும், வீட்டு மரங்களும் எரிந்து விட்டன.

அதனால் அவை வீட்டின் மேற்புறத்திலிருந்து கீழே விழுந்ததோடு வீட்டின் ஓடுகளும் கீழே விழுந்து உடைந்து நாசமாகியுள்ளன.

இதன் இழப்பு பல லட்சங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற–ஜ–4)


# இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடத்தும்
# இயல், இசை நாடக அரங்கு - 2016
## 04.05.2016 முதலாம் நாள் புதன்கிழமை

தலைவர்
**திரு. இ. சர்வேஸ்வரா**
(உதவிப் பதிவாளர் – யாழ்.பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்
**பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை**
(மேனாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்)

- நாச்சிமார் கோயிலடி சபேசன் குழுவினர் வழங்கும்

மங்கல இசை

| நாதஸ்வரம் | தவில் |
| --- | --- |
| திரு.ம.சபேசன் | திரு.கே.முரளி |
| திரு.எஸ். ஞானேந்திரன் | திரு.என்.கிருஷ்ணன் |

- மங்கல விளக்கேற்றல்
- திருமுறை :– செல்வன் சி. சிவாம்சன், செல்வன் சி.கோபிறாம், செல்வன் சி.மனாமிருதன், செல்வன் நி.லக்சன் (சாரங்கா இசை மன்றம்)
- ஆசியுரை :– தேவ சிவாகம ஞான பாஸ்கரன், சிவஸ்ரீ. தா.மகாதேவக் குருக்கள்
- வாழ்த்துரை :– சொல்லின் செல்வன் திரு.இரா.செல்வவடிவேல்
- தலைமையுரை :– தலைவர்
- சைவவித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனம்.
  - நட்டுவாங்கம் :– திருமதி யாழினி ரதீஸ்வரன்
  - பாட்டு :– செல்வி ர.அறிவழகி, செல்வி சி.கோகிலமதி
  - வயலின் :– திருமதி இந்துமதி தயாபரன்
  - மிருதங்கம் :– திரு.கே.சிவகுமார்.
- காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் வழங்கும் பண்ணிசைக் கச்சேரி
  - பாட்டு :– செல்வி சித்திரா கந்தசாமி
  - வயலின் :– திரு.கி.பத்மநாதன்
  - மிருதங்கம் :– திரு.என்.சதீஸ்குமார்
- ஆர்மோனியக் கச்சேரி
  - ஆர்மோனியம் :– திரு.தவநாதன் றொபேட்
  - மிருதங்கம் :– திரு.க.கஜன்
  - கெஞ்சிரா :– திரு.சிவசுந்தர சர்மா
  - முகர்சிங் :– திரு.சி.செந்தூரன்
- காரைநகர் இந்துக் கல்லூரி மாணவிகள் வழங்கும் நடன சமர்ப்பணம்
  - நட்டுவாங்கம் :– திருமதி பே.சந்திரதாஸன், திருமதி அ.ராஜ்குமார்
  - பாட்டு :– திருமதி பங்கயற்செல்வி முகுந்தன், திருமதி க.றொபேசன்
  - வயலின் :– திரு.கா.குகபரன்
  - மிருதங்கம் :– திரு.க.நந்தகுமார்
- கலைஞர்கள் கௌரவிப்பு
- பிரதம விருந்தினர் உரை
- நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் மயான காண்டம் [illegible]
- நன்றியுரை

அனுசரணை: அன்பொளி கல்வி நிலையம்

(க/20968) (11,17,18)


## நகைகளைப் புதைத்த கிணற்றை தோண்டும் பணிகள் மீள ஆரம்பம்

மாங்குளம், மே 4

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வைப்பகத்தின் நகைகள் அடங்கிய இரும்புப் பெட்டகம் புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் கிணற்றைத் தோண்டும் இரண்டாம் கட்டம் நேற்று பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழீழ வைப்பகம் அமைந்திருந்த பிரதேசத்திலுள்ள ஓர் கிணற்றினுள், நகைகள் போடப்பட்டு மூடப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலின் பிரகாரம் பொலிஸாரினால் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு கடந்த வாரம் இரு நாட்களாகத் தோண்டப்பட்டது. இருப்பினும் குறித்த பிரதேசத்தை தோண்டுவதற்காகப் பயன்படுத்திய பைக்கோ ரக வாகனத்தின் துலா நீளம் போதாமையினால் அதன் மூலம் அதிக தூரம் தோண்டிச் சோதனை இட முடியாத காரணத்தினால், தேடும் படலம் இடை நிறுத்தப்பட்டு பொலிஸாரின் பாதுகாப்புப் போடப்பட்டது.

நேற்றறைய தினம் பெரியளவிலான பைக்கோ இயந்திரம் ஒன்று கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டு கிணற்றைத் தோண்டும் படலம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.



இந்தப் பணி ஆரம்பிக்கப்படும்போது முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி , பொலிசார் , பிரதேச செயலாளர் , கிராமசேவகர், இராணுவத்தினர் . பௌத்த மதகுரு ஆகியோர் அங்கு சமூகமாகியிருந்தனர்.

இவ்வாறு நேற்றைய தினம் தோண்டப்பட்ட பிரதேசத்தில் நேற்று இரவு வரையும் அந்த இடத்தில் இருந்த கிணறு மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளது. இரவானதும் பணிகள் நிறுத்தப்பட்டு பொலிஸாரின் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இதன் பணிகள் இன்று காலையில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், கிணற்றின் நீர்ப் பிரதேசத்தையும் நெருங்கியுள்ளதனால், இன்றைய பணியை அனைவரும் மிக ஆர்வமாக எதிர் பார்த்துள்ளதுடன், நகைப்பெட்டி மீட்கப்படுமா எனவும் எதிர்பார்த்துள்ளனர். (வ–101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவு வழங்கிய தமிழர்களுக்கு இன்னமும் தீர்வில்லை

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

கிளிநொச்சி,மே 4

ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவு வழங்கிய தமிழர்களுக்கு, 15 மாதங்கள் கடந்த நிலையிலும் தீர்வில்லை. தமிழர்களுடைய அடிப்படைப்பிரச்சினைகளுக்கே இன்னமும்தீர்வுபெற்றுக்கொடுக்காமல் இந்த அரசு உள்ளது - இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டை ஆட்சி செய்த இரு பேரினவாதக் கட்சிகளும் எங்களைப் போரால் மட்டும் அழிக்காமல், பொருளாதார ரீதியாகவும் நசிக்கியுள்ளன. குறிப்பாக ஆயிரக்கணக்கான விவசாயக் காணிகள் இன்னமும் இராணுவத்தினர் வசம் உள்ளன. அத்தோடு திட்டமிட்ட விதத்தில் மேற்கொள்ளப்படும் தென்பகுதி மற்றும் இந்திய மீனவர்களின் கடல் வளச் சுரண்டல் போன்றவை முக்கியமானவை.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனத் தெரிவிக்கும் இந்த அரசு, ஒரு சில காணிகளை மாத்திரம் இதுவரை விடுவித்துள்ளது. சிறைக் கைதிக்ளை விடுவிக்காமை, காணாமல் போனோர் தொடர்பாக சரியான தீர்வு பெற்றுக்கொடுக்காமை, போன்றவற்றை வைத்து நோக்கும் போது இந்த அரசு எதனை நோக்கிச் செல்கின்றது எனத் தெளிவாகப் புரிகின்றது.

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

(ற-ஜ-ரி3)

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
# முல்லைத்தீவு
## பெறுகைக்கான அழைப்பு
## மருத்துவ உபகரணப் பொருள்கள் வழங்கல் - 2016/17

வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழு தலைவர் தகுதியான், தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| Reference No | Description | Qty | Bid Security | Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|---|---|---|---|
| HSDP II & PSDG/2016/01 | Dressing Trolley | 03 | 10,000.00 | HSDP II & PSDG/2016/06 | Suction apparatus | 06 | 10,000.00 |
| | Drug Trolley | 05 | | | Ultrasonic Nebulizer | 01 | |
| | Emergency Trolley | 01 | | HSDP II & PSDG/2016/07 | Baby warmer | 01 | 10,000.00 |
| | Instrument Trolley | 01 | | | X-ray illuminator | 02 | |
| | Over bed Trolley | 01 | | | Infant weighing scale | 01 | |
| | Ward Round Trolley | 01 | | | Wighing scale bath room type | 11 | |
| | Patient Trolley | 03 | | | Mobile OT Lamp | 01 | |
| | Wheel Chair | 03 | | HSDP II & PSDG/2016/08 | Examination bed | 04 | 10,000.00 |
| HSDP II & PSDG/2016/02 | Injection Trolley | 17 | 10,000.00 | | Preparation bed | 02 | |
| | Folding screen | 03 | | | Labour bed | 01 | |
| | IV Stand | 11 | | | Stainless steel baby cots | 04 | |
| | Oxygen cylinder stand | 02 | | | Macintosh | 20 | |
| HSDP II & PSDG/2016/03 | BP Apparatus LCD | 14 | 10,000.00 | HSDP II & PSDG/2016/09 | Infusion pump | 06 | 10,000.00 |
| | BP Apparatus Digital | 10 | | | Pulse oxymeter | 01 | |
| | Digital Thermometer | 15 | | HSDP II & PSDG/2016/10 | Syringe pump | 08 | 10,000.00 |
| | Neonatal Stethoscope | 02 | | HSDP II & PSDG/2016/11 | Spirit Lamp | 65 | 10,000.00 |
| | Peak flow meter | 21 | | HSDP II & PSDG/2016/12 | Spot light | 09 | 10,000.00 |
| | Laryngoscope (adult & Pae) | 01 | | HSDP II & PSDG/2016/13 | ECG Machine | 05 | 10,000.00 |
| | Neonatal laryngoscope | 01 | | HSDP II & PSDG/2016/14 | Fluid Warmer | 03 | 10,000.00 |
| HSDP II & PSDG/2016/04 | Dental hand piece | 01 | 2,000.00 | HSDP II & PSDG/2016/15 | Haematology Analyser | 01 | 10,000.00 |
| | Light curing machine | 01 | | HSDP II & PSDG/2016/16 | Lithotomy bed | 05 | 10,000.00 |
| | Scaler set | 01 | | HSDP II & PSDG/2016/17 | Multipara monitor (Basic) | 04 | 10,000.00 |
| HSDP II & PSDG/2016/05 | Electric Steriliser | 02 | 10,000.00 | HSDP II & PSDG/2016/18 | Low beds (Postnatal) | 05 | 10,000.00 |
| | Hand hold Doppler | 03 | | HSDP II & PSDG/2016/19 | ETU Bed | 03 | 10,000.00 |
| | Ophthalmoscope | 02 | | HSDP II & PSDG/2016/20 | High dependency bed adjustable | 02 | 10,000.00 |
| | Silver Drum | 20 | | HSDP II & PSDG/2016/21 | Photo therapy Unit double | 01 | 10,000.00 |
| | | | | HSDP II & PSDG/2016/22 | Photo therapy Unit single | 02 | 10,000.00 |

- ❖ விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருள்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- ❖ ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- ❖ நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் “Application for Bid documents” என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிளக்கப்படாத பெறுகைக் கட்டணமாக **ரூபா 200/=** காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **04.05.2016**தொடக்கம் **24.05.2016**வரையான காலப்பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை (**12.30** தொடக்கம் **13.30** மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ விலைக்கேள்விகள் **25.05.2016ஆந்** திகதி **10.00** மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் . அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
- ❖ தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
- ❖ கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி. த. பூங்கோதை**
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக நிறுவனங்களுக்கு முன்னர் கடும் அழுத்தங்கள் காணப்பட்டன

## தற்போது அதுபோல் இல்லை என்கிறார் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக

கொழும்பு, மே 4
ஒரு காலகட்டத்தில் ஊடக நிறுவனங்களுக்குக் கடுமையான அழுத்தங்கள் இருந்தன. அன்று பத்திரிகைகளின் செய்தித் தலைப்புக்கள் கூட, அலரி மாளிகையில் வைத்து மாற்றப்பட்டன. இன்று அது போன்று நடக்கிறதா?.- இவ்வாறு பொதுசன ஊடகத்துறை அமைச்சரான கயந்த கருணாதிலக்க ஊடகவியலாளர்களிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி கண்டி மல்வத்தை விகாரைக்குச் சென்ற அமைச்சர், மல்வத்தை மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டதன் பின்னர், வருகை தந்திருந்த ஊடகவியலாளர்கள் முன்னிலையில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமது எதிர்காலச் செயற்பாடுகளுக்கு மகாநாயக்க தேரர் ஆசி வழங்கியுள்ளார். இன்று ஊடகங்களுக்குக் கிட்டியுள்ள சுதந்திரம் மற்றும் ஊடகச் செயற்பாடுகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் பற்றியும், அவர் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார். இலத்திரனியல் ஊடகங்கள் வழிநடத்தப்பட வேண்டியுள்ளமை தொடர்பிலும் பெருமளவிலானோர் சுட்டிக் காட்டியிருந்தனர்.



நாட்டின் நலனுக்கும், மக்களின் நலனுக்கும் உதவும் விதமாக ஊடக நிறுவனங்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றே நாம் ஏதேனுமொரு இணக்கப் பாட்டுக்கு வருகிறோம். அந்த வகையிலே ஏனையோரினதும் கருத்துக்களைப் பெற்றே நாம் செயற்படுகிறோம்.

தகவல் அறியும் உரிமையைப் பற்றிப் பேசுவதானால், கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்களுக்கு இந்த விடயங்கள் வேப்பங்காயாகக் கசந்தன. இதனை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதாக நாம் ஏற்கனவே வாக்குறுதி வழங்கியிருந்தமைக்கு அமைய செயற்பட்டோம்.

ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் கருத்துக்களைப் பெற்று முன்வைப்பதற்காகச் செயற்படுவோம்.

கடந்த காலத்தில் ஊடக நிறுவனங்களுக்கு எந்தஅளவுக்கு அழுத்தங்கள் வழங்கப் பட்டிருந்தன என்பதும், இன்று ஊடகவியலாளர்களுக்கு எந்தவிதமான அழுத்தங்களும் இல்லையென்பதும், அவர்களுக்கு முழுமையான சுதந்திரம் கிட்டியுள்ளது என்பதும் உண்மை. அந்தச் சுதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தி மக்களின் நலனுக்காக அவர்கள் செயலாற்ற வேண்டியுள்ளது. - என்றார்.

(ற-ஐ-ரி2,22)

## சராசரி உற்பத்தி வீதம் அதிகரிப்பு

கொழும்பு, மே 4
நடப்பாண்டின் சராசரி தேசிய உற்பத்தியானது நூற்றுக்கு 4.8 வீதத்தில் இருந்து நூற்றுக்கு 5.8 வீதம் வரையில் வளர்ச்சி கண்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் வருடாந்த பணவீக்கத்தை 4 வீதம் என்ற மட்டத் தில் வைத்துக் கொள்வதற்காக செயலாற்றவுள்ளோம் என்று மத்திய வங்கி ஆளுநர் அர் ஜுன் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி 2016 ஆம் ஆண்டின் ஆகப் பிந்திய வருடாந்த அறிக்கையை கடந்த 26 ஆம் திகதி வெளியிட்டிருந்தது. (ற-ஐ-ரி2,22)

## இயல் இசை நாடக அரங்கு

யாழ்ப்பாணம், மே.4
இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கு இன்று புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து 5 நாள்கள் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் தினமும் மாலை 4.30மணிக்கு நடைபெறவுள்ளது என கலைக் கல்லூரியினர் தெரிவித்துள்ளனர்.

முதல் நாள் நிகழ்வு இன்று புதன் கிழமை யாழ். பல்லைக்கழக உதவிப் பதிவாளர் இ.சர் வேஸ்வரா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர்,முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலா சாலை விரிவுரையாளர் அ.பௌநந்தி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ் வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல் கள் விளை யாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் க.குருகுலராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

மூன்றாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலா சாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை தலைவர், முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார்.

நான்காம் நாள் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.ஐங்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் சி.ஜெயசங்கர் கலந்து கொள்ளவுள்ளார்.

ஐந்தாம் நாள் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு. பாலசண்முகன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் ஏ.நடராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(ற-ஐ-ரி)

## கடந்த 4 மாதங்களில் 936 பேர் விபத்தில் சாவு

கொழும்பு, மே 4
கடந்த 4 மாதங்களில் விபத்தில் 936 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மிக அதிகம் என்றும் வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருடத்தின் இது வரையான காலப் பகுதியில் வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் விபத்துக்களினாலேயே, அதிக உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. ஓட்டோவில் பயணித்தவர்கள் மற்றும் பாதசாரிகள் விபத்துக்களில் அதிகமாக உயிரிழந்துள்ளனர். கவனவீனமாக வாகனம் செலுத்துகின்றமை மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துவதனாலேயே அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று வீதி பாதுகாப்புக்கான தேசிய சபையின் செயலாளர் சிசிர கோத்தாகொட தெரிவித்துள்ளார். (ற-ஐ-4)

## அதி வேக நெடுஞ்சாலைகளில் மே தினத்தன்று ரூ.20 மில். இழப்பு

கொழும்பு, மே 4
கடந்த முதலாம் திகதி அதிவேக நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்களுக்கு கட்டணங்கள் அறவீடு செய்யப்படவில்லை. அதனால் 20 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர் தினத்தில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 61 ஆயிரத்து 583 வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன. அதில் 6 ஆயிரத்து 449 பஸ்களும் உள்ளடங்குகின்றன.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் மட்டும் 22 ஆயிரத்து 700 வாகனங்கள் பயணித்துள்ளன. அதில் ஆயிரத்து 845 பஸ்களும் உள்ளடங்கு கின்றன. காலியில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்காக அதிகளவு வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்திக் கொண்டுள்ளன.

கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருந்தால் சுமார் 20 மில்லியன் ரூபா வருமானம் அரசுக்கு கிடைத்திருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

மே தினக் கூட்டங்கள் பேரணிகளுக்காக அரச சொத்துக்களை பயன்படுத்தவோ, துஷ்பிரயோகம் செய்யவோ கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் தத்தமது கட்சிகளுக்குக் கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தனர். (ற-ஐ-5)

## அடுத்தாண்டு பல்கலைக்கழகங்களுக்கு அதிகளவானோர் உள்ளீர்க்கப்படுவர்

கொழும்பு,மே.4
அடுத்த ஆண்டில் இருந்து தேசிய பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழில் நுட்பவியல் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு, ஆயிரத்து 825 மாணவர்களை இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் தொழில் நுட்பத்துறை சார்ந்த பொறியியல் தொழில்நுட்பப் பட்டப்படிப்புப் கற்கை நெறிகள், ஒன்பது பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, இந்தக் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு 775 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளரான கலாநிதி பிரியந்த பிரேமகுமார தெரிவித்துள்ளார்.

இதே போன்று உயிரியல் தொகுதிகள் தொழில்நுட்பவியல் பட்டப்படிப்புப் கற்கைநெறியை, 9 பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கவுள்ளதோடு, அந்தத்துறையில் 625 மாணவர்களும், தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் பட்டப் படிப்பு கற்கைநெறியைத் தொடர்வதற்கு 425 மாணவர்களும், இணைத்துக் கொள்ளப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2015-2016 கல்வியாண்டில் இருந்து இந்தக் கற்கைநெறிகள் நடைமுறைப் படுத்தப்படுவதோடு, இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வோர் ஆண்டிலும் நூற்றுக்குப் 10 வீதம் என்ற தொகைப்பிரமாணத்தால் அதிகரிக்கப் படுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஐ-ரி2,22)

## பிரமுகர் பாதுகாப்புக்கு ராணுவத்தை உபயோகப்படுத்துவது சட்டவிரோதம்

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, மே 4
முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பணியில் இராணுவத்தை ஈடுபடுத்துவது சட்ட விரோதம். இதனாலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டு வந்த இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக சிறப்பு அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. - இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது-

இராணுவத்தினரை முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்துவதில்லை. இந்தக்கொள்கையின் அடிப்படையிலேயே, மகிந்த ராஜபக்சவின் இராணுவப் பாதுகாப்பு விலக்கப்பட்டது.

இந்த முடிவு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதமே எடுக்கப்பட்டு விட்டது. தற்போதைய, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்பு அணியில் இருந்தும், இராணுவத்தினர் ஏற்கனவே விலக்கப்பட்டு விட்டனர்.- என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயங்கவைச் சந்தித்த மகிந்தவை உடன் கைது செய்திருக்க வேண்டும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, மே 4

சர்வதேசப் பொலிஸாரால் தேடப்படும் குற்றவாளியான உதயங்க வீரதுங்கவைச் சந்தித்த, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே கைது செய்திருக்க வேண்டும். - இவ்வாறு அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று தெரிவித்தே தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது. அப்படியாயின் ஊழல் செயற்பாடுகளின் பின்புலத்தில் இருந்தவர்களையும், தற்போது கைது செய்திருக்க வேண்டும்.

ஆனால், அவர்கள் எவரும் இது வரையில் கைது செய்யப்படவில்லை.

கடந்த காலத்தில் தொழில் அமைச்சராகவிருந்து, நாட்டின் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்சவும் தொழிலாளர் வளர்ச்சிக்கு எதுவும் செய்யவில்லை. அவர் அன்று தொழிலாளர்களுக்கு ஒன்றும் செய்யாது இன்று தொழிலாளர் தினத்தில் அரசியல் மேடையிலேறி பேசிக்கொண்டிருக்கின்றார்.



நல்லாட்சியின் தலைமைகளும் இதுபோன்று செயற்படாது தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்சவின் தூய்மையற்ற ஆட்சியில் செய்ய முடியாது போன நல்ல செயற்பாடுகளை, மக்கள் நலன் கருதி இன்று செய்ய வேண்டும் என்பதற்காகவே நல்லாட்சி அரசை மக்கள் தெரிவு செய்தனர்.

நான் இதற்கு முன்னர் சிறையிலிருந்து வெளியில் வந்தபோது, இன்னும் சில வருடங்களில் மகிந்தவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்றேன். அதேபோல் 2வருடங்கள் 7 மாதங்களில் அவரின் ஆட்சியை கவிழ்க்க முடிந்தது.

ஆனால், அவர் பல ஊழல்களையும் செய்து விட்டு இன்று வெளியில் உள்ளார்.

அண்மையில் அவர் தாய்லாந்து சென்றிருந்த போது சர்வதேச பொலிஸ் நிறுவனமான இன்டர்போலால் தேடப்படும் உதயங்கவுடனிருந்து படம் எடுத்துள்ளார்.

நல்லாட்சி அரசில் நீதி, கட்டமைப்பு முறையாக இயங்கியிருந்தால் மகிந்தவைக் கைது செய்து தற்போது சிறையிலடைத்திருக்க வேண்டும்.

அன்று நான் மகிந்தவை எதிர்த்து பொது வேட்பாளராக களமிறங்க முன்வந்திருக்காத பட்சத்தில், ஐக்கிய தேசியக் கட்சி என்ற ஒன்றை அடையாளம் இல்லாமல் செய்திருப்பார்.

இவர் போன்றவர்களின் செயற்பாடுகள் நாட்டில் மீண்டும் போராட்டத்தை ஏற்படுத்தும். எனவே நாம் விழிப்பாக இருக்க வேண்டும். மீண்டும் போராட்டங்கள் எழ இடமளிக்கக் கூடாது - என்றார். (ற-ஐ-5)

# விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதிகளுக்கு மீளப் புனர்வாழ்வு

கொழும்பு, மே 4

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகளுக்கு மீண்டும் புனர்வாழ்வு வழங்கப்படவுள்ளது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராம், நகுலன் மற்றும் தயாளன் ஆகிய விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் கடந்த வாரமளவில் பயங்கரவாத விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டனர்.

இந்த மூவரும், முறையாக புனர்வாழ்வு பெறாததையடுத்தே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த மூவரும் மீண்டும் புனர்வாழ்வளிப்புக்கு உள்ளாக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-விடுதலைப் புலிகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளரான பிரபா என்றழைக்கப்படும் கலைநேசன் நேற்றுமுன்தினம் காலை பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ற-ஐ-5)

# பொது மன்னிப்புக் காலத்தில் 84 ஆயுதங்கள் மீள ஒப்படைப்பு

## வடக்கில் இருந்து எவையும் ஒப்படைக்கப்படவில்லை

கொழும்பு, மே 4

சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில், இதுவரையில் 84 ஆயுதங்கள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனினும் வடக்கு மாகாணத்திலிருந்து எந்தவொரு ஆயுதமும் ஒப்படைக்கப்படவில்லை.

சட்ட விரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி முதல் நாளை மறுதினம் 6 ஆம் திகதி வரையில் பொதுமன்னிப்புக் காலமொன்றை அரசு அறிவித்துள்ளது. ஆயுதங்களை ஒப்படைப்போருக்கு சன்மானம் வழங்குவதற்கும் அரசு தீர்மானித்திருந்தது.

பொது மன்னிப்புக் காலத்தில் இதுவரையில் 84 ஆயுதங்கள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனினும் வடக்கு மாகாணத்திலிருந்து ஆயுதங்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை. கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் ஐந்து ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மற்றும் கேகாலை மாவட்டங்களில் எந்தவித ஆயுதங்களும் இதுவரையில் ஒப்படைக்கப்படவில்லை. கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் 21 ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 11 ஆயுதங் களும், புத்தளம் மாவட்டத்தில் 12 ஆயுதங்களும், கண்டி மாவட்டத்தில் 6 ஆயுதங்களும், பொலனறுவை மாவட்டத்தில் 4 ஆயுதங்களும், அம்பாறை மாவட்டத்தில் 5 ஆயுதங்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 9 ஆயுதங்களும், மாத்தறை மாவட்டத்தில் 5 ஆயுதங்களும், மொனரா கலை மாவட்டத்தில் 2 ஆயுதங்களும், களுத்துறை மாவட்டத்தில் 4 ஆயுதங்களும் இதுவரையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ற-ஐ-5)

# பாதுகாப்புத் தடைகளையும் தாண்டி கொக்கோஸ் தீவுக்கு அகதிகள் படகு

கொழும்பு, மே 4

அகதிகளைத் தடுப்பதற்காக ஆஸ்திரேலியாவால் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்புத் தடைகளைத் தாண்டி, ஆஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவை அகதிகள் படகு ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்றடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிக மோசமான காலநிலை சீர்கேடுகளுக்கு மத்தியில், அகதிகளை ஏற்றிச் சென்ற படகு நேற்று முன்தினம் முற்பகல் 10.45 மணியளவில் கொக்கோஸ் தீவை அடைந்துள்ளது.

இந்தப் படகு இலங்கையிலிருந்து புறப்பட்டுள்ளது. 10 அல்லது 11 மீற்றர் நீளமான மரத்தால் உருவாக்கப்பட்ட இந்தப் படகு 12 தொடக்கம் 15 நொட்ஸ் வேகத்தில் பயணம் செய்துள்ளது. தற்போது ஹோம் தீவிலிருந்து 500 மீற்றர் தொலைவில் நங்கூரமிட்டுள்ளது.

இந்தத் தகவல்களை உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நீலம் மற்றும் மஞ்சள் நிறத்திலான இந்தப் படகில் 12 பேர் வரை வந்திருக்கலாம் என்றும் உள்ளூர் வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் கொக்கோஸ் தீவுக்கு வந்திருக்கும் முதல் அகதிகள் படகு இதுவாகும்.

அகதிகள் படகுகளைத் தடுப்பதற்கான விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆஸ்திரேலியா மேற்கொண்டிருந்த நிலையில், இந்தப் படகு கொக்கோஸ் தீவை அடைந்திருப்பது ஆஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ற-ஐ-5)

# சுதந்திர வர்த்தக உடன்பாடு தொடர்பில் சீனாவுடன் பேச்சு

கொழும்பு, மே 4

சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் கையெழுத்திடுவது தொடர்பாக, இலங்கையும், சீனாவும் அடுத்த மாதம் உயர் மட்டப் பேச்சை நடத்தவுள்ளன.

இந்தத் தகவலை வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் நடக்கவுள்ள இந்த உயர்மட்டப் பேச்சில், இலங்கையின் முக்கியமான உற்பத்திகளுக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து சீனாவுடன் பேசப்படவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன், இலங்கை வர்த்தக உடன்பாடுகளைச் செய்து கொண்டிருப்பதுடன், 4 ஆயிரம் உற்பத்திப் பொருள்களை தீர்வையின்றி இந்தச் சந்தைகளுக்கு அனுப்பி வருகின்றன.

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம், கடந்த ஆண்டு 4 பில்லியன் டொலரை எட்டியுள்ளது.

2014 ஆம் ஆண்டு 3.58 பில்லியன் டொலராக இருந்த இருதரப்பு வர்த்தகம் கடந்த ஆண்டு, 17 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. (ற-ஐ-5)

# சிறுநீரகச் சத்திர சிகிச்சை தொடர்பான விவரங்களை ஒப்படைக்குமாறு பணிப்பு

கொழும்பு, மே 4

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக சத்திரசிகிச்சை தொடர்பிலான விவரங்கள் அடங்கிய கோப்புக்களை, குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் கிஹான் பெலப்பிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

சுகாதாரப் பணிப்பாளர் பாலித மஹிபால ஹேரத்துக்கே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த விவகாரம் சம்பந்தமான வழக்கு, கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இலங்கைக்கு வந்து சிறுநீரகத்தை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, மிரிஹான பொலிஸில் இந்தியப் பிரஜைகள் 8 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பிரதான சந்தேகநபரான விஜிதாஜினி சுரேஸ் லக்ஷ்மன் குமார் என்பவர் இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாடொன்றுக்குத் தப்பிச்சென்றுள்ளார் என கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பெலப்பிட்டியவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதனால் தப்பியோடிய சந்தேகநபரைக் கைதுசெய்யுமாறு நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார். அத்துடன் குறித்த இந்தியப் நபரின் வெளியேற்றம் தொடர்பான முழு விவரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு, குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு, நீதிவான் அறிவித்தல் அனுப்பியுள்ளார்.

அத்துடன், இந்த விவகாரம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக, மிரிஹான பொலிஸ் தலைமையகத்தின் பொலிஸ் பரிசோதகரை, எதிர்வரும் 16 ஆம் திகதியன்று நீதிமன்றில் முன்னிலையாகு மாறும் நீதிவான் உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தார்.

சட்டவிரோதமான முறையில் சிறுநீரகங்களை மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்தியர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவர்களில் பிரதான சந்தேகநபரான விஜிதாஜினி சுரேஸ் லக்ஷ்மன் குமார் என்பவர், மிரிஹான தடுப்பு முகாமிலிருந்து தப்பியோடியிருந்தார்.

இந்த நிலையில், ஏனைய சந்தேகநபர்கள் எழுவரையும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்புமாறு, கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸினால் கடந்த மாதம் 19 ஆம் திகதியன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மாணவர்களின் நலன் நாடிய நியாயம் நிறைந்த கோரிக்கை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, நாளுக்கு நாள் கடும் வெப்பநிலை அதிகரித்து வருகிறது. அதனால், பாடசாலைகளில் மாணவர்கள், அடிக்கடி மயங்கி விழுகிறார்கள்.
அதனால், இந்த மாதம் முழுவதும், பாடசாலைகளை காலை ஏழரை மணிக்கு ஆரம்பித்து, மதியம் பன்னிரெண்டரை மணியுடன் நிறைவு செய்யுமாறு--

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கை மிகவும் நியாயம் நிறைந்தது. நூறு வீதம் வரவேற்கப்பட வேண்டியதும், கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில், இப்போது முப்பத்தேழு பாகை செல்சியஸ் வரை வெப்ப நிலை காணப்படுவதாகவும், கடந்த நூறு ஆண்டுகளில் இந்த அளவுக்கு ஒரு போதும் வெப்பநிலை உயர்ந்ததில்லை என்றும்--

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. அதனை வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் புறக்கணிக்க எந்த வகை நியாயமும் இல்லை.

ஏற்கனவே பல பாடசாலைகளில் வெயில் கொடுமையால், மாணவர்கள் மயங்கி விழுந்தமையை உதாரணங்களாக தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் எடுத்துக் காட்டி உள்ளார். ஆகையால் அவரது கோரிக்கை, தட்டிக் கழிக்க இயலாத ஒன்று. உடன் நடவடிக்கை எடுக்கப்படுவது அவசரமானதும் ஊக்குவிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

மேலும், மிகப் பல பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் மயக்கமுறும் தகவல்கள்--செய்திகள் வெளிவராத நிலையில்--

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளரின் எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தட்டிக் கழிக்கவோ, இது விடயத்தில் குதர்க்கமான காரணங்களை வெளிப்படுத்தவோ எவரும் முயலக்கூடாது.
மாணவச் செல்வங்கள்தான், நாட்டின் எதிர்காலப் பிரசைகள், சொத்துக்கள். அதில், விதண்டாவாதங்களுக்கோ, தர்க்கங்களுக்கோ ஒரு துளி இடமும், தேவையற்றவை.

இன்றே செய்மின், அதனை நன்றே செய்மின் என்ற உள்ளார்ந்த உணர்வுடன், கல்வி அமைச்சு அதிகாரிகள் இது விடயத்தில் விரைந்து செயலாற்ற வேண்டும். பரஸ்பரம் வெறும் குதர்க்க வாதங்களை முன்வைத்து, எதிர்காலப் பிரசைகளின் நலனுக்கு முட்டுக்கட்டை போட முயலும் அதிகாரிகள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அதில் இரண்டு கருத்துக்கள் வேண்டவே வேண்டாம்.

மாணவச் செல்வங்களின் உயிரிழப்புக்கள் நிகழ்ந்த பின்னர் நியாயம் பிளக்கும் உரிமை எவருக்கும் இல்லை!

# இலங்கையில் ஊடக சுதந்திரம்

**யாழில் இடம்பெற்ற கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களை நினைவுகூரும் வைபவத்தில் ஆற்றிய உரை**



தே.தேவானந்த்
இயக்குநர்
ஊடக வளங்கள்
பயிற்சி மையம்
யாழ். பல்கலைக்கழம்

டிஜிற்றல் உலகில்ஊடக சுதந்திரம் மனித உரிமைகள் சார்ந்தும், கலாசார வெளிப்பாடு, தகவல் அறியும் உரிமை மற்றும் நிலைத்த அபிவிருத்தி என்ற அடிப்படைகளோடும் நோக்கப்படுகின்றது. அதே வேளை இவற்றை நிலைநிறுத்துவதற்கான ஊடகத்தின் வகிபாகம் மற்றும் இந்தச் சேவைகளை வழங்குகின்ற ஊடகவியலாளர்களைப் பாதுகாத்தல் என்ற அடிப்படை களையும் உள்ளடக்கியதே ஊடக சுதந்திரம் எனலாம்.
சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளில் உலகின் முதலாவது தகவல் அறியும் உரிமைச்சட்டம் அறிமுகமாகி 250 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன.
தகவல் அறியும் உரிமை, ஊடக சுதந்திரத்தின் அடிப்படையாகின்றது. கட்டுப்பாடுகளில் இருந்து ஊடக சுதந்திரத்தைப் பேணுதல் மற்றும் பணியில் உள்ளபோதும் இல்லாதபோதுமான ஊடகவியலாளனின் பாதுகாப்பு போன்ற விடயங்களையும் இது உள்ளடக்கியதாகும்.
இலங்கையில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் இன்னமும் சட்டமாக்கப்படவில்லை. ஆனால், 250 ஆண்டுகளுக்கு முன்னர் பின்லாந்து அந்தச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அதனால் தான் இன்று உலகில் பின்லாந்து ஊடக சுதந்திரம் சிறப்பாகப் பேணப்படும் நாடுகளின் பட்டியலில் முதலாவதாகத் திகழ்கிறது. அதேவேளை இலங்கை 141 ஆவது இடம் வகிப்பதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் 165 ஆவது நிலையிலிருந்து, தற்போது 24 இடங்கள் முன்னேறியுள்ளது. 180 நாடுகள் இந்த மதிப்பீட்டில் உள்ளடங்கியிருக்கின்றன.
இலங்கை தென்னாசிய நாடுகளில் [illegible] தைக் [illegible] மூன்று மொழிகளில் ஊடகங்களைக்கொண்ட இலங்கையின் ஊடகப் பரப்பில், ஒரு டசின் செய்தி இதழ்களும், மூன்று டசின் தொலைக்காட்சிநிலையங்களும் 40 க்கும் மேற்பட்ட வானொலி நிலையங்களும் உள்ளன. இந்த நீண்ட வரலாற்றில் அரச ஊட கங்களே முக்கியமான வகிபாகத்தை வகித்திருக்கின்றன.
1925ஆம் ஆண்டு இலங்கை வானொலி செயற்படத் தொடங்கியது. 1932இல் ஆரம்பிக்கப்பட்டது முதலாவது பத்திரிகையான கொழும்பு ஜேர்னல். அதன் பின்னர் ஒரு தசாப்த காலங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் 1941ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது உதயதாரகை பத்திரிகை. இலங்கை சுதந்திரமடைந்தபோது ஆரம்பிக்கப்பட்ட அசோசியேட் நியூஸ் பேப்பர் ஒவ் சிலோன் லிமிட்டெட் பின்னர் லேக் கவுஸ் பப்ளிக்கேசன் என்று அறியப்படுகிறது. இதன் பின்னர் 1979ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தொலைக்காட்சி சேவை இவையெல்லாம் அரச ஊடகங்களாகும். ஆட்சியில் இருக்கின்ற அரசுகளுக்கு சார்பாக அறிக்கையிடுவது இவற்றின் பொது நியதியாகவிருந்தது.
இதேவேளை-1992ஆம் ஆண்டு தனியார் வானொலிகளும், தொலைக்காட்சிகளும் இலங்கையில் செயற்பட அனுமதி வழங்கப்பட்டது. இதுவொரு புதிய மலர்ச்சியாகும். அதே வேளை, இதே காலப்பகுதியில் உருவான அரசுக்கு எதிராகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளும் இங்கு குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியவையாகும்.
இந்த நீண்ட ஊடக வரலாற்றுக்குச் சமாந்தரமாக இலங்கை ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.
1990ஆம் ஆண்டு இன்ர பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டதோடு, இந்த நீண்ட கறை படைந்த வரலாறு ஆரம்பமாகின்றது - எனலாம்.
1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி றிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம், தமிழ்நெற் இணையத்தினுடைய ஆசிரியராக இருந்தவர். பின்னர் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி அன்று சிவராம் கடத்தப்பட்டு, கொல்லப்படுகிறார். இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் அதிகரித்து வந்துள்

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது. இந்தப்பட்டியல் நீண்டு சென்றுள்ளது. தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத் தகவல்களை வெளிக் கொண்டு வந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். திருகோணமலை மாணவர்களின் கொலையை வெளிப்படுத்தினார் என்ற சந்தேகத்தில் உதயன்- சுடர் ஒளிசெய்தியாளர் சுப்பிரணியம் சுகிர்தராஜன் கொல்லப்பட்டார். 2006ஆம் ஆண்டு ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப்படு கொலையென வர்ணிக்கப்படுகின்ற உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் அங்கு பணியில் இருந்த இருவரைச்சுட்டுக்கொன்றார்கள். இது ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து நடத்தப்பட்ட மிகப் பெரியதும் முக்கியமானதுமான தாக்குதலாகும். இதில் தாக்குதலை நடத்தியவர்கள் இலகுவாக கைது செய்யப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருந்த போதிலும், அது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை, விசாரிக்கப்படவுமில்லை. இந்தக் காலகட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட பலசம்பவங்கள்நடை பெற்றுள்ளன. அவற்றை இங்கு விரிவாகத் தரமுடியவில்லை.

இலங்கையில் உள்நாட்டு போர் நிறைவடைந்த பின்னர் இத்தகைய சம்பவங்கள் குறைவடைந்திருந்தாலும். கார்ட்டூன் கலைஞன் மற்றும் ஊடகவியலாளன் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன சம்பவம் முக்கியமான சம்பவமாகக் குறிப்பிடப்படுகின்றது. இது விடயமாக அப்போதைய பாதுகாப்பு செயலாளரின் அறிக்கையும். பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் தெரிவித்த கருத்துக்களும் ஊடகசுதந்திரம் ஆபத்தான நிலையில் உள்ளது என்பதை வெளிப்படுத்தியது. எக்னெலிகொட தானாகவே தலைமறைவாகிவிட்டார் என்று பாதுகாப்புச் செயலரும், அவர் உயிரோடு உள்ளார், வெளிநாடொன்றில் வசிக்கிறார் என்று அப்போதைய பிரதம நீதியரசரும் குறிப்பிட்டிருந்தனர். இதன் பின்னர் 2012 ஆம் ஆண்டு கொழும்பு நீதிமன்ற விசாரணையின்போது பிரதம நீதியரசர் தனக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டமை, இலங்கையில் சட்ட ஒழுங்கு நீதி தொடர்பான பலத்த சந்தேகங்களை உருவாக்கியிருந்தன. இந்தநிலைமை இலங்கையில் ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்பதை தெளிவாக்கியிருந்தது.




இதனைத் தொடர்ந்து தினமின பத்திரிகையின் மூத்த பத்திரிகையாளர் பொட்டல ஜெயந்தா கடத்தப்பட்டு, தாக்கப்பட்டு வீசப்பட்டதான சம்பவம் நடைபெற்றது. அதன் காரணமாகத் தனக்கு உயிராபத்து என்று கருதி அவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். இதே போன்று தமிழ் ஊடகப்பரப்பில் தமக்கு உயிராபத்து என்று கருதிய பலர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்கள்.

போர் நிறைவடைந்து 14 மாதங்கள் முடிவடைந்த நிலையில் சிங்கள தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையமான சியந்தா குண்டுத்தாக்குதலுக்கு உள்ளானது.

இதன் தொடர்ச்சியாக ஜனவரி 2011 இல் லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தீயிட்டுக்கொளுத்தப்பட்டது. நவம்பர் 2011 அதே இணையத்தளம் அரசினால் தடை செய்யப்பட்டது.

போர் நடைபெற்ற போது ஊடகவியலாளர்கள் போர்ப்பகுதிகளுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதே போன்று போர் முடிவடைந்த பின்னரும் வடக்கு- கிழக்குக்கு பத்திரிகையாளர்கள் செல்வதற்கு அல்லது சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. பயம் நிறைந்த சூழல் சிருஷ்டிக்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் தமக்குத்தாமே சுயகட்டுப்பாடுகளை விதித்து அறிக்கையிட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இனம்தெரியாதோரின் அச்சுறுத்தல்கள், பின்தொடரல்கள், தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுதல் போன்ற நிலைமைகளால் ஊடகவியலாளர்கள் சுயகட்டுப்பாடுகளை தமக்குத் தாமே விதித்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இலங்கையில் வெளிப்பாட்டு சுதந்திரத்துக்கான கட்டுப்பாடுகள் அச்சுறுத்தல்களால் நிலைநாட்ட முயற்சித்திருந்த அதேவேளை, இலங்கை மக்கள் அரசுக்கு எதிரான தகவல்களை அறியாதபடியும் தடுக்கப்பட்டார்கள். பி.பி.சி. தனது உலக சேவையை இலங்கை வானொலி ஊடாக மீள் ஒலி பரப்புவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டது. 2008 ஆம் ஆண்டுநவம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் 2009 ஜனவரி வரையான காலப்பகுதியில் இந்த ஒலிபரப்பு 17 தடவைகள் தடைப்படுத் தப்பட்டது. குறிப்பாக தமிழ்ச்சேவையில் இலங்கை அரசை விமர்சிப்பதான செய்திகள் வருகின்ற போது அது நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக இசை ஒலி பரப்பப்பட்டது. அதே நேரம் பி.பி.சி. சிங்கள சேவை எட்டுத்தடவைகள் தடைப்படுத்தப்பட்டது. இதனால் இந்த ஒப்பந்தம் பின்னர் ரத்துச் செய்யப்பட்டது. இலங்கையின் ஊடக சுதந்திரத்துக்கு தடையாக காணப்படும் முக்கிய விடயமாக இருதுருவ அறிக்கையிடல் காணப்படுகிறது. சிங்கள ஊடகவியலாளர்கள் அரசுக்கு சார்பான நிலையை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். தவறான அறிக்கையிடல்கள் நடைபெற்றன. உதாரணமாக திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்ட போது அதனை நியாயப்படுத்து வதாக சில சிங்கள பத்திரிகைகள் அந்த மாணவர்களை புலி ஆதரவாளர்கள்என்று அறிக்கையிட்டன. இரு அந்தலைகளிலிருந்து அறிக்கையிடும்போக்கு இரண்டு இனக்குழும ஊடகங்களுக்குள்ளும் காணப்படுகின்றது. சிங்கள ஊடகங்கள் சில அரசின் நிலைப்பாட்டைத் தொடர்கின்ற அதேவேளை, வேறு சில எதிரான நிலைப்பாட்டில் சர்வ அறிக்கையிடுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

**ஊடகவியலாளர்கள் தமக்குத் தாமே சுயகட்டுப்பாடுகளை விதித்து அறிக்கையிட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இனம் தெரியாதோரின் அச்சுறுத்தல்கள், பின் தொடரல்கள், தொலை பேசி ஒட்டுக் கேட்கப்படுதல் போன்ற நிலைமைகளால் ஊடகவியலாளர்கள் சுயகட்டுப்பாடுகளை தமக்குத் தாமே விதித்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.**

தேச ஊடகங்களின் ஊடாட்டம் மற்றும் மக்கள் இதழியலை வளர்த்தெடுத்தல் என்பவை ஊடக சுதந்திரத்தை நிலைநாட்ட உதவியாக அமையும். ஊடகவியலாளர்கள் ஊடக சுதந்திரத்தை நிலைநாட்ட உதவியாக இருக்கும்.

வெளிப்பாட்டு சுதந்திரத்தைப் புரிந்து கொள்ளுதல், அதற்காகக் குரல் கொடுத்தல், உரிமைகளைப்போராடிப்பெற்றுக்கொள்ளுதல், அந்த சுதந்திரத்தை உணர்தல், அதன்படி நடத்தல் மற்றும் அதனைப் பேணுதல் என்பவை கடினமான பணிகள். அதற்காக ஊடகவியலாளர்களும் சிவில் அமைப்பினர் மற்றும் அரசியல்வாதிகள் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடு படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.



## பழைமையில் புதுமையைக் கண்டவர்கள்

புதுவருடப்பிறப்பின்போது ஆலயங்களில் நடந்தேறிய கலைவிழாக்கள் மனதுக்குத் தெம்பையும் மகிழ்ச்சியையும் தந்தன. ஆலையடி சித்திவிநாயகர் (கல்வயல்) ஆலயத்தில் சிறார்களின் நடனம் பாட்டு என்பவை அவர்களின் திறமைக்கு ஏற்ப நடந்தேறின. தயார்ப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் ஆலய நிர்வாகிகளின் முயற்சி பாராட்டுக்குரியது. மேலும் அவர்களைப் பயிற்றுவித்து ஊக்கப்படுத்துவதால் அவர்களின் திறமைகளை வெளிக்கொணரலாம். பெற்றோரின் பங்களிப்பு முக்கியமாய் கவனத்தில் கொள்ளப்படல் நன்று. தமது எதிர்கால சந்ததியினர் எமது சமயத்தின் வழிகாட்டல்களைப் பின்பற்ற அறநெறிப் பாடசாலைகள் உதவமுடியும். எமது பாரம்பரிய கலைகள் அழிந்து போகும் நிலையில் தாரை, தப்பட்டை, பறை போன்ற வாத்தியங்கள் பற்றி அங்கு மேடையேறிய இளைஞர்கள் எமக்கு அறியத்தந்தார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள். மண்டபத்தையே அதிரவைத்த அந்தப் பறைதாள இசையுடன் கூடிய நடனம் இதுவரை எங்கு ஒளிந்திருந்தது என்பதுதான் வேதனை. எல்லாத் தோல் வாத்தியங்களிலும் வாசிக்கும் தாளங்களைப் பறை மேளத்திலும் இசைக்க முடியும் என்பது பலருக்குத் தெரியாத விடயம். தமிழ்ச் சினிமாவில் பார்த்து ரசித்த எமக்கு, எம்மவர்களாலும் முடியும் என்பதை இந்த முயற்சி மூலம் வெளிக் கொணர்ந்துள்ளார்கள். பழமையில் புதுமையைக் கண்ட இளையவர்கள் மேலும் வளம்பெற வாழ்த்துக்கள்.

– உதயன் வாசகி– கல்வயல்

## எது உண்மையான சிரிப்பு

சிரிப்பில் பலவகை உண்டு. எம்மவரின் சிரிப்பில் ஆணவச்சிரிப்பு, மற்றவரை கேலிபண்ணும் சிரிப்பு என்பவை அடங்கியிருக்கும். ஆனால் குழந்தையின் மழலைச்சிரிப்பு மனதை மகிழ்விக்கும் தன்மையுடையது. ஒருவரின் மனதைப் புண்படுத்தி விட்டு அவர்களிடம் சென்று ஏன் சிரிக்கவில்லை. சிரிப்பினால் பல நன்மைகள் உண்டு என்று தத்துவம் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை. இருக்கும்வரை மற்றவர்களைப் புரிந்து கொண்டு சிநேகபூர்வமாக உரையாடி மகிழ்ச்சியாக இருப்பதும் ஒருவகைச் சந்தோசம்தான். சிரிப்பில் மகிழ்ச்சி உண்டு. சமீபத்தில் ஒரு வீட்டில் தொலைபேசியில் சிரித்தவாறு உரையாடிக் கொண்டு இருந்தார். தான் மகிழ்ச்சியாக இருப்பதை மற்றவர்களுக்குக் காட்டுவதற்கான முயற்சியாக இது இருந்தது. என்ன சிரிப்பு? பூப்போன்ற இதயங்களை புண்படுத்தாது, சிரியுங்கள்.

கலைவாணி, கிளிநொச்சி.

## மூத்தோரிடம் கேட்டு அதன்வழி நடப்போம்

தற்போது அனல் பறக்கும் வெயில் எங்கும் எறிக்கிறது. இரவும் பகலும் ஒரே வெப்பமும் புழுக்கமும் தான். இயற்கை எம்மை இவ்வாறு தொந்தரவு செய்கின்றபோது மனிதர்களாகப் பிறந்தோரும் ஒழுங்கீனமான நடவடிக்கைகளில் இறங்கி எம்மைப் பிரச்சினைகளுக்கு உள்ளாக்குகிறார்கள். இந்த இரண்டையும் தாங்கி வாழ நாம் தான் எங்களைப் பழக்கிக்கொள்ள வேண்டும். அச்சம் தவிர், ஆண்மை தவறேல் என்று பாரதி எமக்குப் புதிய பாதையொன்றைக் காட்டியுள்ளான். மூத்தோர் சொல் அமுதம். முன்பு இவ்வாறான சூழ்நிலைகளை எதிர்கொண்ட வழிவகைகளை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்

– சாவகச்சேரியூரான்

## பூக்களைத் திருடிச் செல்வதை இறைவன் ஏற்பானா?

பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான பூ மரங்களை தங்களின் வீடுகளின் ஓரங்களில் வளர்க்கிறார்கள். அவற்றை அழகுக்காகவும் கோயில்களின் தேவைக்காகவும் வளர்க்கிறார்கள். ஆனால் அதிகாலையில் திருட்டுப்பேர்வழிகள் வீட்டுக்காரர் நித்திரைவிட்டு எழும்புவதற்கு முன்னரே மதில் ஓரங்களிலும் வேலி ஓரங்களிலும் இருக்கும் பூக்களைத் திருடிச் சென்று கோயிலுக்கு கொடுக்கிறார்கள். அவர்கள் தங்கள் தங்கள் வீடுகளிலேயே பூமரங்களை வளர்த்து அதில் கிடைக்கும் பூக்களை கோயிலுக்குக் கொடுத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். திருடிக் கொண்டு போய் பூக்களைக் கோயிலுக்குக் கொடுப்பதால் ஏற்படும் பலன்கள் வீட்டுக்காரருக்கா அல்லது திருட்டுப்பேர்வழிக்கா? கிடைக்கும். கற்றவர்களும் மற்றவர்களும் உதயன் வாசகர் திருமுகப் பகுதியூடாக இதற்குப் பதில் தருவார்களா?

– பொ.தவராசலிங்கம்,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடமும் ராசி பலனும்




**(புதுவருடமும் ராசி பலனும் என்ற தலைப்பில் தனுசு ராசி பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். இன்று மகர ராசி பற்றிப் பார்ப்போம்)**

## மகரம்

(உத்திராடம், திருவோணம், அவிட்டம்)

மனதில் சரியெனப்பட்டதை தயங்காமல் செய்பவரே! செவ்வாய், உங்கள் ராசிக்கு இலாப ஸ்தானத்தில் ஆட்சி பெற்று அமர்ந்திருக்கும் நேரத்தில் புத்தாண்டு பிறந்திருப்பதால், எதிலும் உங்கள் கை ஓங்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். பேச்சில் கம்பீரம் கூடும். வீடு, மனை வாங்குவது விற்பது இலாபகரமாக முடியும். உடன் பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. வெளி வட்டாரத்தில் மதிப்புக் கூடும்.

சுக்கிரனும், புதனும் சாதகமான வீடுகளில் செல்வதால், சின்னச் சின்ன வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். உறவினர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். பழைய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உங்கள் ராசிக்கு 6இல் சந்திரன் இருக்கும்போது, புது வருடம் பிறந்ததால், சில சவால்களைச் சந்திக்க வேண்டி வரும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். பயணங்களும், செலவுகளும் துரத்தும். சிலருக்கு வேற்று மாநிலம் அல்லது வெளிநாட்டில் வேலை கிடைக்கும். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். வருடம் முழுவதும் ராகு 8இலும், கேது 2இலும் நீடிப்பதால், காலம் அறிந்து செயற்படுவது அவசியம். செலவுகள் தொடரும். சிலருக்கு அயல்நாடு சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். கணவன் மனைவிக்கு இடையில், சிலர் பிரச்சினை ஏற்படுத்தப் பார்ப்பார்கள். சிறு சிறு விபத்துக்கள் ஏற்படக்கூடும். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கையுடன் செயற்படவும். சிலருக்கு புண்ணிய தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு உண்டாகும். வருடம் முழுவதும் உங்கள் ராசிநாதன் சனிபகவான் இலாப வீட்டில் தொடர்வதால், அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். வருமானம் உயரும். ஓரளவு சேமிப்புக்கும் இடமுண்டு. பெரிய பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். வீட்டில் திருமணம், வளைகாப்பு, கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்வுகள் நடைபெறும். நீண்ட காலமாக குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். ரசனைக்கு ஏற்ப புது வீடு வாங்குவீர்கள். மகனுக்கு வெளிநாட்டில் உயர்கல்வி அமையும். மனைவி வழியில் மரியாதை கூடும். சிலருக்கு கௌரவ பதவிகள் தேடி வரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும்.

1.8.2016 வரை குருபகவான் 8இல் மறைந்திருப்பதால், மறைமுக எதிரிகளால் ஆதாயம் அடைவீர்கள். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். சேமிக்க இயலவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். ஆனால், 2.8.2016 முதல் 16.1.2017 வரை மற்றும் 10.3.2017 முதல் 13.4.2017 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 9 ஆம் வீட்டில் நுழைவதால், வீண் குழப்பங்கள், தடுமாற்றங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். திடீர் பணவரவு உண்டாகும். குடும்பத்தில் சச்சரவுகள் குறையும். பூர்வீகச் சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். ஆனால், 17.1.2017 முதல் 9.3.2017 வரை குரு பகவான் அதிசாரத்திலும், வக்ர கதியிலும் ராசிக்கு 10 ஆம் வீட்டில் அமர்வதால், அடுக்கடுக்கான வேலைகளால் அவதிப்படுவீர்கள். வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போகும். உங்களுடைய உழைப்புக்கு மற்றவர்கள் உரிமை கொண்டாடுவார்கள். தன்னம்பிக்கை குறையும்.

வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். சந்தை நிலவரத்தை அவ்வப்போது கவனித்து அதற்கேற்பச் செயல்படுங்கள். வேலையாள்களின் குறை, நிறைகளைப் பொறுமையாகச் சுட்டிக் காட்டித் திருத்துங்கள். விளம்பரங்களின் மூலம் உங் கள் தொழிலை விரிவுபடுத்துவீர்கள்.

உத்தியோகத்தில், உயரதிகாரிகளுக்கு தகுந்தாற் போலப் பேசும் வித்தையைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வருவீர்கள். இழந்த சலுகைகளை மீண்டும் பெறுவீர்கள்.

மாணவ-மாணவிகளுக்கு போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டு. கலைத்துறையினரின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

மொத்தத்தில் இந்த துர்முகி வருடம், மாறுபட்ட அணுமுறையால் உங்களை முன்னேற வைப்பதாக அமையும்.

# வெப்பத்தைத் தணிக்கும் கற்றாழை

■ அ. அஜித்

கோடை காலம் வந்துவிட்டாலே எல்லோருக்கும் ஒருவித பயம் வந்து ஒட்டிக்கொள்ளும். எப்படித்தான் இந்த வெய்யிலை சமாளிக்கப் போகிறோமோ என்ற மன அழுத்தமும் ஏற்படும். இதற்கு இயற்கை கொடுத்திருக்கும் பல அரிய மூலிகைகளைத் துணையாகக் கொண்டோமானால் பயப்படத் தேவையில்லை.

சாதாரணமாக எங்கும் காணக்கூடிய கற்றாழை ஏகப்பட்ட சக்திகளை தன்னுள்ளே கொண்டுள்ள ஓர் இயற்கை மூலிகை என்பது பலருக்கும் ஆச்சரியத்தை தரும். வெயில் காலத்தில் வெப்ப சரீரமான பித்த உடம்பே அதிகம் பாதிக்கப்படுகின்றது. வெய்யிலின் பாதிப்பிலிருந்து எம்மைக் காக்கவும் உடல் வெப்பத்தைப் போக்கவும் கற்றாழை பயன்படுகின்றது.

கற்றாழையில் கருங்கற்றாழை, செங்கற்றாழை, பெருங்கற்றாழை, சிறு கற்றாழை எனப் பலவகைகள் உள்ளன. பச்சையாக உள்ள சோற்றுக் கற்றாழை பலவகையில் உடல் வெப்பத்தைத் தணிக்கிறது. கற்றாழை என்றாலும், சோற்றுக் கற்றாழை என்றாலும் ஒன்றுதான்.

கோடை காலத்தில் உருவாகக் கூடிய நீர்க்கடுப்பு, நீர்தாரை எரிச்சல், மாதவிடாய்க் கோளாறுகள், உடல் வெப்பம், உடல் காந்தல் போன்ற பாதிப்புக்களுக்கு சோற்றுக் கற்றாழையில் உள்ள நுங்கு (சோறு) போன்ற கலவையை எடுத்து சுத்தமான நீரில் அலசிக்கொள்ள வேண்டும். பிறகு அதற்குச் சமனான அளவில் பனங்கற்கண்டை அதனுடன் சேர்த்து காலை மாலை இரு வேளைகளிலும் உண்டு வரவேண்டும். இதனால் உடல் உஷ்ணமும் எரிச்சலும் குறையும். வெயில் காலத்தில் சிலருக்கு கண்களில் எரிச்சல் உண்டாகி கண்கள் சிவந்துவிடும். அப்போது கற்றாழையின் ஒரு துண்டை எடுத்து அதன் நுங்குப் பகுதி வெளியே தெரியும்படி இரண்டாகப் பிளந்து கண்களை மூடி கண்களின் மீது அந்தக் கற்றாழைத் துண்டை வைத்துக்கொண்டு சற்று நேரம் அப்படியே படுத்திருக்க வேண்டும். இப்போது கண் எரிச்சல் குறைவதோடு சிவந்த நிறமும் மறைந்து விடும். இதைஇரவு நேரங்களில் தூங்குவதற்கு முன் செய்து வந்தால் நல்ல உறக்கம் வருவதோடு உடலுக்கு பல நன்மைகளும் கிடைக்கும்.



நீர்க்கடுப்பு, வயிற்றில் எரிச்சல் உள்ள சமயங்களில் கற்றாழைச் சோற்றுடன் சர்க்கரை அல்லது பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் அவை குணமாகும். சிலருக்குத் தூங்கி எழுந்ததும் பாதத்தின் அடியில் நெருப்பை மிதித்தது போல எரிச்சலாக இருக்கும். இதைப் போக்க இரவு படுக்கும் முன் கற்றாழையின் நுங்கு போன்ற சோற்றை பாதத்தின் அடியில் தடவிக் கொண்டு படுக்கலாம். பாதஎரிச்சல் குறைவதோடு பாதவெடிப்புகளும் குணமாகும்.

உடல் எப்போதும் கோழி வயிறுபோல சூடாக இருப்பவர்களும் தேகத்தில் தோல் எரிச்சலாக இருக்கிறது என உணர்கிறவர்களும் கற்றாழையில் செய்த தைலத்தை தலைக்குத் தேய்த்துக் குளிப்பதால் உடல் சூடும் எரிச்சலும் குறைந்து உடல் குளிர்ச்சியடையும். உடலில் எந்தப் பிரச்சினையும் இல்லாதவர்கள் இந்த எண்ணெயை தினமும் தடவி வரலாம். இதனால் நல்ல உறக்கமும் மனப்பதட்டம் குறைந்து அமைதியும் உடல் நலமும் கிடைக்கும். வாரம் ஒருமுறை இந்த எண்ணெயை உடலுக்குத் தேய்த்துக் குளிப்பதால் உடலுக்கு குளிர்ச்சி ஏற்படுவதோடு உடல் வனப்பும் ஏற்படும். இந்தச் சோற்றுக் கற்றாழைத் தைலம் அல்லது எண்ணெயை நாம் வீட்டிலேயே தயாரிக்கலாம்.

கற்றாழை ஜெல்லை சுத்தமான நீரில் 7 முறை கழுவி சுத்தம் செய்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர உங்கள் இளமை என்றும் ஊசலாடிக் கொண்டே இருக்கும். உடலில் கஸ்தூரி மணம் வீசும். சருமம் வறண்டு போகாமல் ஈரப்பதத்துடன் ஜொலிக்கும். கற்றாழை ஜெல்லை பசு மோரில் கலந்து குடித்து வர உடல் சூட்டினால் முகத்தில் வரும் பருக்கள், வெய்யிலினால் தோலில் ஏற்படும் அலர்ஜி மற்றும் கருந்திட்டுக்கள் மறைந்து போகும். இதன் ஜெல்லை முகத்தில் தேய்த்து கழுவி வந்தால் முகம் அப்பழுகில்லாத பளிங்கு போல் ஜொலிக்கும். கற்றாழை மடலைக் கீறி எடுத்து அதன் சாற்றை தேங்காய் எண்ணெயுடன் கலந்து 40 நாள் வெயிலில் வைத்து அதனைத் தலைக்குத் தொடர்ந்து தேய்த்து வர தலைமுடி நன்கு செழித்துவளரும்.

கற்றாழையின் சாற்றை பலமுறை கழுவி விளக்கெண்ணெய், பனங்கற்கண்டு, வெள்ளைவெங்காயம்போன்றவற்றைக் கலந்து பதமாகக் காய்ச்சி, வடிகட்டி இரண்டு வேளை 15 மில்லியளவு குடித்து வர மந்தம், வயிற்றுவலி, பசியின்மை, குன்மக்கட்டி, ரணம், புளியேப்பம் பொருமல் ஆகியவை குணமாகும்.

இது மட்டும் அல்லாமல் பெரும் ஏப்பம், பசியின்மை, குன்மம், தண்டு வலி, வயிற்றுப் பொருமல், அடிவயிறு வீக்கம், மலச்சிக்கல், நரம்புச் சூடு தணியும். இதே எண்ணெய்யை 5 மில்லி அளவு (1தேக்கரண்டி) 2 வேளை குடித்து வர மற்றும் புளி உள்ள உணவு வகைகளை நீக்கிச் சாப்பிட்டுவர மேகநோய் பலவீனமாகும். எரிச்சல், நீர்க்கசியும் கிரந்தி அரிப்பு தினை மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்தில் நீர் ஒழுகுதல், தாது இழப்பு, அரையாப்பு, தொடைக்கட்டி, அக மற்றும் புற உறுப்புகளில் உள்ள இரணங்கள் சீழ் வடிதல் மலச்சிக்கல் என்பவை குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் உருவாகுகின்ற



# குழந்தைகளின் எதிர்காலம்

சி.நற்குணலிங்கம்

நாம் வசிக்கும் வீடே அறிவு வளர்ச்சிக்கும், ஒழுக்கத்துக்கும் தளமாக அமைகிறது. உயர்ந்த எண்ணங்களை உருவாக்கும் களமாக ஒருவனுக்கு அவனது வீடே அமைகிறது. வீட்டிலுள்ளவர்கள் நல்லறிவோடு நல்லுணர்வோடு தாங்கள் கெடாத தன்மையோடு பிறர் கெடாமல் இருக்கத்தக்க சூழலையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். பெற்றோர் என்ற சொல்லுக்கு ஏற்ற தகுதி படைத்த வர்களாக பிள்ளைகளைப் பெற்ற தாய் தந்தையர் வாழவேண்டும். பெற்றோருக்கான சகல தகுதிகளையும் பெறுவதுடன் நன்மக்களை எமது தேசத்துக்குத் தரும் பெற்றோராக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

பெற்றோராக உங்கள் பொறுப்பை எப்போது மறக்கின்றீர்களே வழிகாட்டலை எப்போது கைவிடுகின்றீர்களே அப்போது முதல் தொடங்குகிறது மனிதக் குழந்தைகளிடமிருந்து வன்மமும், வன்முறையும். எனவே பெற்றோரே, குழந்தை வளர்ப்பில் எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களதுபிடி தளரக் கூடாது. வழிகாட்ட மறந்தீர்களோ, உன்தலைமுறை உங்களுக்கேவன்முறையைக்கற்பிக்கும். ஆகவே பெற்றோரே வளமான எதிர்கால தலைமுறை உருவாக்கம் உங்கள் கைகளில்தான் உள்ளது. நீங்கள் எந்த அளவுக்கு உங்கள் குழந்தை வளர்ப்பில் அக்கறை காட்டுகிறீர்களோ அதற்கேற்ப குழந்தையின் எதிர்காலம் சிறக்கும். இல்லையேல் பிள்ளையின் வாழ்வு மட்டுமல்ல உங்கள் வாழ்வும் வலிக்கும். குழந்தைகளுக்கு சரியானதைப் பொறுமையாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதைவிடுத்து கோப உணர்வுடன் சொல்வதன் மூலம் எதுவும் நடக்காது. அன்போடு அமைதியாகச் சொன்னால் குழந்தைகள் எதையும் ஏற்று நடப்பதுடன், எதையும் பெற்றோரிடம் பயமின்றி மனதில் இருப்பதைப் பகிர்ந்து கொள்ளப் பழகிவிடுவார்கள். அத்துடன் பெற்றோர் சிலர் தம் பிள்ளைகளுக்கிடையில் பாரபட்சம் காட்டி வளர்ப்பார்கள். பாரபட்சம் காட்டுவது அவர்களை விரக்தி கொள்ளச் செய்துவிடும். அது பாரதூரமான விளைவுகளுக்கும் இட்டுச் செல்லும்.

அடித்து வளர்க்காத குழந்தையும், ஒடித்து வளர்க்காத முருங்கையும் நன்றாக வளரா என்பது பழமொழி. இதில் முதல் வார்த்தை இன்று முற்றும் கோணலாக வந்து விட்டது. அதனை மனநல மருத்துவர்கள் சுட்டிக்காட்டி எச்சரிக்கிறார்கள். குழந்தைகளின் செயலைக் கண்டிப்பது என்பது தண்டிப்பதைவிடச் சிறந்ததாகும். தண்டிப்பது என்பது குழந்தைகளுக்கு முன்பே புரியவைக்காமல் தவறு செய்யும் பட்சத்தில் அவர்களை அடித்துத் துன்புறுத்துவதாகும். கண்டிப்பது என்பது ஒரு செயலைச் செய்யும் போது நல்லது எது? கெட்டது எது? என்பதை புரிய வைப்பதாகும். குழந்தைகள் தவறு செய்தால் கண்டிப்புடன் எளிய முறையில் குழந்தைகளுக்கு புரியவைப்பது தான் சிறந்ததாகும். தண்டிப்பது குழந்தையை மன அழுத்தத்துக்கு ஆளாக்கி, பிற்காலத்தில் தவறான பாதைக்கு அவர்களை இட்டுச் செல்லும்.

குழந்தைகள் பெற்றோரின் உடைமைப் பொருள் அல்ல. உங்கள் எதிர்பார்ப்புக்களை, விருப்பங்களை, எண்ணங்களை, அவர்கள் மீது திணிக்காதீர்கள். பிள்ளைகளை தம் எதிர்பார்ப்புக்கு ஏற்றவகையில் வளைக்கப் பார்க்கிறார்கள். இந்தத் திணிப்பு பல வேளைகளில் பெற்றோருக்கு பிள்ளைகளுக்குமான இடைவெளியை அதிகரிக்கச் செய்துவிடும். அத்துடன் நாம் அவர்களை வன்முறைக்கு உள்ளாக்கக் கூடாது என்பதை பெற்றோர் தம் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்கின்றனர் குழந்தை நலமருத்துவர்கள்.

நல்லதொரு வழிதடத்தின் கீழ் குழந்தைகள் பயணிப்பது எப்படி என்பதை கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு பெற்றோர் முன்மாதிரியானவர்களாகக் காணப்பட வேண்டும். குழந்தை முன்னிலையில் சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது, கணவன் மனைவி சண்டையிடுதல், தகாத வார்த்தைப் பிரயோகம், பிள்ளைகளிடம் தப்பிப்பதற்காக பொய்பேசுதல் இவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பெற்றோர் சொல்வதை குழந்தை ஏற்க வேண்டுமானால் முதலில் பெற்றோரை பிள்ளைகள் மனமார ஏற்க வேண்டும். அதற்கேற்ற நடத்தைக் கோலங்களை பெற்றோர் பின்பற்ற வேண்டும்.

பெற்றோரின் கடுமையான எச்சரிக்கைகள் தோல்வியில் தான் முடியும். அதிக அறிவுரைகள் எச்சரிக்கைகள் பிள்ளைகளுக்கு பெரிதும் பிடிக்காது. உன்னத நட்பின் மூலம் தான் சாதிக்க முடியும். நட்புடன் அணுகுவதன் மூலம் அவை நல்ல ஆலோசனையாக எடுத்துக் கொள்ளப்படும். எதிர்ப்புக்களையும் அளவுக்கு மீறிக் காட்டக் கூடாது. கேட்டதற்கெல்லாம் குறைசொல்வது கூட தவிர்க்கப்பட வேண்டும். அது தேவையற்ற சந்தேகங்களை மனதில் தோற்றுவிக்கும். இதன் விளைவாக பெற்றோரில் வெறுப்பும் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் உங்கள் குழந்தையுடன் அடுத்த வீட்டுக் குழந்தையை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். அவ்வாறு பேசுவதன் மூலம் குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை தன்னை அறியாமல் வளரும்.

பெற்றோர் தாம் எதிர்பார்ப்பதை குழந்தைகள் செய்யாதுவிடும்போது அடி உதைகளை எதிர்கொள்ள வேண்டும் என்ற நிலையில் இன்றும் பல குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் இருக்கத்தான் செய்கின்றன. அடி உதைகளுக்குப் பழகிப் போகும் குழந்தைகளின் மனதில் நாளடைவில் பயம் விட்டுப் போகும். அவர்களே பிற்காலத்தில் வன்முறையாளர்களாக மாறுகின்ற அபாயத்துக்கும் சாத்தியமுள்ளது. குழந்தைகள் மீதான வன்முறை என்பது ஒரு தீர்வு அன்று.

குழந்தைகளின் விருப்பங்களில் கவனம் செலுத்துங்கள். குழந்தைகள் கோபமாக இருந்தால் அப்போது அவர்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள். உங்களை எப்பொழுதும் அவர்களுடன் பேசுவதற்கு ஏற்ற நபராக வைத்துக்கொள்வதில் உறுதியாக இருங்கள். எப்பொழுதும் புரிந்துகொள்ளக் கூடியவராகவும் மற்றும் குழந்தைகள் பேசுவதை செவிமடுத்துக் கேட்பவராகவும் இருப்பதால் குழந்தைக்கும் பெற்றோருக்குமிடையிலான அன்பு வலுவடையும்.

குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதைவிட அவர்களை எப்படியெல்லாம் வளர்க்கக் கூடாது என்பதைத் தான் முதலில் பெற்றோர் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் குழந்தைப் பருவத்திலிருந்து சிறந்த எதிர்காலப் பிரஜையை உருவாக்க முடியும். உங்கள் குழந்தைகளை அதிகமாக நேசியுங்கள். அவர்களை நேசிக்காமல் உங்கள் வாழ்க்கை சிறக்காது. வாழ்க்கையில் நீங்கள் செய்யும் எந்தவொரு செயலும் அர்த்தம் தராது. உங்களது குழந்தை வளர்ப்பிலேயே குழந்தையின் எதிர் காலம் மட்டுமல்ல, உங்களின் எதிர் காலம் மட்டுமல்ல, சமுதாயத்தின் எதிர் காலம் மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலமே தங்கியுள்ளது. எனவே பெற்றோரே, குழந்தை வளர்ப்பில் கூடிய கவனம் செலுத்துங்கள். குடும்பம் சிறக்கும், நாடு சிறந்து விளங்கும்.




நல்லதொரு வழிதடத்தின்கீழ் குழந்தைகள் பயணிப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்குப் பெற்றோர் முன் மாதிரியானவர்களாகக் காணப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்பி மோகத்தால் உயிரிழந்த சிறுவன்

புதுடில்லி, மே 4
இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் செல்பி மோகத்தால் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். 15 வயதான ரமன்தீப் சிங், தந்தையின் கலிபர் துப்பாக்கியைத் தலையில்



வைத்து செல்பி எடுக்க முயற்சித்த போது, இந்தச்சம்பவம் இடம்பெற்றது. தன்னைத் தானே சுடுவது போன்று சைகை செய்து துப்பாக்கியை அழுத்தியதால், உயிரிழப்பு ஏற்பட்டது எனப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சம்பவம் இடம்பெற்றபோதும், சிறுவன் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தான். ஆனாலும் சிகிச்சை பயனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தான்.

செல்பி தொடர்பான உயிரிழப்புகளில் உலகளவில் இந்தியா முதலிடம் வகித்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக நடத்தப்பட்ட ஆய்வில், இந்தியாவில் இவ்வாறு 19 சாவுகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை- மும்பையில், செல்பி எடுக்க முடியாத இடங்கள் எனச் சில இடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# வட இந்தியாவில் பரவி வரும் காட்டுத் தீயினால் 7 பேர் சாவு



புதுடில்லி, மே 4
வட இந்தியாவில் பைன் மரக் காட்டுப் பகுதியில் காட்டுத் தீ பரவி வருகின்றது. காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். உத்தரகாந், கிமாச்சலப் பிரதேஷ் ஆகிய பகுதிகளில் எதிர்பாராத தீ விபத்து ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதில் தாம் போராடி வருகின்றோம் என அவர்கள் தெரிவித்தனர். தீயணைப்பு வீரர்களால் கட்டுப்படுத்த முடியாததால் உலங்கு வானூர்தியில் இருந்து நீர் பாய்ச்சி அடிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 23 சதுர கிலோ மீற்றர் அளவுக்கு தீ அணைக்கப்பட்டுள்ளது.

ஆனால், அடர்ந்த புகை காரணமாக தீ அணைப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது. 9 ஆயிரம் தீயணைப்புப் படையினர் காட்டுத் தீக்கு எதிராகக் கடும் முயற்சி மேற்கொண்டும் அதனைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. இதனால், 84 அவதானிப்பு மையங்கள் தீபரவுவது தொடர்பாக அவதானிக் கப்படவுள்ளன.

அடர்ந்த புகை காரணமாக பாதைகள் தெளிவின் மையால், வேறு பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் வரவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நிலையில் காட்டில் உள்ள மரங்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் அழிவடையும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தக் காட்டுத் தீயால் உத்தரகாண்ட் பிரதேசத்தின் 13 மாவட்டங்கள் பாதிப்படைந்துள்ளன. அத்துடன் இமாச்சலப் பிரதேசத்தில் 6 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே வட இந்தியாவில் வளி மாசடைந்துள்ள நிலையில், இந்தக் காட்டுத் தீ பெரும் சவாலைத் தோற்றுவித்துள்ளது. பறவைகளது இனப்பெருக்க காலம் என்பதால் இடப்பட்ட முட்டைகள் தீயில் அழிவடைந்துள்ளன என அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தியாவில் இந்த வருடத்தில் மாத்திரம், 20 ஆயிரத்து 667 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன என இந்திய சுற்றுச் சூழல் அமைச்சர் தெரிவித்தார்.
(த-ரி4)



தென் கொரியாவில் சியோல் நகரில் அமைந்துள்ள, யோகி புத்தர் விகாரையில் சிறுவர்கள் புத்த துற
நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தச் சடங்கில் துறவறத்துக்கு ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் துறவி
ரீதியாக அங்கீகரிக்கப்பட்டனர்.

# அமெ. ராணுவ அதிகா கண்ட இடத்தில் கெ

## விவரங்களை வெளியிட்டு பகிரங் அறிவிப்புச் செய்துள்ளது ஐ.எஸ்.

வொஷிங்டன், மே 4
ஐ.எஸ்ஸுக்கு எதிராகச் சிரியாவில் இடம்பெற்று வரும் தாக்குதல் நடவடிக்கைகளில், ஐ.எஸ் அமைப்பினர் பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றனர். இதனால் கோபம் அடைந்த அவர்கள் இந்தத் தாக்குதலுக்குக் காரணமான அமெரிக்க இராணுவ அதிகாரிகளை காணும் இடத்தில் கொலை செய்வதற்கான அறிவித்தலை வெளியிட்டுள்ளனர். இந்த அறிவித்தலில் 70 அமெரிக்க இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனச் சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.எஸ். அமைப்பின் இணைய வல்லுநர்கள் மூலம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. பிரிட்டனை மையமாகக்கொண்டு இயங்கும் இவர்கள் தம்மை ஐ.எஸ். அமைப்பின் இணைய ஊடுருவிகள் என பிரகடனப்படுத்தியதுடன், அமெரிக்காவின் 70 இராணுவ அதிகாரிகள், அவர்களின் ஆதரவாளர்கள், அனைவரும் காணும் இடத்தில் கொலை செய்யப்படுவர் எனவும் கூறியுள்ளனர்.

பிரிட்டன் பாதுகாப்புப் பணியகத்தின் இரகசிய உளவுத்துறை பிரிவினரின் விவரமும் இவ்வாறு வெளிவரும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த எச்சரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

அமெரிக்கர்களே, நீங்கள் நடத்தும் அறப்போரில் உங்கள் ஆத்திரத்தால் நீங்களே அழிவீர்கள். உங்கள் இராணுவத்தினருக்கு தைரியம் இல்லை. உங்கள் ஜனாதி




ஐ.எஸ். அமைப்பின் இணைய வல்லு
இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள
மையமாகக்கொண்டு இயங்கும் இ
ஐ.எஸ். அமைப்பின் இணைய ஊடுருவிகள்
படுத்தியதுடன், அமெரிக்காவின் 70 இராணு
அவர்களின் ஆதரவாளர்கள், அனைவரையு
இடத்தில் கொலை செய்யப்படுவர் எனவும் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவிகளாகும் சடங்கு
றவியாகச் சம்பிரதாய
(த-ரி4)



ஸ்பெயினின் கட்டலோனியாப் பகுதியில் டைனோசரின் விலங்கினப் பிரிவின் விலங்கொன்றின் கால் தடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது 230 மில்லியன் ஆண்டுகள் பழைமை வாய்ந்தது எனத் தகவல் வெளியாகியுள்ளது. டைனோசர் இது முதலை ஆகியவற்றின் கலப்பு உருவமைப்பை உடைய விலங்கினத்தின் உருவமைப்பாகும். கடந்த மாதம் தற்செயலாக அந்தப் பகுதியில் நடந்து சென்றவேளை இது கண்டுபிடிக்கப்பட்டது. (த-ரி4)

# ...ாரிகள் 70 பேர் ...கொல்லப்படுவர்

## ...ங்க ...அமைப்பு



...ல்லுநர்கள் மூலம் ...ளது. பிரிட்டனை ...இவர்கள் தம்மை ...ள் என பிரகடனப் ...றுவ அதிகாரிகள், ...யும் காணும் ...றியுள்ளனர்.

பதிக்குப் படையினரை அனுப்பு வதற்குத் துணிவில்லை. ஆயிரக் கணக்கான மைல்கள் தொலைவில் இருந்து கட்டுப்பாட்டு சமிக்ஞை மூலம் எம்மோடு போராடுகிறீர்கள். வெளியிடப்பட்டுள்ள இந்த 70 இராணுவத்தினரின் உயிர்கள் உலகளவில் வேட்டையாடப்படும்.

ஐ.எஸ்ஸுக்கு எதிராகப் பணிபுரியும் பிரிட்டன் உளவுத்துறையினரின் பெயர்ப் பட்டியல்கள் அடுத்து வெளியாகும். இங்கிலாந்தில் இருந்து அமெரிக்காவுக்கு இரகசியத் தக வல்கள் பரிமாறப்படும் இணைய வழியை நாம் முடக்குவோம்- என்றுள்ளது.

இந்த ஆவணத்தில், அமெரிக்காவின் சுதந்திரத்தேவி சிலையின் தலை துண்டாடப்பட்டது போன்ற படமும் வெளியிடப்பட்டது. ஐ.எஸ். அமைப்பின் இணைய ஊடுருவல் அமைப்பின் முன்னாள் அதிகாரி, பிரிட்டனைச் சேர்ந்த யுனாய்ட் குசைன் ஆவார். இவர் கடந்த வருடம் அமெரிக்க வான் தாக்குதலில் உயிரிழந்தார். இவரது மனைவி குறித்த அமைப்பினரை இயக்குவதாக உளவுத்துறையினரால் நம்பப்படுகிறது.

இந்தத் தகவலை அடுத்து நடத்திய ஆய்வில், ஐ.எஸ். அமைப்பினரால் வெளியிடப்பட்ட பெயர்கள் உண்மையானவை என உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஐ.எஸ். அமைப்பினருக்கு உறுதியான தகவல் வழங்கப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் அவர்கள் இணைய ஊடுருவல் ஒன்[illegible] நடத்தியிருக்கவேண்டும் என நிபுணர்[illegible] தெரிவித்துள்ளனர். (த-ரி4)

# பொது இடத்தில் வைத்து தண்ணீர் அருந்தினால் 750 யூரோ அபராதம்

வொஷிங்டன், மே 4

அமெரிக்காவில் அமைந்துள்ள ஐபைசா தீவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள், பொது இடத்தில் வைத்து தண்ணீர் அருந்தினால் அபராதம் விதிக்கப்படும் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சட்டம் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சான் அன்டனியோ நகரில் அமைந்துள்ளது ஐபைசா தீவு, மனதுக்கு மிகவும் அமைதி தரும் தீவு என்பதால் இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் செல்வர். அங்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள், பொது இடங்களில் வைத்து மது அருந்திவிட்டு பிரச்சினைகளில் ஈடுபடுவதாக அதிகமான முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைத்து வந்தன.

ஆனால், கையில் போத்தல்களை வைத்துக் குடிப்பதால் அவர்கள் மது அருந்துகிறார்களா அல்லது தண்ணீர் அருந்துகிறார்களா, என்று கண்டு பிடிப்பதில் பொலிஸாருக்குச் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து, சுற்றுலாத்துறை நிர்வாகம் பொது இடங்களில் வைத்து மது, குளிர்பானங்கள் மற்றும் தண்ணீர்கூட அருந்தக் கூடாது என அறிவித்துள்ளது.



அதனை மீறி அருந்தினால் 750 யூரோ அபராதம் விதிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

ஆனால், கோடை காலங்களில் இந்த தீவில் வெப்பம் மிகுதியாக இருக்கும். இதனால் மக்கள் அதிக அளவில் பாதிக்கப்படுவர், எனவே இந்தச் சட்டம் குறித்து மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என மக்கள் கட்சி கவுன்சிலர் ஜோஸ் சாலா கூறியுள்ளார். ஆனால், அங்கு உள்ள விடுதிகளில் சென்று விரும்பியவற்றை அருந்தலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த-ரி4)

# ஐ.எஸ். தாக்குதல் பட்டியலில் சுவிட்சர்லாந்தும் உள்ளடக்கம்

பேர்ண், மே.4


சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பிற ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் 400 ஜிகாதிகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இரகசியமாகக் கண்காணித்து வருவதாகச் சுவிஸ் புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

சுவிஸில் உள்ள பேர்ண் நகரில் நேற்று முன்தினம் புலனாய்வுத் துறையின் தலைவரான மார்க்குஸ் சீலர் பத்திரிகையாளர் சந்[illegible] இந்த[illegible] அவர், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடிய நாடுகளின் பட்டியலில் சுவிட்சர்லாந்து இல்லாமல் இருந்தாலும் கூட, சுவிஸ் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுக்குத் தீவிரவாதிகளின் மூலம் அச்சுறுத்தல் உள்ளது என்பது உண்மை தான்.

ஐ.எஸ் அமைப்பினால் குறி வைக்கப்பட்ட 60 நாட்டுக் கொடிகளுள் சுவிஸ் நாட்டின் கொடியும் உள்ளடங்கும். மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணிக்கும் சுவிஸ் நாட்டவர்கள் நாடு திரும்பியவுடன் கடுமையாக கண்காணிக்கப்படுகின்றனர். அவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று போர்ப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இவ்வாறு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சுமார் 400 ஜிகாதிகளின் சமூக வலைத்தளங்களைப் புலனாய்வு அதிகாரிகள் இரகசியமாகக் கண்காணித்து வருகின்றனர். தீவிரவாத அமைப்பில் சேர்வதற்காக இதுவரை 73 பேர் சுவிட்சர்லாந்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். ஆனால், 2016 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் எவரும் அவ்விதம் வெளியேறவில்லை -என்றார். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய வரலாறு எழுதுதலில் ஈழத்து அறிஞர்களின் பங்களிப்பு

ம.பா.மகாலிங்கசிவம்
ம.பா.பாலமுரளி

இந்தக் கட்டுரை பின்வரும் தலைப்புக்களின் கீழ் அமைகிறது.

**தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் முறையை ஆரம்பித்துப் படிப்படியாக வளர்த்தெடுத்துச் சென்றதில் ஈழத்துத் தமிழறிஞர்களும் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். இந்த வகையில் தமிழ் இலக்கிய வரலாறும் அதன் ஒரு பகுதியாகிய எழுதப்படும் முயற்சிகளுக்கு ஈழத்து அறிஞர்கள் எத்தகைய பங்களிப்புக்களை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை ஆராய்வதாக இந்தத் தொடர் கட்டுரை அமைகின்றது.**

**1. இலக்கிய வரலாறு என்னும் பயில்துறை**

சுருக்க அறிமுகம்

ஆங்கிலத்தில் History of literature, literary history என்னும் பெயர்களால் அழைக்கப்படும் இது தமிழில், இலக்கிய வரலாறு என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் இலக்கிய வரலாற்றுத் துறையின் ஆரம்ப காலகட்டத்தை நோக்கினால் முதன்முதலாக இலக்கிய வரலாற்றை எழுத முயன்ற பெருமை செலகல் என்ற இரட்டையரையே சேரும் என்றும், உலகப் பொது இலக்கிய வரலாறு ஒன்றை வரலாற்றுப் பின்னணியுடன் பரந்த அளவில் குறிப்பிடத்தக்க அழுத்தமான அறிவுடன் அவர்கள் எழுத முயன்றனர் என்றும் பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். (தமிழில் இலக்கிய வரலாறு) செலகல் இரட்டையரின் இலக்கிய வரலாற்று முயற்சிகளை அறிந்த மேலைத் தேசத்தில் பலரும் 19 ஆம் நூற்றாண்டிலே செலகலின் வழியில் இலக்கிய வரலாறுகளை எழுத முயன்றனர்.

ஆங்கிலேயரின் வருகையால் கிடைத்த ஆங்கிலமொழிக் கல்வி வழியாகத் தமிழுக்குக் கிடைத்த சிறுகதை, நாவல், புதுக்கவிதை முதலிய இலக்கிய வடிவங்களைப்போல அறிமுகமான இன்னொரு துறையே இலக்கிய வரலாறு என்னும் புதிய பயில்துறையாகும்.

1936 இல் கா.சுப்பிரமணியபிள்ளையால் எழுதப்பட்ட இலக்கிய வரலாறு என்னும் நூலுடனேயே இலக்கிய வரலாறு என்னும் தொடர் தமிழருக்கு அறிமுகமானது எனலாம். இலக்கிய வரலாறு என்றால் என்னவென ஆராய்வதற்கு முதலிலே இலக்கியம் என்றால் என்னவெனத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இலக்கியம் என்பதற்கு நேரான பொருள் உடைய வடசொல் சாகித்தியம் என்பர். அந்தச் சொல்லையே சிங்களத்திலும் இலக்கியத்தைக் குறிக்கப் பயன்படுத்துவர். சாகித்ய என்பதன் அடிச்சொல் சகித என்பதாகும். சகித என்பதற்குச் சிறப்பாகக் கூறப்பட்டது என்பது பொருளாகும்.

மொழியின் வரம் பாக அமையும் யாப்புக்கும் கவிதைக்கும் அழகு தரும் அலங்காரங் களுக்கும் ஏற்ப கவிஞர்களால் சிறப்பாக ஆக்கப்பட்டதே இலக்கியம் என்பது இதன் பொருளாகும்.

இலக்கியம் என்பதற்கான தமிழ் மரபு நிலைப்பட்ட விளக்கத்தைப் பண்டிதர் கா. பொ.இரத்தினம் இலக்கியம் என்னும் சொல் லக்ஷயம் என்னும் வடமொழிச் சொல்லின் திரிபென்றும், லக்ஷ்மி என்பது இலக்குமி என்றாகியதுபோல லக்ஷயம் என்பது இலக்கியம் என்றாகியது என்றும், அது நோக்கம் குறிக்கோள் முதலிய பொருள்களை உடையது என்றும் சிலர் கூறுவர். வேறு சிலர் இலக்கணை யாற்பொருள் கொள்ளக் கிடப்பது இலக்கியம் என்றும் இலக்கணை என்பது குறிப்பென்றும் உரைப்பர். இலக்கியம், இலக்கணம் என்பவை தமிழ்ச் சொற்களே என்றும் இலக்கு என்னும் பகுதி முதலில் இலையை உணர்த்திப் பின் (இலையில் எழுதப்பட்ட) எழுத்தைக் குறித்தது என்றும் அஃதே, ஆகுபெயராய் நூலையும் நூற்றொகுதியையும் குறிக்கின்றது எனத் தருகின்றார்.

இலக்கியம் பற்றித் தெளிவுபடுத்திக் கொண்ட பின்னர் இலக்கிய வரலாறு என்றால் என்ன? என்பது ஆராயப்பட வேண்டும். இலக்கிய வரலாறு பற்றி அறிஞர்கள் பலரும் தத்தம் நோக்கு நிலைப்பட்ட வரைவிலக் கணங்களை முன்வைத்துள்ளனர். இலக்கிய வரலாறு என்னும் தொடர் தமிழில் இரு வகைகளில் பொருள் கொள்ளப்பட்டு வந்துள்ளது. ஒரு வகையினர் இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தினது வரலாறு என்றும், இன்னொரு வகையினர் இலக்கியத்தின் வழி வரலாறு என்றும் கருதினர்.

இவற்றுள் இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தினது வரலாறுதான் எனக்கொண்டவர்கள், இலக்கியங்களைக் குறித்த கால ஒழுங்கிலே வகைப்படுத்தி அவற்றின் பண்பு, பொருள் மரபு என்பவற்றைக் கூறுவதே இலக்கிய வரலாற் றின் பணி எனக் கருதினர். தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்களுள் பெரும்பாலானவர்கள் இந்தக் கருத்து நிலை உடையோ ராகவே காணப்படுகின்றனர். பேராசிரியர் வி.செல்வநாயகம் தமது தமிழ் இலக்கிய வரலாற்று நூன் முகத்தில்,

இலக்கியங்களைக் காலவரன் முறையை ஒட்டி ஆரா யும் நூல்கள் இலக்கிய வரலாற்று நூல்கள் எனப்படும். இலக்கியங்களை ஆராய்வதோடும், இலக்கிய ஆசிரியர்களது வாழ்க்கையைக் கூறுவதோடும் அது நின்றுவிடுவதில்லை. காலத்துக்குக் காலம் மாற்றமுற்றுச் செல்லும் இலக்கியப் போக்கையும், அதற்குக் காரணமாயிருந்தவற்றையும் இலக்கிய வரலாற்று நூல் ஆங்காங்கு குறித்துச் செல்லும் எனக் கூறுவதும், கா.சுப்பிரமணிய பிள்ளை ஒரு மொழியின் இலக்கிய வரலாறானது, அந்த மொழியிலுள்ள செவ்விய நூல்களின் தோற்றத்தையும் தன்மையையும் காலமுறைக்கேற்ப வகுத்துக் காட்டி அந்த மொழி பேசும் மக்களது கருத்துக்கள் இலக்கியங்களுள் எம்முறையிலமைந்துள்ளன எனத் தெரிந்து, இலக்கியமென்பது மக்களது வாழ்க்கைப் படம் என்று தெளிவுற அறிவுறுத்தும் கருவி நூலாம் எனக் கூறுவதும் இலக்கிய வரலாறு என்றால் இலக்கியத்தினது வரலாறுதான் என அவர்கள் கருதியமையைத் தெளிவுபடுத்துகிறது.

இன்னொரு சாராரோ, இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தின் வழி வரலாறுதான் எனக் கருதினர். அதாவது இலக்கியத்தின் வழியாகக் குறித்த இலக்கியம் எழுந்த காலச்சமூக வரலாற்றை அறிந்து கொள்வதே இலக்கிய வரலாறு என இவர்கள் வலியுறுத்தினர்.

இலக்கியத்தின் வரலாறு இலக்கிய வழி வரலாறு ஆகாது. இலக்கியத்தின் வரலாறு என்பது சமூகத்தின் இலக்கியம் அதற்குரிய பண்புகளோடு வளர்ந்த முறையை எடுத்துக் கூறுவது. ஆனால் உண்மையான இலக்கிய வரலாறு என்பது ஒரு சமுதாயத்தின் வரலாற்றை அதன் அடி நாதங்கள், வெளிப்பாடுகள், தாக்கங்கள் ஆகியவை கொண்டு எடுத்துக் கூறுவதாகும். என்னும் கா.சிவத்தம்பியின் கூற்றில் இலக்கிய வழி வரலாறு பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது.

இலக்கிய வரலாற்று ஆசிரியன் என்பவன் அரசியல் வரலாற்றாசிரியன், பொருளாதார வரலாற்றாசிரியன், பண்பாட்டு வரலாற்றாசிரியன் ஆகியோரிடையே தானும் ஒரு வரலாற்றாசிரியனாக உள்ளான். எனவே ஏனைய வரலாற்றாசிரியர்கள் எவ்வாறு தமக்குக் கிடைத்த கல்வெட்டுக்கள், செப்பேடுகள், முன்னோர் பயன்படுத்திய பொருள்கள் என்பவற்றில் இருந்து வரலாற்றை அறிந்து கொள்கின்றனரோ அவ்வாறே இலக்கிய வரலாற்றாசிரியனும் தனக்குக்கிடைக்கும் இலக்கியங்களின் வழியாக மனித வரலாற்றை அறிந்து கூற வேண்டுமென இவர்கள் கருதினர். ஒரு நாட்டினது அல்லது ஒரு மொழிக் கூட்டத்தினது வரலாற்றை அவர்களது இலக்கியத்தின் வழியாகப் பார்க்கும் இந் தப் பயில்துறை ஆங்கிலத்தில் லிற்றறறி ஹிஸ்றறி என அழைக்கப்படும்.



இந்தப் பின்னணியில் ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பரப்பை எடுத்து நோக்கினால் 1859இல் வெளிவந்த சைமன் காசிச் செட்டியின் Tamil Plutarch தொடக்கம், இன்றுவரை புலவர் வரலாறுகளும் இலக்கிய வரலாறுகளும் வெளிவந்த வண்ணமே உள்ளன.

ஆரம்பத்தில் பொதுவான தமிழ்ப் புலவர் வரலாறாகவும், தமிழ் இலக்கிய வரலாறாகவும் அமைந்த ஈழத்து இலக்கிய வரலாற்றுத்துறை பின்னர் எவ்வாறு படிப்படியாக ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறாகவும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறாகவும் மாற்றமுற்று வளர்ச்சி அடைந்தது என்பதை இந்தக் கட்டுரை விளக்குகின்றது.

(தொடரும்...)



**இலக்கியத்தின் வரலாறு என்பது, சமூகத்தின் இலக்கியம் அதற்குரிய பண்புகளோடு வளர்ந்த முறையை எடுத்துக் கூறுவது. ஆனால் உண்மையான இலக்கிய வரலாறு என்பது ஒரு சமுதாயத்தின் வரலாற்றை அதன் அடி நாதங்கள், வெளிப்பாடுகள், தாக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டு எடுத்துக் கூறுவதாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரிசனங்கள்-5

அப்புச்சி

கவிதை என்றால் என்ன என்பதற்கு கவி ஞர்களிடம் பல்வகைக் கருத்துக்கள் உள்ளன. இந்தக் கருத்துக்கள் அவர்களின் வாசிப்பினோடு கூடிய அனுபவத்திலிருந்தும், சுய எண்ணங்களின் வெளிப்பாடுகளிலிருந்தும் அமைவதுண்டு.

புதிதானாலும், மரபானாலும் ஒரு விடயத்தைச் சுருங்கக் கூறி வாசகனுக்கு விளங்க வைப்பதே கவிதை. அதாவது, ஒரு நாவலிலோ, அன்றி சிறு கதையிலோ உள்ள உள்ளடக்கத்தை, ஆகக் குறைந்தது ஐந்து அல்லது ஆறு வரிகளுக்குள் அடக்கி, வெளிப்படுத்தி நிற்பதே கவிதை.

இராமாயணம் ஒரு மிகப்பெரிய காவியம். அதில் தசரதனுக்கு மனைவிகள் பலர் இருந்தனர் எனவும் அவர்களால் தசரதனுக்குஎந்தவிதப்பிரச்சினைகளும் இருக்கவில்லையென்றும் கூறுவதுடன், அவரது மகன் இராமனுக்கு சீதாப்பிராட்டி எனும் ஒரு மனைவியால் ஏற்படும் பிரச்சினைகளை அந்தக் காவியம் விளக்குகிறது. இதையே ஒரு கவிஞன் (கபிலன்) சுருக்கமாக விளங்க வைக்கிறார்.

அப்பனுக்கு
ஆயிரம் பொண்டாட்டி
ஒரு பிரச்சினையுமில்லை.
மகனுக்கு
ஒரேயொரு மனைவி
ஏகப்பட்ட பிரச்சினைகள்!

சில கவிதைகள் நீட்டிமுழக்கி வருவதுண்டு. அந்த வகைக் கவிதைகள் நிகழ்வைப் பிரதிபலிப்பதாகவும், ஓசைநயம், சிக்கலற்ற சொற் சேர்க்கை, கருத்தின் வெளிப்படைத் தன்மை போன்றவற்றை அலங்கரித்து வருவதாகவும் அமைவதுண்டு.

அதேசமயம், கவிஞன் தனது மனதைப் பாதித்த விடயத்தை வரிகளால் வெளிப்படையாக வெளிப்படுத்த முடியாத புறக் காரணிகள் உருவாகும்போது, அந்த வரிகளுக்குப் பதிலாக வேறு வடிவத்தில் (படிமம், குறியீடு) அவற்றைப் பூடகமாக வெளிப்படுத்தி விடுகிறான்.

அவனும்
அடித்தடித்துக்
களைத்தே போய்விட்டான்
ஆயினும்
தொடர்கிறது
இரத்தம் குடிக்கும் வெறித்தனம்
நுளம்புகளுக்கு!

இந்தக் கவிதையை மேலோட்டமாகப் பார்க்கும்போது ஒருவன் படுக்கையில் இருந்து நுளம்புகளோடு போராடுவதான காட்சியை வெளிப்படுத்தும். ஆனால், இந்தக் கவிதையானது புலிகள் இராணுவத்தினரின் களமுனைப் போர் பற்றி மறைமுகமாக வெளிப்படுத்துகிறது. குறிப்பாக ஜயசிக்குறு நடவடிக்கையைக் கூறலாம்.

ஆனால், இந்த வகைக் கவிதைகள் எல்லோருக்கும் புரியும்படியாக அமைவதில்லை. அதிலும், அடிமட்ட வாசகனுக்கு சிலசமயம் புரிந்தும், புரியாமலும் போய்விடுகிறது.

புரியாத இந்தக் கவிதைகளை திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டும்... என்ற ஒரு சிலரது கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. எந்தவொரு படைப்பையும் வாசகன் படித்து முடிக்கும்போது அது அவனுள் உணர்வு (ஏக்கம், இரக்கம், அனுதாபம், துயரம், கோபம்) ரீதியான ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் அந்தப் படைப்பானது வாசிக்கும் வாசகனுக்குள் உயிர்ப்புப் பெறும்! உறங்காமல் நிலைக்கும். இந்த உயிர்ப்பும், உறங்கா நிலையும் எழுதுபவனின் ஆளுமையைப் பொறுத்தே அமைகிறது.

ஒரு நல்ல கவிதை என்பது மனித சமுதாயத்தின் மகிழ்ச்சிப் பெருக்கத்துக்கு உதவுமானால், ஒடுக்கப்பட்டவர்களை விடுதலை செய்யுமானால், எம்மைப் பற்றியும், இந்த உலகைப் பற்றியும் அறிந்து கொள்ள உதவுமானால், இந்த உலகில் எமது வாழ்வு பயன்பட உதவுமானால் அதுவே சிறந்த கவிதைக் கலை என்கிறார் வால்டத் பேட்டர் என்பவர்.

கவிஞனுக்குள் எப்பொழுதும் ஒரு கொதிநிலை இருக்க வேண்டும். இந்தக் கொதிநிலை என்பது சக கவிஞனோடு முட்டி மோதுவதற்கானதல்ல. அதாவது, பாரதி போல் சிறுமை கண்டு பொங்கியெழும் அவனது உணர்வு, கவி வடிவில் வெளிப்பட வேண்டும்.

இந்திய இராணுவம் அமைதிப்படை எனும் பெயரில் இங்கு வந்து தமிழ் மக்களுக்குச் செய்த அட்டூழியங்களை எவரும் மறந்து விடமுடியாது. தமிழ் மக்களையும், அவர்களுக்கான ஒரு போராட்ட அமைப்பையும் சிறு அற்பப் புழுக்களென நினைத்து, தனது அராஜகச் செயற்பாடுகளை நடத்தியபோது, கவிஞர் புதுவை இரத்தினதுரையின் மனக்கொதிநிலை அவரது கவிதையில் பின்வருமாறு வெளிப்படுகிறது.

...ஈழமண் என்பதுவும்
பஞ்சாப்பா அன்றி
பாகிஸ்தான் பனிநிலமா?
அஞ்சி ஒடுங்குவதற்கு
அசாமின் சிறு குழுவா?
இல்லையடா தமிழ் ஈழம்
எரிமலையின் வாசலடா...

கண்கள் காணும் காட்சிகளை கவிஞன் தன்னுள் உள்வாங்கும்போது கவி உணர்வுகள் வரிவடிவங்களாய் விரிவடைய வேண்டும். இந்த விரிதல் நிகழ்வு சொற்சிக்கனமாகவும், எளிய மொழிநடையாகவும் ஓசைநயத்துடனும் அமைதல் வேண்டும்.

பார்வையைத் தாக்கும் விடயங்கள் கவிஞனுக்குள் பாதிப்பை ஏற்படுத்தும்போது, அவன் அந்த உணர்வைக் கவிதையாக்குகின்றான்.

முன்பெல்லாம் கொழும்புகாலிமுகத் திடலில் அரசியல் ரீதியான போராட்டங்களின்போது, கலவரம் நடப்பது வழமை. அப்படியொரு கலவரத்தின்மீது பதிந்த ஒரு கவிஞனின் (மனுஷ்யபுத்திரன்) பார்வை இலகு மொழிநடையில் சொற் சிக்கனத்துடன் கவிதையாக இவ்வாறு பதிகிறது.

அங்கே ஒரு பெரிய கலவரம்
அப்போதுதான்
ஓய்ந்தது என்றார்கள்.
காலி மைதான மெங்கும்
செருப்புகள்
சிதறிக் கிடந்தன.
எனக்கு
வேறொன்றையும்
பார்க்க வேண்டியிருக்கவில்லை.

காலிமுகத் திடலில் சிதறிக் கிடந்த செருப்புகளின் தன்மையைக் கொண்டு, கலவரத்தின் உச்சநிலையைப் புரிந்து கொள்கிறார் கவிஞர்.

எனக்கு வேறொன்றையும் பார்க்க வேண்டியிருக்கவில்லை... எனக் கவிதையைப் பதிவு செய்வதிலிருந்து சிதறிக் கிடந்த செருப்புகளூடாக அந்தக் களநிலையை விளங்கிக் கொள்ள வாசகனிடமே விட்டு விடுகிறார்.

இவை தவிர, இங்கே ஆரம்பத்தில் கூறப்பட்டமை போன்று, சுருங்கக் கூறி வாசகனுக்கு விளங்க வைப்பதற்கு கருத்தாழத்தோடும், எள்ளல் ஏளனத்தோடும் கவிஞர்கள் எழுதிய பல கவிதைகள் உள்ளன . அவற்றில் அலெக்ஸ் பரந்தாமனின் சில கவிதைகள் இவை.

கோயில் திருவிழாக் காலங்களில் பெண்கள் அளவுக்கு அதிகமாக நகைகளை அணிந்து செல்வதால், ஏற்படும் விபரீதத்தை 'கைமாறு' எனும் இந்தக் கவிதை வெளிப்படுத்துகிறது.

கௌரிக்காப்பு கட்டப்போய்
கையிலுள்ள
பவுண்காப்பை
இழந்து வந்தாள் பத்தினி!

மனஅமைதி வேண்டி ஆலயங்களுக்குச் சென்றால், அங்கு நிகழும் சில சம்பவங்கள் மேலும் மனப்பாரத்தையே அதிகரிக்கும். அங்குள்ள ஒரு சிலரின் செயற்பாடுகள் ஆலயத்தின் ஒட்டுமொத்த புனிதத் தன்மையையே கெடுத்துவிடும். இறைவனின் சந்நி தானத்தில் கூட பணமே பிரதானமாயுள்ளதை 'காசே தான் கடவுளப்பா' எனும் இந்தக் கவிதை சுட்டி நிற்கிறது.

தட்டத்தில் வைக்க
அர்ச்சனைப் பணம்
அதிகமில்லை.
பெயரும் நட்சத்திரமும்
பின்னடிக்கின்றன
அந்தணரின் வாயிலிருந்து!

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட நிகழ்வைச் சுருக்கமாக விவரிக்கிறது இன்னொரு கவிதை.

நாய்கள்
செய்யும் வேலையை
இப்பொழுது
மனிதர்கள் செய்வதால்
ஊருக்குள்
மனக்குழப்பத்தில் நிற்கின்றன
தெருநாய்கள்!

இவ்வாறான நிகழ்வியல்களை வெளிப்படையாய் வெளிப்படுத்தும் கவிதைகளை நவீனத்தை விரும்புவோர் நிராகரிக்கலாம். ஆயினும், இந்த வெளிப்படைத் தன்மை மூலம் பாமர வாசகனுக்குத் தனது படைப்பைப் பற்றிப் புரிய வைப்பதில் வெற்றி கொள்கிறான் கவிஞன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வரலாற்றுச் சின்னங்கள்

அ.அஜித்



இந்தியவரலாற்றுச்சின்னங்களில் பல காலத்தால் மிக முந்தியவை. இந்திய வரலாற்றில் மிக முக்கியத்துவம் கொண்டவை. அவற்றில் மிக முக்கியமான சிலவற்றைப் பற்றி இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

**(ஒரிசா) சூரியக் கோயில்- கொனார்க்**
ஏழு குதிரைகளால் இழுக்கப்படும் 12 ஜோடி சக்கரங்கள் கொண்ட சூரியக் கடவுளின் தேர் வடிவில் அமைக்கப் பட்டுள்ளது. முதலாம் நரசிம்ம தேவா மன்னரால் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

**(தமிழ்நாடு) மதுரை மீனாட்சி சுந்தரேசர் ஆலயம்**
கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த ஆலயத்தில் 3 கோடி சிற்பங்கள் உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. சிற்பக் கலை நிறைந்த ஆயிரங்கால் மண டபம், புது மண்டபம் ஒரே கல்லில் இசைத் தூண்கள் அமைந்துள்ளன. மதுரை, கோயில் மாநகர் என்று அழைக்கப்படுகின்றது.

**(டில்லி) இந்தியா கேட்**
முதலாம் உலகப் போரில் இறந்த சுமார் 90,000 இந்தியவீரர்களின்நினைவாகக் கட்டப்பட்டுள்ளது. 13,516 வீரர்களின் பெயர்கள் இதில்பொறிக்கப்பட்டுள்ளன. அமர் ஜோதி எனும் அணையா விளக்கு 1971 முதல் எரிந்து கொண்டிருக்கின்றது.

**(டில்லி) குடியரசுத் தலைவர் மாளிகை**
இந்திய குடியரசுத் தலைவர் மாளிகை 330 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இது 340 அறைகள் கொண்டது. 37 வர வேற்பு அறைகள், 74 லாபிகள், ஒரு கிலோ மீற்றர் நீளமுள்ள விறாந்தை, 37 நீரூற்றுக்கள், 18 மாடிப் படிகள் காணப்படுகின்றன.

**(டில்லி) செங்கோட்டை**
17 ஆம் நூற்றாண்டில் மன்னர் ஷாஜஹானால் கட்டப்பட்டது. டில்லி செங் கோட்டை மொகலாயர்களின் தலைமைப் பீடமாக 1857 வரை இருந்துள்ளது. கலையழகு படைத்த கட்டடங்கள் உள்ளன. இதன் சுற்றளவு 2 கிலோ மீற்றர் தூரமாகும்.

**(டில்லி) குதுப்மினார்**
13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட குதுப்மினார் அடிமை வம்சத்தின் குத்புதீன் ஐபத்தலை வெற்றியின் அடையாளச் சின்னமாக கட்டப்பட்டது. 72.5 மீற்றர் உயரம் கொண்ட கட்டடத்தில் ஐந்து மாடிகளும் உள்ளன. சிவப்பு மண்ணால் கட்டப்பட்டு உள்ளது. குரானின் வாசகங்களே இங்கே பொறிக்கப்பட்டுள்ளன.



**(டில்லி) பஹாய் ஆலயம்**
தாமரை வடிவமான பளிங்குக்கல் ஆலயமா கும். இது 21 ஆம் நூற்றாண்டின் தாஜ்மகால் என்று அழைக்கப்படுகின்றது.

**(மும்பை) கேப்**
பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜோர்ஜ் மற்றும் அரசி மேரி 1911 இல் இந்தியாவுக்கு வந் தார்கள். இவர்களின் இந்தியப் பயணத்தின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. பிரிட்டிஷ் படையின் இறுதி அணி இதன் வழியாக வெளியேறியது.

**(குஜராத்) ஷத்குஞ்சயா மலைக் கோயில்கள்**
சுமார் 1,000 ஜைனக் கோயில்களால் சூழப்பட்ட மலை. 900 ஆண்டுகளுக்குமுன் முழுமையும் பளிங்கினால் கட்டப்பட்டவை இது ஜைனர்களின் புனித தலமாகும்.

**(மத்திய பிரதேசம்) சாஞ்சி தூபி**
120 அடி விட்டம் கொண்ட அரைக் கோணம், புத்தரின் நினைவுப் பொருள் கள் இங்கு இருப்பதாக நம்பப்படுகிறது.

**(குஜராத்) சோமநாத் ஆலயம்**
சந்திரக் கடவுளால் கட்டப்பட்டதாக நம்பப்படும் புராதனக் கோயில். இதன் செல்வங்களை பலமுறை கஜினி முகமது கொள்ளையடித்தார். அலாவுதீன் கில்ஜி மற்றும் ஔரங்கசீப்பின் தாக்குதலுக்கு இலக்கானது. ஒவ்வொரு தாக்குதலுக்குப் பின்னரும் புதிதாகக் கட்டப்பட்டமை இதன் சிறப்பம்சமாகும்.

**(பஞ்சாப்) பொற் கோயில்**
சீக்கியர்களின் புனிதஸ்தலம், தங்கத் தகடுகளால் வேயப்பட்டவை. சீக்கியர் களின் புனித நூலான குரு கிரந்தசாகிப், இதன் உள்ளே வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோயில் 1577 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

**(மகாராஷ்டிரம்) கைலாஷ் ஆலயம் எல்லோரா**
இந்தியாவின் மிகப்பெரிய ஆலயம். கி.பி 760 இல் ஆண்ட இரண்டாம் கிருஷ்ணனால் கட்டப்பட்டது.

**(உத்தரப்பிரதேசம்) ஆக்ரா தாஜ்மகால்**
1630 , 1648 கால கட்டத்தில் இஸ்லாமிய மன்னர் ஷாஜகானால் பளிங்குக் கற்களால் உருவாக்கப் பட்டது. இது ஓர் இஸ்லாமிய கலைப் பொக்கிசம். சித்திரா பௌர்ணமியின்போது தாஜ்மகால் ஜெகஜோ தியாக ஜொலிப்பதைக் காணலாம்.

**(கர்நாடகம்) பீஜப்பூர் கோல் கும்பாஸ்**
இதன் மேற்கூரை உலகின் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன் ஒலி அரங்கு மிகவும் புகழ் பெற் றது. மிகச் சிறிய சப்தம் கூட கட்டடத்தின் சகல பகுதிகளுக்கும் ஒலிக்கும் சிறப்புக் கொண்டது. 17 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது.



**(ஒரிசா) பூரி ஜகன்னாதர் ஆலயம்**
உலகக் கடவுளின் 65 மீற்றர் உயரக் கோயில் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கோயிலில் சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன. ஜூன் மாதம் நடை பெறும் தேரோட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தது

**(மத்திய பிரதேசம்) கஜிராஹோ கோயில்**
இந்தக் கோயில் உலகில் கலை நயம்மிக்க அற்புதங்களில் ஒன்று. பாலுறவுக் காட்சிகள் பல இந்தச் சிற்பங்களில் இருப்பது பல சர்ச்சைகளை உருவாக்கியது. கலையழகும், ,சிற்ப எழிலும் கொண்ட 22 கோயில்கள் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

**(கொல்கத்தா) விக்டோரியா நினைவகம்**
மகாராணி விக்டோரியாவின் நினைவைப் போற்றும் வகையில் கட்டப்பட்ட ஒரு பளிங்கு நினைவாலயமாகும்.

**(பீகார்) புத்தகாயா மகாபுத்தர் ஆலயம்**
புத்தர் ஞானம் பெற்ற இடத்தை அடையாளமிட்டுக் கட்டப்பட்டது. 1170 அடி உயரம் உள்ள இது, முழுவதுமாக செங்கல்லால் கட்டப்பட்டதாகும்.





## சிறுவர்களுக்கான நூல் வெளியீடு

கலாபூசணம் செல்லையா குமாரசாமி எழுதிய 'அதிசயத் தீவில் ஆனந்தன்' என்னும் சிறுவர்களுக்கான நூல் வெளியீடு கடந்த29ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது .
தென்மராட்சி பிரதேச கலாசார பேரவையின் ஏற்பாட்டில் உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெற்றஇந்த நிகழ்வில் என்.டி.பி.வங்கியின் முகாமையாளர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். நூலின் அறிமுகவுரையை வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) க.தேவமனோகரனும், வெளியீட்டுரையை பருத்தித்துறை பிரதேச செயலரும், கவிஞருமான த.ஜெயசீலனும், நயப்புரையை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டுவும் நிகழ்த்தினர்
நூலின் முதற்பிரதியை முதன்மை விருந்தினர் வெளியிட, நாவற்குழி தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நிதியக் காப்பாளர் க.மயில்வாகனம் பெற்றுக் கொண்டார். சிறப்பு பிரதிகளை பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.ரகுநாதன் ஆகியோர் வழங்கினர். (9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்து நிற்கும் குருக்களின் நினைவுகள்

கலாபூசணம் பொ.சண்முகநாதன்

சிவத்தமிழ் வித்தகர், பண்டிதமணி, தத்துவக் கலாநிதி, செந்தமிழ் ஞாயிறு சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி தமது 99 ஆவது அகவையில் மறைந்தமை தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவர் அறநெறி தவறாத அந்தணர் வழியில் க.கணபதீஸ்வரக் குருக்கள்– சிவயோகசுந்தராம்பாள் தம்பதியினருக்கு மகனாக 1916ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22 ஆம் திகதி ஈழத்துச் சிதம்பரம், காரைநகரில் தோன்றியவர். அவரைப் பற்றி அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் அன்றொரு சமயம் குறிப்பிடுகையில், குருக்கள் நாட்டின் தலைசிறந்த செல்வம். அவருடன் வாழ்கின்ற காரைநகர் மக்கள் பாக்கியசாலிகள். பிற்காலத்தில் அந்த மூதறிஞர் கந்தரோடையில் வாழ்ந்து வந்ததால் அந்தப் பாக்கியம் இங்குள்ள மக்களுக்கும் கிடைத்தமை எமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதம். அவர் ஒரு பழுத்த பழம் மட்டுமல்ல. பயன்தரும் மரமும் கூட எனத் தெரிவித்திருந்தார்.

அப்படி ஒரு பாக்கியம் அதற்கு முன்னரும் 1931 -39 காலப்பகுதியிலும் கந்தரோடை மக்களுக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. அப்பொழுதும், அவர் தமது சகோதரியின் வீட்டில், சிற்பி சிவசரவணபவன் வீட்டில் வாழ்ந்தார். அப்பொழுதுதான் தென்கோவைப் பண்டிதர் ச.கந்தையாபிள்ளையும், கந்தரோடையில் அவர் வீட்டுக்கு முன்பாக வாழ்ந்து வந்தார்.



மக்களின் துயரங்களை வெளிப்படுத்துவதில் ஆர்வம் காட்டிய வைத்தீசுவரக் குருக்கள் ஆசிரியத் தொழிலோடு பத்திரிகை ஊடகத்துறையிலும் நிறைந்த ஆர்வம் காட்டியவர். தமிழ் மக்களின் தொன்மைச் சிறப்புக்களையும், பாரம்பரிய மேன்மைகளையும் கட்டுரைகளாக உதயன்– சஞ்சீவி பத்திரிகைகளில் எழுதியவர். தமது முதுமையையும் பொருட்படுத்தாது தள்ளாத வயதிலும் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய தேவை கருதி நிறையவே எழுதினார். தீவக மக்களின் துன்ப, துயரங்களை நேரிலே கண்டவர் என்ற வகையில், அவரது தகவல்கள், மக்களுக்கு நடந்த கொடுமைகளைத் தத்ரூபமான செய்திகளாக்கி வெளிப்படுத்த தமக்கு உதவியமை பற்றி, உதயன் பத்திரிகையின் பிரதமஆசிரியர்பலவேளைகளில் எனக்குக் கூறியுள்ளார். தமிழ்மொழி, சமயம் ஆகிய துறைகளிலும் காத்திரமான பயன்தரும் பல கட்டுரைகளை வடித்தவர். பத்திரிகைகள் செய்கின்ற பணிகளையும், அவை செய்ய வேண்டிய பணிகளையும் அடிக்கடி அவர் சொல்லுவார். மகத்துவத்தைப் பற்றி நாம் சொல்லுவதைவிட, புலவர்மணி சோ.இளமுருகனார், குருக்கள் ஐயாவுக்கு அப் போது தாமே கைப்பட எழுதிய திருமுகம் மூலம் காண்போம்.

பேரன்பு சான்ற அந்தணப் பெருந்தகை, பண்டிதர் சிவத்திரு வைத்தீசுவரக் குருக்கள் ஐயாவின் திருவடிக் கமலங்களை தலைமிசைச் சூடிக்கொண்டு எழுதும் திருமுகம்.

ஈழத்துச் சிதம்பர புராணத்தை எழுதுவதற்கு நீங்கள் எடுத்த முயற்சியை விட, அதனை அழகுற அச்சிடுவதற்கு எடுத்த முயற்சி பல நூறு கோடி பெரிது. அதனைக் காட்டிலும் எம்மை விளம்பரம் செய்ய ஓராண்டு காலமாய் எடுத்த முயற்சி ஆயிரம் கோடி பெரிது. அதனைக் காட்டிலும் பாராட்டு விழாவெடுத்ததற்குப் பல திங்கள் எடுத்த முயற்சி பத்தாயிரம் கோடி பெரிது. இத்தனைக்கும் ஒன்றுக்கும் பற்றாத சிறியேம் என்ன கைம்மாறு செய்யப்போகின்றோமென்று அஞ்சுகின்றோம்! பெரிய சாதனை! அறிவும் சாதுரியமும் ஆற்றலும் உடையவர்கள் இந்த உலகில் எல்லாம் செய்வர் என்பதையே தங்களிடம் இருந்து கற்றுக் கொண்டோம்.

இப்படியாக வசிட்டர் வாயால் பிரம்மஸ்ரீ விருது பெற்றவர் எங்கள் ஐயா. பதிப்புப் பணியில் சிகரமாகப் பின்னர் வெளிவந்த அவரின் திண்ணபுர அந்தாதி நூலைக் குறிப்பிடலாம். காத்திகேயப் புலவரது ஆக்கங்களில் தலை சிறந்ததாகக் கருதப்பெறும் இந்த ஆக்கம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆகிய திண்ணபுரத்தில் கோயில் கொண்டருளிய அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறையும் சுந்தரேசப் பெருமான் மீது பாடியதாகும்.




ஏற்கனவே இந்த நூலை முதலில் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். இந்த நூலின் மூன்றாம் பதிப்பை கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் (அன்புநெறி ஆசிரியர்) தி.விசுவலிங்கம் மூலமாக வெளியிட வைத்திருக்கின்றார். அவரின் அந்தப் பணிக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பெரும்தொகை கொடுத்து அந்த நூற் பிரதிகளை அப்பொழுது கொள்முதல் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

காரைநகரில் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று நடைபெற்ற மணிவாசகர் சபையின் பவளவிழா மலர் வெளியீட்டு விழாவில், குருக்கள் ஐயா என்றுமில்லாத உற்சாகத்துடனும் பூரிப்புடனும் கலந்து கொண்டமை நினைவுக்கு வருகிறது. (அதற்குப் பின்னர் தமக்கு இயலாமற் போகும் என்று நினைத்தாரோ என்னவோ) அந்த நிகழ்வு மலர் வெளியீட்டு விழா என்பதுடன் மணிவாசகர் சபையின் நிறுவுனரான குருக்களையும் அவரின் பல்துறைப் பணிகளையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவாகவும் அமைந்தமை சிறப்புக்குரியது.

வாழ்க அவர் புகழ்! வாழும் அவர் புகழ்.



# வறியோர்க்கு ஈவதே ஈகை

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

**ஈயாத குணம் உடையவருக்குப் பொருள்பயனுமில்லை.**
**கொடுத்தலுந்துய்த்தலும் தேற்றா இடுக்குடை**
**உள்ளத்தான் பெற்ற பெருஞ் செல்வம் இல்லத்து**
**உருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்**
**ஏதிலான் துய்க்கப்படும்**
நாலடியார் 274

ஈயாதவர் செல்வம் பிறரால் அனுபவிக்கப்படும். பாத்திரமறிந்து பிச்சை கொடு. வறுமைக் கோலம் அறிந்தே தானம். பிச்சை புகினும் கற்கை நன்றே. இளமையில் வறுமையென நினைந்து, உதவ எவரும் முன்வராத நிலையில் கல்வியே கைகொடுக்கும். இளமையில் கல். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எமக்கு உரிமை உள்ளபோதே ஈகை செய்து பயன்பெற முன்வரல் நன்று.

**வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து**
குறள்

இரப்பவர் கன்றைப் போலவும், கொடுப்பவர் பசுக்களைப்போலவும் விளங்க பூரிப்புடன் அளிப்பதே தானம். காலத்தின் கோலத்தினால் வறுமை வருவது தவிர்க்க முடியாதது. பொருளில்லாத வறியோரிடத்தில் உறவினர் வருவதும் இல்லை. செல்வம் உண்டானபோது அவனுக்குப் பல ஆயிரம் பேர் தொண்டு செய்ய வந்து கூடுவர்.
வறுமையால் பாதிக்கப்பட்டவர் தம் இயற்கை, செயற்கை அறிவுகளை இழந்து தவிப்பர். தற்போதுள்ள கலாசார சீரழிவுகள், கொள்ளைகள், பழிவாங்கல்கள் யாவும் வறுமையின் விரக்திகளே. வறுமை நிலையிலும் அமைதியிழந்த இழிநிலை வேறில்லை.
அருட்செல்வம், பொருள்செல்வம் ஆகியவை விருத்தி பெற எல்லை இல்லை. போதும் என்ற காலக்கெடு இல்லை. பேராசை புகும் ஆணவம் தலைக்கேறும். ஆனால் வறுமைக்கு உதவினால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிவர்த்தி ஏற்பட்டு போதும் என்ற நிலை வரும்.

**தன்னிலைமை மன்னுயிர்கள் சார தருஞ் சக்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான்**
திருவருட்பயன்

இதுவே மகத்தான ஈகை. எனவே, உதவி செய்து விட்டு மதியாத செல்வர்களை, மானமுடைய வறியோர் புறக்கணித்தல் நன்று. லஞ்சம், பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கும் இதுவே மூலம். பாவமும், பழியும் எந்தக் காலமும் துன்பமே. எனவே ஈகையாழி உதவும் நிலையிலும், மற்றவர்களிடம் சென்று இரவா நிலையிலும் இருத்தல் சிறப்பு. வறுமையில் செம்மையாக இருக்கும் சான்றோர் தம்மை
**அகம்புகுமின் உண்ணுமின் என்பவர் மாட்டலான்**
**முகம் புகுதல் ஆற்றுமோ மேல்?**
(நாலடியார் 303)
எனக் கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் வழிபாடு காரியசித்தியைத் தரும்

எம்.பி.அருளானந்தன்

இராமர் பெயரை மனதில் சொல்லி வணங்குவதே ஆஞ்சநேயப் பெருமானுக்கு மிகுந்த விருப்பம். ஆகவே அனுமன் அருளைப் பெறுவதற்கு நாம் ராம நாம பஜனை செய்து வழிபடுதல் அவசியம்.

**ஆஞ்சநேயருக்கு வெண்ணெய்க் காப்பு வழிபாடு**

சிவபக்தன் இராவணன் இறந்த பிறகு இரண்டு அசுரர்கள் இலங்கையிலிருந்து தப்பி ஓடி அரிய தவங்கள் செய்து பெரிய வரங்களைப் பெற்றுத் தேவர்களைத் தொந்தரவு செய்தார்கள். அவர்களுடைய இம்சைகளைப் பொறுக்காத தேவர்கள் இறைவனிடம் முறையிட்டனர். அவர்களை வதம் செய்வதற்காக இறைவன் அனுமனை அனுப்பினார். ஒவ்வொரு கடவுளும் தமக்குரிய ஆயுதங்களை அனுமனுக்கு அளித்தார்கள். ஸ்ரீகண்ணபிரான் அனுமனுக்கு வெண்ணெய் அளித்தார். அந்த வெண்ணெய் உருகுவதற்குள் இரண்டு அசுரர்களையும் போரில் சந்தித்து வெற்றி பெற்று அவர்களை அழித்துவிட்டார். ஆகவே அது போல் நாம் வெண்ணெய் சாத்தி வழிபட்டால் நாம் சாத்திய வெண்ணெய் உருகுவதற்குள் நாம் நினைத்த காரியங்கள் கைகூடும் என்பது நம்பிக்கை. வெண்ணெய் எளிதில் உருகும் தன்மை யுடையது. ஆகவே ராமநாமத்தைப் பக்தர்கள் மனதார ஜெபித்தால் ஆஞ்ச நேயர் எளிதில் உருகி அருள் புரிவார் என்பதற்காக வெண்ணெய் சாத்தி வழிபடுகிறோம்.



**ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சாத்தி வழிபாடு**

சீதாப்பிராட்டியை அனுமார் அசோக வனத்தில் ஸ்ரீராம்னுடைய தூதுவனாக சந்தித்த போது வெற்றிலையை எடுத்து அவருடைய தலை உச்சியில் வைத்து சிரஞ்சீவியாக வாழ்வாயாக என்று சீதா பிராட்டியார் அனுமனை ஆசீர்வதித்தார். ஆகவே வெற்றிலை ஆஞ்சநேயர் விரும்பும் பொருளாயிற்று. அதனாலேயே வெற்றிலையை மாலையாகத் தொடுத்து ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சாத்தி வழிபடுகிறோம்.

**ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தி வழிபாடு**

உளுந்து தானியத்தில் உடலுக்கு வேண்டிய ஊட்டச்சத்து மிகுதியாக உள்ளது. ராம கைங்கரியத்தில் மிகுந்த ஈடுபாட்டுடனும் ஓயாமல்உழைத்து வருபவருமான ஆஞ்சநேயருக்கு அவரது தாயார் அஞ்சனாதேவி தன் வடை ஒன்றை அளித்து அவரது களைப்பைப் போக்கினார். ஒரு வடை சாப்பிட்டால் ஒருநாள் முழுவதும் உணவு உட்கொள்ளாமலே இருக்கலாம். ஆகவேதான் வடைமாலை சாத்தும் கைங்கரியம் செய்யப்படுகிறது.

**அனுமன் வால் வழிபாடு**

ஆஞ்ச நேயப்பெருமானின் வலிமை முழுவதும் அவருடைய வாலில் இருப்பதாக நம்பிக்கை. இதற்கு அடிப்படையாக பல புராணச் சம்பவங்களைச் சொல்வர். ஒரு முறை பீமன் பாரிஜாத புஷ்பம் தேடி காட்டில் அலைந்தபோது பாதையின் குறுக்கே ஒரு குரங்கு வாலை நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தது. அதைச் சற்று தள்ளிப்படுத்துக் கொள்ளுமாறு பீமன் கேட்டுக்கொண்டார். ஆனால் குரங்காகப் படுத்திருந்த அனுமார் வயோதிபத்தினால் என்னால் என் வாலை அகற்ற முடியவில்லை. நீயே அதை எடுத்து ஓரமாக நகர்த்தி விடு என்று சொன்னார். பீமன் அனுமன் வாலை அப்புறப்படுத்த முயற்சி செய்தார். பலமுறை முயன்றும் முடியவில்லை. அப்பொழுது ஆஞ்சநேயப்பெருமான், தான் யார் என்பதை பீமனுக்கு எடுத்துரைத்து தனது வாலை நகர்த்தி பீமன் போவதற்கு வழி செய்தார். தான் எவ்வளவு முயன்றும் முடியாத ஒன்றை இவ்வளவு எளிதாகச் செய்து விட்டாரே என்று ஆச்சரியப்பட்ட பீமன் அனுமனையும் அனுமன் வாலையும் வணங்கினார். பீமன் ஆஞ்சநேயரைப் பார்த்து உங்கள் வாலின் வலிமையையும் மகிமையையும் புரிந்துகொள்ளாமல் உதாசீனப்படுத்திய எனக்கு சர்வமங் கலத்தையும் அளித்தீர்களே. அதுபோல் உங்களது வாலைப் பூஜித்துத் துதிப்ப வர்களுக்கும் சர்வ மங் கலத்தையும் கொடுத்தருள வேண்டும் என்று வணங்கிக் கேட்டுக்கொண்டார். இதன்படியே இன்றும் தன் வாலில் பொட்டு வைத்து பூஜிக்கும் அன்பர்களுக்கு ஆஞ்சநேயர் அருள்கிறார்.

**அனுமன் வாலைப் பூஜிக்கும் முறை**

அனுமன் திருவுருவப்படத்தை அலங்கரித்து அனுமாருடைய உடலில் வால் ஆரம்பமாகும் பகுதியிலிருந்து ஆரம்பித்து தினசரி முதலில் சந்தனப்பொட்டு வைத்து சந்தனப் பொட்டின் மேல் குங்குமம் வைத்து வர வேண்டும். ஒவ்வொரு நாளும் இந்த மாதிரித் தொடர்ந்து வைத்துக்கொண்டே வந்து வாலின் நுனிவரை முடிக்க வேண்டும். அப்படி முடிக்கின்ற நாளன்று ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாத்திப் பூசை செய்யலாம். அப்போது ஆஞ்சநேயர் சுலோகத்தையும் ராம நாமத்தையும் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால் நினைத்த காரியம் இனிது நிறைவேறும். இந்த வழிபாட்டை தொடர்ந்து செய்து கொண்டே வருதல் நன்று. இந்தக் கலியுகத்திலும் நம்மோடிருந்து நம்மைக்காக்கும் தெய்வமாக திகழ்பவர் ஸ்ரீராம தூதன் அனுமன். அவரை வழிபட்டு ஆன்ம பலம் பெறுவோம். இல்லங்கள், பாடசாலைகள், வர்த்தக நிறுவனங்கள் இன்னும் பல இடங்களில் ஆஞ்சநேயர் படத்தை அலங்கரித்து வழிபாடு செய்யும் வழக்கம் சைவப் பெருமக்களிடையே பெருகி வருகிறது. அது வளரட்டும். அனுமனின் திருவருள் சேரட்டும்.




கல்வயலூர் கவிஞர் செ.சுதாகரன் எழுதிய "வயலூரான் வரிகள்" கவிதைத் தொகுப்பு கடந்த மாதம் 24 ஆம் திகதி சாவகச்சேரி, சங்கத்தானை தமிழ்க் கோட்ட மண்டபத்தில் வெளியிடப்பட்டது. ச.தயாபரன் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.
நூலின் வெளியீட்டுரையை தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலுவலர் க.க.ஈஸ்வரனும், ஆய்வுரையை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டுவும் நிகழ்த்தினர். (131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளிக் கல்விக்குச் சிறந்த முறைசார்ந்த கைந்நூல்

# “விளையாடுவோம்; கற்போம்”

செ.மகேஷ்

ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வியில் அன்றைய வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மேற்கொண்ட ஆய்வுக ரின் பெறுபேறாக முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் உணரப் பட்டது. அங்கிருந்து எழுந்த முன்பள்ளிக் கல்விக்கான முன்னேற்ற நடவடிக்கைகள் இன்று இலங்கை முழுவதற்குமான முன்பள்ளிச் சிறார்களின் வளர்ச்சிப் படிகளை மேம்படுத்தும் வழிகாட்டல்களுக்கு உறுதுணையாகவுள்ளன.

அநேக முன்பள்ளிகளில் சீரான திட்டமிடலின்றி முன்பிள்ளைப் பருவத்தினருக்கான கல்வியை வழங்குவதில் பல்வேறு தரங்கொண்டதும் ஒழுங்கமைக்கப்படாததுமான கலைத்திட்டத்தையே நடைமுறைப்படுத்துவதில் பலரும் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் தரமான முன்பள்ளி ஆசிரியர்களும், பொருத்தமான முன்பள்ளிக் கலைத்திட்டமும் அவசியம் என்பதை உணர்ந்தனர். அத்துடன் ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி வழங்கி அவர்களை முன்னிலைப்படுத்த முன்வந்தனர்.

முன்பள்ளிகள் பல ஆங்காங்கே இயங்கி வந்த நிலையில் அவற்றை ஒன்றிணைத்து முன்பள்ளிக் கல்வியின் தேவையையும் சீரான ஒழுங்கமைந்த வழிகாட்டல்களையும் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தைச் செயற்படுத்த முயன்றனர்.

அன்று வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிச் சிறுவர்களினதும் அவர்தம் பெற்றோரினதும் ஒழுங்கமைக்கப்பட்ட தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்தோடு முன்பிள்ளைப் பருவத்தினரின் கல்வியில் பலர் ஈடுபாட்டுடன் செயற்பட முன்வந்தனர்.

இத்தகைய கருத்தை வலியுறுத்தி அன்று யூனிசெவ் வழங்கிய அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவினர் விளையாட்டு அல்லாத விளையாட்டு என்ற நூலை வெளியிட்டனர் 2001ஆம் ஆண்டில் வெளிவந்த இந்த நூல் முன்பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தலுக்கும் வழிகாட்டல்களுக்கும் பெரிதும் உதவியதெனலாம். 2006இல் மீள்பதிப்புச் செய்யப்பட்ட இந்த நூல் சில முன்பள்ளிகளில் இன்றும் பயன்பாட்டிலுள்ளது.

எனினும் கடந்த காலச் சீரற்ற சூழலினால் பல இடங்களிலும் இந்த நூல் அழிவுற்ற நிலையில் மீளப்பதிப்பிக்க வேண்டிய தேவை எழுந்திருந்தது. அந்தத் தேவையை நிறைவு செய்யும் உந்துதலினால் விளையாடுவோம்; கற்போம் என்ற பெயரி




னாலான ஆசிரியர் வள வழிகாட்டியை யூனிசெவ் வழங்கிய அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவினர் இப்பொழுது வெளியிட்டுள்ளனர்.

அதேவேளையில் அனுபவச் சிறப்புக்களால் நூலில் அவதானிப்பட்ட திருத்தங்களுக்கும் மாற்றங்களுக்கும் சிறுவர்களின் உடல் உளச் செழுமைச் சீராக்கத்துக்கும் உதவும் வகையில் புதிய நூலில் அவை மாற்றப்படவும் சேர்க்கப்படவும் வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டமை பாராட்டுக்கு உரியதாகும்..

இந்த நூலின் சிறப்புணர்ந்து கற்பிக்கும் பணி ஆசிரியர்களிடம் கையளிக்கப் பட்டிருப்பினும், பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்கு ஒத்துழைப்போடு கூடிய ஊக்கம் வழங்கும் வழிவகைகளும் இதில் அடங்கியுள்ளன.

குடும்பம் என்ற அமைப்புக்கு வெளியே பிள்ளைகள் முதலில் சந்திக்கும் வழிகாட்டிகள் முன்பள்ளி ஆசிரியர்களே. அவர்களுக்குச் சிறப்பான வழிகாட்டியாகி நிலைத்து நின்று உதவும் உயரிய நோக்கோடு வெளியிடப்பட்டுள்ள விளையாடுவோம் கற்போம் என்ற ஆசிரியர் வள வழிகாட்டி பிள்ளைகளை மகிழ்வுடனும் சுதந்திரமாகவும் விளையாடிக் கற்கத் துணைசெய்யும் எனலாம்.

உடல் விருத்தி மொழி, கணிதம் என்பவை சார்ந்த அறிவாற்றல் விருத்தி, சுற்றாடலைப் புரிந்து கொள்ளுதல், சித்திரம், கைவேலை, இசையும் அசைவும், நாடகம் ஆதியாம் ஆக்க அழகியல் திறன் விருத்தி, சமூக மனவெழுச்சி விருத்தி எனப் பல பிரிவுகளில் விளையாட்டுக்களுடன் கூடிய செயற்பாடுகளில் சிறுவர்கள் ஈடுபட்டுக் கற்கும் வழிகள் பல காட்டப்பட்டுள்ளன. மகிழ்ச்சியுடன் சிறுவர் தமது திறன்களை வெளிப்படுத்தப் பொருத்தமான செயலொழுங்குடன் சேர்ந்த அருமையான கற்றல் செயற்பாடுகள் இதிலே தரப்பட்டுள்ளன.

அழகிய வண்ண அட்டைப்படம் இந்த நூலைக் கைவசம் வைத்திருக்கத் தூண்டுகிறது.

இந்நூலை ஆக்கி வெளியிட்டுள்ள ஆறுதல் நிறுவனமும், இதற்கென வழிகாட்டல் ஆலோசனை வழங்கியோரும், எழுத்தாளர் குழுவினரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

விளையாடுவோம்; கற்போம் என்ற சிறப்பான செயலூக்கம் தரும் இந்த நூலின் வழி பயன் பெறுவோர் யாவரும் அதிர்ஷ்டசாலிகளே.






மட்டக்களப்பு மாநகர சபையின் அனுசரணையுடன் மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் சித்திரைப் பௌர்ணமி தின விழா அண்மையில் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நா.தனஞ்சயன் எழுதிய “நுண்ணறிவு” நூல் வெளியீடும் இடம் பெற்றது. கலை இலக்கிய வட்டத் தலைவர் வி.மைக்கல் கொலின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு அரச அதிபர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக மண்முனை வடக்கு பிரதேச செயலர் வெ.தவராசா கலந்து கொண்டார்.

நூலின் முதற்பிரதியை மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மா. உதயகுமார் வெளியீட்டு நூலாசிரியரின் தந்தையான பா.நாகராசா பெற்றுக் கொண்டார். நூலின் மதிப்பீட்டுரையை கோரளைப்பற்று பிரதேச செயலர் எம்.வாசுதேவன் நிகழ்த்தினார். (9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT





# மானிப்பாய் இந்துவில் புகைப்பட, சித்திரக் கண்காட்சி

விவேகன்



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் காண்பிய ஊடகக் கழகம், சித்திரக்கழகம் என்பவை இணைந்து நடத்திய புகைப்பட சித்திரக் கண்காட்சி கல்லூரியின் தொழில்நுட்ப பீட மண்டபத்தில் காண்பிய ஊடகக் கழகத்தின் தலைவர் எஸ்.சாய்ராம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில், கல்லூரியின் முதல்வர் எம்.இந்திரபாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

புகைப்படக் கண்காட்சியில் ஆர்.றொசான், இ.பகீரதன், இ.விதுசன், எஸ்.நிஜந்தன், தி.திசாங்கன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரது 100 புகைப் படங்கள் காட்சிப் படுத்தப்பட்டன. இப் புகைப்படங்களுக்கான வழிகாட்டலை காண்பிய ஊடகக் கழகப் பொறுப்பாசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மேற்கொண்டிருந்தார். இதேவேளை– சித்திரக் கழகத்தின் பொறுப்பாசியர் தி.தீபனின் வழிகாட்டலில் மாணவர்களால் ஆக்கப்பட்ட 100 சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வில் பிரதிஅதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பார்வையிட்டனர். மாணவர்களது ஆளுமையை வெளிப்படுத்துவதற்கான களமாக இந்தக் கண்காட்சி அமைந்ததாக பர்வையாளர்கள் கருத்துப் பகிர்ந்தனர்.

கண்காட்சி தொடர்பாக பார்வையாளர் ஒருவர் கருத்து வெளியிடும்போது, ஊடகக் கழகமும், சித்திரக் கழகமும் இணைந்து நடத்திய புகைப்பட மற்றும் சித்திர கண்காட்சியைப் பார்வையிட்டேன். புகைப்படப்பிடிப்பிலும், வரைதலிலும் மாணவர்களது ஆற்றலைக் காணமுடிந்தது. சித்திரங்களில் கருத்து வெளிப்பாடு சிறப்பாக அமைந்துள்ளது. இவை மேலும் வளர்க்கப்படும் பட்சத்தில் சித்திரக் கதை, ஆக்கம் செய்ய வழிப்படுத்தப்படுவர். கருத்து வெளிப்பாடு என்பது சொல்லாமல் விளங்கும் வகையில் ஆக்கப்பட்டிருந்தமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

மாணவர்கள் சிறந்த புகைப் படங்களை எடுத்திருந்தனர். நிறைந்த கருத்தை வெளிக்காட்டுகிறார்கள். இலக்கிய தடம் அவர்களிடம் பதிக்கப்படுமேயாயின் உயர்ந்த ஊடகத்திறனைக் கொண்டவர்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆரம்ப நிலை என்ற சொல்லை எப்போதும் உச்சரிக்காது உயர் நிலை என்ற இலக்கை நோக்கி பயணிக்க மாணவரை வழிகாட்டிய ஆசிரியர்களைப் பாராட்டுகின்றேன். தொடர்ந்தும் இது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வாழ்த்துகின்றேன் எனத் தெரிவித்திருந்தார்.


பிறிதொரு பார்வையாளர் கருத்து வெளியிடும் போது:-

சிறந்த முயற்சி. மாணவர்களது ஆக்கங்கள் சிறப்பாக வெளிப்படுத்தப் பட்டிருந்தன. எதிர்காலத்தில் மேலும், பல மாணவர்களை உள்வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஓவியப் படைப்புக்களில் கருத்து வெளிப்பாடு, நவீன ஓவியம் மற்றும் கண்ணாடி ஓவியம், மரபுவழி ஓவியங்களையும் காட்சிப்படுத்த மாணவர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். முயற்சிகள் தொடர வாழ்த்துக்கள் எனத் தெரிவித்திருந்தார்.

புகைப்படம் எடுத்தல் ஒருகலை என்பதை வளரும் மாணவர்களுக்கு உணர்த்தும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்ததாகப் பலரும் கூறினார்கள்.

# உழவாரத் தொண்டாற்றி சைவசமயத்தை வளர்த்த சைவசமயக் குரவர் திருநாவுக்கரசநாயனார்

திருமதி மலர்விழி கனகசபை



இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமய குரவர்கள் ஆவர். இவர்கள் சிவத்திருத்தலங்கள் தோறும் சென்று இறைவன் மேல் கருணை கொண்டு இறைவனை உள் அன்போடு வணங்கி அருள்திருப்பாசுரங்கள் பாடியவர்கள். சைவசமயத்தின் உண்மையை நிலை நாட்டியவர்கள். அற்புதங்கள் பல நிகழ்த்தியவர்கள். இறைவன்மேற்கொண்ட கருணையினால் வாழ்நாள் முழுவதும் சிவத்திருத்தலங்கள் தோறும் சென்று தேவாரத் திருப்பதிகங்கள் பாடி, உழவாரத் தொண்டாற்றி, இறைவன் அருளால் அற்புதங்கள் பல செய்து இறைவனிடம் முத்தி அடைந்த திருநாவுக்கரசநாயனார் குருபூசைத் தினம் இன்றாகும்.

திருநாவுக்கரச நாயனார் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூர் என்னும் ஊரில் பிறந்தார். தந்தையார் புகழனார். தாயார் பெயர் மாதினியார். இவருக்கு பெற்றோர் மருணீக்கியார் எனப் பெயரிட்டனர். மருணீக்கியாருக்கு திலகவதியார் என்னும் தமக்கையாரும் இருந்தார். மருணீக்கியார் சில காலம் சைவசமயத்தை புறந்தள்ளி சமணசமயத்தில் சேர்ந்திருந்தார். சமண சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்து தருமசேனர் என்னும் பெயருடன் வாழ்ந்தார். சமண சமயத்தில் சேர்ந்த உடன் தன் உடன் பிறந்த தமக்கையார் திலகவதியாரையும் மறந்தார். தம்பியின் செயல் கண்டு திலகவதியார் பெரிதும் மனம் வருந்தினார். வீரட்டானேசுவரர் கோயிலுக்குச் சென்று தனது கவலை யைத் தெரிவித்து அழுது புலம்பினார். தன்னை உள் அன்போடு வணங்கும் அடியார்க்கு இரங்கும் அருளாளரான இறைவனும் திலகவதியார் துயர் கண்டு இரங்கினார். திலகவதியாரின் கனவிலே தோன்றி தருமசேனனுக்கு சூலை நோய் கொடுத்து ஆட்கொள்வோம் என்று அருளினார்.

தருமசேனனை சூலைநோய் பீடித்துக் கொண்டது. சமணர்கள் செய்த வைத்தியம் எந்தவித பயனும் அளிக்கவில்லை. மாறாக சூலைநோய் கூடியது. மிகவும் மனம் வருந்தினார். நோயின் கொடுமை தாங்காது துடித்தார் தருமசேனர். எவருக்கும் தெரியாது புறப்பட்டு தமக்கையாரிடம் வந்து அழுதார். தம்பியாரின் நிலை கண்டு திலகவதியார் மிகவும் மனம் வருந்தி அவரை வீரட்டானேசுவரர் ஆலயத்துக்குக் கூட்டிச் சென்றார். வீபூதியைப் பூசி இறைவனை வணங்கும்படி கூறினார். அவரும் இறைவனை மன முருகி வணங்கினார். இறைவன் திருவருளால் பாடல் பாடும் திறனைப் பெற்றார். உடனே 'கூற்றாயினவாறு விலக்ககலீர்' எனும் பதிகத்தைப் பாடினார். சூலை நோய் நீங்கியது. அன்று முதல் சிவனடியாரானார். நாவுக்கரசர் என்று இறைவனால் அழைக்கப்பட்டார். மருணீக்கியார் (திருநாவுக்கரசர்) என்னும் பெயர் பெற்றார். இறைவனைப் போற்றித் தேவாரப் பாடல்கள் பாடி தலயாத்திரைகள் மேற்கொண்டார். வாழ்நாள் முழுவதும் திருத்தலங்கள் தோறும் உழவாரத் தொண்டாற்றினார். இறைவன் அருளால் பல அற்புதங்கள் செய்தார்.

அவர் செய்த அற்புதங்கள் சில வருமாறு; திங்களூரில் பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர் பெற்றெழச் செய்தமை, திருவீழி மிழலையில் இறைவனிடம் படிக்காசுபெற்றுப் பஞ்சம் போக்கியமை, திருமறைக் காட்டிலே மூடப்பட்டிருந்த ஆலயக்கதவு திறக்கப் பாடியமை, சமணர்களால் கல்லோடு கட்டிக் கடலில் விடப்பட்ட போது கல் தெப்பமாக மிதந்து கரையேறியமை, திருப் பைஞ்சீலி செல்லும் வழியில் இறைவனிடம் இருந்து பொதிச் சோறு பெற்றமை, திருவையாற்றில் கைலைக் காட்சியை கண்டமை.

திருநாவுக்கரசரை அப்பர், வாகீசர், நாவுக்கரசர், உழவாரப்படையாளி, தாண்டகவேந்தர் எனவும் அழைப்பர். நாவுக்கரசர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் நான்காம், ஐந்தாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நாவுக்கரசர் காட்டிய நல்வழியிலே சைவசமயத்தவர்கள் ஆகிய நாங்கள் திருத்தலங்கள் தோறும் சென்று எமது துன்ப, துயரங்களைப் போக்க இறைவனை மனமுருகி தேவாரத் திருப்பதிகங்கள் பாடி, உழவாரத் தொண்டாற்றி அவனருள் பெற்று, இந்த மண்ணிலே எல்லோரும் நல்ல வண்ணம் வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 70 | 80 | 40 | – | 70 | 70 |
| கத்தரி | 60 | 50 | 80 | 80 | 60 | 80 | 50 | 40 |
| கரட் | 70 | 80 | 80 | 100 | 80 | 120 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 50 | 50 | 80 | 40 | 45 |
| பயிற்றை | 80 | 100 | 80 | 120 | 100 | 60 | 90 | 70 |
| பாகல் | 120 | 100 | 140 | 120 | 100 | 120 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | – | 80 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 80 | 80 | 100 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 120 | 80 | 120 | 100 | 70 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 | 40 | 15 | 20 |
| தக்காளி | 120 | 100 | 160 | 140 | 120 | 200 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 20 | 30 | 30 | 30 |
| கீரை | 20 | 40 | 40 | 15 | 20–30 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 40 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 80 | 60 | 80 | 80 | 100 | 50 | 80 |
| புடோல் | 50 | 50 | 80 | 60 | 50 | 100 | 30 | 60 |
| கோவா | 50 | 80 | 80 | 100 | 50 | 120 | 70 | 60 |
| வெண்டி | 100 | 50 | 80 | 80 | 80 | 120 | 50 | 80 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 140 | 120 | 120 | 120 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 | 140 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 30 | 50 | 40–50 | 30 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 90 | 80 | 80 | 90 | 70 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 400 | 160 | 600 | 350 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 40 | 80 | 80 | 120 | 120 | 120 | 55 | 40 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 160 | 160 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 300 | 200 | 350 | 300 | 150 | 300 |




## வெல்வெட் தோடுகள்

வெல்வெட் தோடுகள் அறிமுகமாகியுள்ளன. வெல்வெட் துணியில் பல டிசைன்களில் இந்தத் தோடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கண்கவர் வர்ணங்களில், இவை விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 80 ரூபாவிலிருந்து 150 ரூபா வரை ஆகும்.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 800 | 700 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 700 | 600 | 500 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 550 | 700 | 600 | 700 |
| சீலா | 300 | 600 | 400 | 450 | 450 | 500 | – |
| விளை | 650 | 600 | 400 | 600 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 450 | 300 | 300 | 450 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஒரா | 400 | 400 | – | – | 300 | 500 | – |
| திரளி | 300 | 250 | 200 | 250 | 200 | 200 | – |
| நகரை | 250 | 200 | – | 300 | 300 | 200 | 400 |
| சூடை | 150 | 150 | 100 | 220 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 400 | 400 | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 120 | 50 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | 300 | – |

## பொருத்தமான நகைகளை அணியுங்கள்



குட்டைக் கழுத்துப் பகுதி உள்ளவர்கள் தடிமனான சங்கிலியில் டொலர் வைத்து அல்லது ஒற்றைக்கல் நெக்லஸ் அணியலாம். ஒல்லியானவர்கள் நிறைய வளையல் அணிந்து கொள்ளுங்கள். பட்டையான ஜரிகை போட்ட புடைவைகள் அணிந்து கொண்டால், நகை சற்று சிம்பிளாக இருக்க வேண்டும். புடைவை சிம்பிளாக இருக்கும் பட்சத்தில் டெம்பிள், குந்தன் போன்ற நகைகள் அணியலாம். இது எல்லோருக்குமே பொருந்தும். ஸ்கை ப்ளூ, பேபி பிங், டல் வைற், லைட் ப்ரவுன், க்ரே, அல்ட்ரா போன்ற வண்ணங்களைக் கொண்ட ஆடைகள் எந்த டிசைன் நகைகளுக்கும் பொருத்தமானதாகும்.

பொதுவாகவே உயரமாகவும் ஒல்லியாகவும் இருப்பவர்களுக்கு கழுத்து சற்று நீளமாகத்தான் இருக்கும். ஒரு நீளமான செயினுடன் அகலமான சோக்கர், நெக்லஸ், குந்தன் ஜுவல்லரி ஆகியவை அணியுங்கள். மெல்லிய விரலுக்கு பட்டையான சலங்கை வைத்த மெட்டி அழகாக இருக்கும்.

கணுக்கால் பகுதி ஒல்லியாக இருந்தால் பட்டையான கொலுசு போடுங்கள். குண்டாகவும், குள்ளமாகவும் இருப்பவர்களுக்கு கழுத்து நீளம் குறைவாக இருக்கும். அகலமான நகைகளைத் தவிர்த்து விடுங்கள்.

(தொடரும்)

**நாளை**
சித்திரை-22
வியாழக்கிழமை
05.05.2016
திதி: சதுர்த்தசி
பி.இ.03.58 வரை
நட்சத்திரம்: ரேவதி
மு.ப.11.36 வரை
ராகுகாலம்:
01.26-02.56 வரை
சுபநேரம்:
07.26-08.56 வரை

## அசைவக் கூழ்



### தேவையானவை

மீன் – அரைக் கிலோ (எதுவாகவும் இருக்கலாம்)
பலாக்கொட்டை – 20
பயத்தங்காய், இறால், நண்டு – ஒவ்வொன்றும் கால் கிலோ
புளி – எலுமிச்சை அளவு
காய்ந்த மிளகாய் – 13
மிளகு தூள் – 1 தேக்கரண்டி
ஒடியல் மா (பனங் கிழங்கு மாவு) – ஒரு பக்கெற்
உப்பு – தேவையான அளவு

### செய்முறை

எல்லாப் பொருள்களையும் தனித்தனியாக சுத்தம் செய்து ஓர் அளவாக நறுக்கி வைக்கவும்.
காய்ந்த மிளகாயைக் கொரகொரவென அரைத்துக் கொள்ளவும். புளியைக் கெட்டியாகக் கரைக்கவும்.
ஒடியல் மாவைத் தண்ணீரில் போட்டு வைக்கவும்.
பெரிய பாத்திரத்தில் மீன், இறால், நண்டு, பயற்றங்காய், பலாக்கொட்டை ஆகியவற்றைப் போட்டு நிறையத் தண்ணீரும், தேவையான அளவு உப்பும் விட்டு வேக விடவேண்டும்.
நன்கு வெந்த பிறகு அரைத்த மிளகாய், மிளகுத் தூள் போட்டு, கொதித்து வரும்போது புளிக் கரைசல் விட வேண்டும்.
பின் ஒடியல் மாக்கரைசலைக் கொட்டிக் கிளறி விட வேண்டும். கூழ் பதத்துக்கு வரும்போது இறக்கிப் பரிமாறலாம்.
கூழ் குடிக்கும் போது நீர் அருந்தக் கூடாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**மேடம்:** சிலர் உதவுவது போல சிரமத்துக்கு ஆளாக்குவர். தொழிலில் முதலீட்டுக்காக அதிக பணம் தேவைப்படும். இலாபம் மிதமாக இருக்கும். பெண்கள் பணம், நகை இரவல் கொடுக்கக் கூடாது.

**இடபம்:** மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். வருமானம் பன்மடங்கு உயரும். தானதர்மம் செய்து இயலாதவர்களுக்கு உதவுவீர்கள்.

**மிதுனம்:** மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். தாமதமான பணி எளிதில் நிறைவேறும். தொழிலில் வருமானம் உயரும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பினால் மகிழ்வீர்கள்.

**கடகம்:** வெளியிடத் தொடர்பால் சிரமம் உருவாகலாம். தொழில் வளர்ச்சிக்காக, புதிய உத்திகளைப் பின்பற்றுவது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**சிங்கம்:** மேம்போக்காக எதிலும் செயற்படுவது கூடாது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.

**கன்னி:** உறவினர், உங்களை மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபாரம் செழிக்க விடாமுயற்சியுடன் பணிபுரிவீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும்.

**துலாம்:** செயல்களில் நிதானத்தைக் கடைபிடிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். மேலதிக வருமானம் பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணத்தில் விழிப்புடன் இருப்பது அவசியம்.

**தனுசு:** எவருக்கும் வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழிலில் இடையூறைத் தாமதமின்றிச் சரிசெய்வது நல்லது. சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** செயலில் திறமை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். நண்பரிடம் பெற்ற உதவிக்கு நன்றி பாராட்டுவீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கும்பம்:** சகிப்புத் தன்மையுடன் செயற்பட்டால் சிரமம் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** அனைவரிடமும் இனிமையாகப் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். சேமிப்பு அதிகரிக்கும். இஷ்ட தெய்வத்தை வழிபடவும்.

# வடசென்னைக்கு முன் ஒரு படம்




தனுஷ், கௌதம்மேனன் இயக்கும் "எனை நோக்கிப்பாயும் தோட்டா" படப்பிடிப்பில் இருக்கிறார். இந்தப்படத்தை முடித்துவிட்டு வெற்றிமாறனின் "வட சென்னை" படப்பிடிப்பில் கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், திடீரென கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க விருப்பதாகவும், அந்தப்படம் செப்ரெம்பர் மாதம் தொடங்கும் என்றும் தனுஷ் அறிவித்துவிட்டார்.

கௌதம் படத்தை முடித்துவிட்டு ஒரு ஹொலிவூட் படத்தில் நடிக்க ஏற்கெனவே தனுஷ் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. அப்படி நடக்கும் பட்சத்தில் வெற்றிமாறன் படத்தில் நடிக்கும் வாய்ப்பு மிகக்குறைவு என்று சொல்லப்படுகிறது. இதனால் "வெற்றிமாறன்" "வட சென்னை" படத்துக்கு முன்பாக ஒரு படத்தை இயக்கிவிடும் திட்டத்தில் இருக்கிறாராம். முற்றிலும் புதுமுகங்களை வைத்து எடுக்கப்படும் இந்தப் படத்தை விரைவில் தொடங்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது.



❤ கோபிகா ❤ @Sweetie_



காலம் கடந்து சென்றால் வருடங்கள்...
காதல் கடந்து சென்றால் வருத்தங்கள்...



மகன் வேலைக்குச் சென்றதும் தந்தை ஓய்வு பெறுவார்.
ஆனால் தாய்க்கு என்றும் ஓய்வு இல்லை. கணவனுக்காக உழைப்பாள்... மகனுக்காக உழைப்பாள்.. பேரன், பேர்த்திக்காக உழைப்பாள்... அவளின் இறுதி மூச்சு இருக்கும்வரை அனைவருக்காகவும் உழைத்துக் கொண்டே இருப்பாள்...! அம்மா.



பெட்டி நிறையப் பணம் கொடுத்தாலும் சரி... சட்டி நிறைய காசு கொடுத்தாலும் சரி உங்களுக்கு லைக் கிடையாது!!!

திருடன்: மரியாதையா எல்லா நகைகளையும் கழட்டிக் கொடு...
குடும்பத்தலைவி (டி.வி.பார்த்துக்கொண்டே): இருப்பா, விளம்பர இடைவேளை வரட்டும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 4 | | 5 | 7 | | | |
| | | | 8 | | | | 4 | |
| | | | 1 | | 4 | | 7 | 8 |
| 9 | | | 6 | | | | 5 | |
| 4 | | 5 | | | | 6 | | 3 |
| | 8 | | | | 5 | | | 9 |
| 5 | 2 | | 4 | | 1 | | | |
| | 4 | | 5 | | 8 | | | |
| | | | 3 | 9 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 6 | 2 | 3 | 7 | 5 | 8 | 1 |
| 1 | 5 | 2 | 9 | 6 | 8 | 4 | 3 | 7 |
| 3 | 8 | 7 | 4 | 5 | 1 | 9 | 6 | 2 |
| 4 | 2 | 9 | 3 | 8 | 6 | 1 | 7 | 5 |
| 6 | 1 | 8 | 5 | 7 | 2 | 3 | 4 | 9 |
| 5 | 7 | 3 | 1 | 4 | 9 | 6 | 2 | 8 |
| 7 | 3 | 4 | 8 | 9 | 5 | 2 | 1 | 6 |
| 2 | 6 | 5 | 7 | 1 | 4 | 8 | 9 | 3 |
| 8 | 9 | 1 | 6 | 2 | 3 | 7 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிக்கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# கும்பிடும்வரை கடவுள்; திருட்டுப் போனால் சிலை!

அப்பா 50 ரூபா மிச்சப்படுத்த 30 நிமிடம் நடந்ததற்கும், நான் 30 நிமிடம் மிச்சப்படுத்த 50 ரூபா ஓட்டோக்கு கொடுக்கிறதுக்கும் பேரு தான் ஜெனரேசன் கேப்!
எந்தப் பூச்சி இறந்தாலும் எறும்புகளே அதை இறுதி ஊர்வலமாய் எடுத்துச் செல்கின்றன..!!!
தெருவில் குப்பை போடுகிறவனை மரியாதையாகவும், அதைப் பொறுக்கிச் சுத்தம் செய்பவனை கேவலமாகவும் பார்க்கும் சமுதாயம் உள்ளவரை எனது நாடு சுத்தம் ஆகாது!!!
ஒரு மெழுகுவர்த்தியின் தியாகத்துக்குச் சற்றும் குறைவில்லாதது ஒரு தீக்குச்சியின் சாவு!!
வேலைக்குப் போகிறவர்களின் திங்கட்கிழமையைவிட, வேலை கிடைக்காதவர்களின் திங்கட்கிழமைகள் கொடூரமானவை. !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலத்தடி

அத்துடன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தாக்கல் செய்திருந்த வழக்கை, பொலிஸார் தாக்கல் செய்த வழக்குடன் இணைத்து இனிமேல் நடத்துமாறும் நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நிலக்கீழ் நீரில் ஒயில் கலந்தமை தொடர்பான வழக்கு சுன்னாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலை யில் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்குடன் தொடர்புபடும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் திணைக்களத்தினர் நேற்று முன்னிலையாகியிருந்தனர்.

நிலக்கீழ் நீரில் ஒயில் கலந்த சம்பவத்தையடுத்து, மல்லாகம் நீதிமன்றில் 3 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதில் நொதேர்ன் பவர் நிறுவனத்தை மூடுமாறு கோரிப் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 11 பேர் சேர்ந்து வழக்குத் தாக்கல் செய்தனர். அதனைத் தொடர்ந்து குறித்த பிரச்சினைக்குக் காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி, சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த நிலையில் மூன்றாவது வழக்காக, குறித்த பிரச்சினைக்குத் தீர்வு வேண்டி 3 அரச திணைக்களங்களுக்கு எதிராக 6 பேர் சேர்ந்து பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

நேற்றைய வழக்கில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கைப் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குடன் இணைத்து, இனிமேல் முன்னெடுக்குமாறு நீதிமன்று பணித்தது. அதனால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இனிப் பொலிஸாருடன் இணைந்து அந்த வழக்கை முன்னெடுப்பர். அதுமட்டுமன்றி, வடக்கு மாகாண சபை பிரதம செயலருக்கு நீதிமன்று அழைப்புக் கட்டளை அனுப்பியுள்ளது. ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, பிரதம செயலர் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் நீதிமன்று பணித்துள்ளது.

மேலும் வடக்கு மாகாண சபை ஏற்கனவே மேல் நீதிமன்றுக்கும் அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றது. அதன்படி சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நிலக்கீழ் நீரில் உள்ள ஒயில் கலந்துள்ளமை பற்றிய ஆராய்ச்சியை நிதானமாக மேற்கொள்ள ராடர் கருவி மூலமாகப் பரிசோதனை செய்வதற்கும் ஏனைய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் அனுமதியைக் கோரியிருந்தது.

இதற்கமைவாக, தகுதி வாய்ந்த நிபுணர்குழுவை அமைத்து, உரிய பரிசோதனை செய்து 3 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அதற்கான கால அவகாசத்தை வழங்கிய நீதிமன்று, குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கு ஒத்திவைத்தது. ஓகஸ்டில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, குறித்த ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன் கட்டளையிட்டார்.

குறித்த வழக்கில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் நீதிமன்றில் முன்னிலை யாக வேண்டும் என்று முன்னர் நீதிமன்று அறிவுறுத்தியதற்கமைய, அவர் சில தவணைகள் நீதிமன்றில் முன்னிலையாகி வந்தார். நேற்றும் அவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார். இதன்போது இனி அவர் நீதிமன்றில் முன்னிலையாகத் தேவையில்லை என்று நீதிபதி அறிவித்தார்.

அத்துடன், நொதேர்ன் பவர் நிறுவனத்தினால் எண்ணெய், கிரீஸ் உள்ளிட்ட கழிவுகள் ஏற்கனவே நிலத்தில் விடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், தற்பொழுது நொதேர்ன் பவர் நிறுவனம் இயங்குவதிலுள்ள கிணறுகளில் எண்ணெய்த் தன்மை குறைந்துள்ளதா என்பது பற்றியும் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மல்லாகம் நீதிமன்று பணித்துள்ளது.

குறித்த விடயத்தில் நீதிமன்றில் 11 பேர் சேர்ந்து தாக்கல் செய்த வழக்கில் மல்லாகம் நீதிமன்ற உத்தரவை நீக்குமாறு கோரி, மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சாந்தா அபிமன்னசிங்கம், சோ.தேவராஜா, ஜெ.ஜெயரூபன், க.சுகாஷ், வி.மணிவண்ணன், எஸ்.சோபிதன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். அமைச்சர் ஐங்கரநேசன் சார்பில் சட்டத்தரணி கே.முத்துக்குமாரு முன்னிலையாகியிருந்தார்.

(த-வ-4)

## பொருத்து

செலவில் பொருத்து வீடுகளாக அமைக்க முடிவு செய்யப்பட்டது. இந்த முடி வுக்குத் தமிழ் அரசியல்வாதிகள் கடும் கண்டனம் தெரிவித்திருந் தனர். அத்துடன் வடக்கு மாகாண சபையும் இந்த வீட்டுத் திட்டத்தை மீளாய்வு செய்யவேண்டும் என்று தீர்மானமும் நிறைவேற்றியிருந்தது.

பொருத்து வீட்டுத் திட்டம் தொடர்பில் அவசர கலந்துரையாடல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் பங்குபற்ற வருமாறு பிரதம செயலாளர் மற்றும் அரச அதிபர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்துடன் தொடர்புடைய சகல ஆவணங்களையும், இந்தக் கலந்துரையாடலுக்காக எடுத்து வருமாறு ஜனாதிபதி செயலகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5)

## ஐ.நா.

அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு அமைப்பில் பணியாற்றுகிறார். இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இடை யிலான அமைதி முயற்சிகளுக்கான ஏற்பாட்டாளராக எரிக் சொல்ஹெய்ம் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5

## சமஷ்டி

தலைவர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினர். இதன்போதே, இரா.சம்பந்தனிடம் மேற்படி கோரிக்கையை அவர்கள் முன்வைத் துள்ளனர். இந்தக் கோரிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் ஏற் றுக்கொண்டுள்ளதாக, எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உடனடியாகப் பதவி விலகவேண்டும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்துக்கு முன்பாக ஏழு கட்சிகளின் தலைவர்கள் இணைந்து கடந்த வாரம் போராட்டம் நடத்தியிருந்தனர். போராட்டம் நடத்திய கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்கு இரா.சம்பந்தன் அழைப்பு விடுத்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அழைப்புக்கு அமைய, ஏழு கட்சிகளின் தலைவர்களும் நேற்றுக் காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இரா.சம்பந்தனைச் சந்தித்தனர்.

கிளிநொச்சியில் இராணுவ முகாமுக்குள் சென்றமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம், ஏழு கட்சிகளின் தலைவர்களும் கேள்வி எழுப்பினர். இதற்கு இரா.சம்பந்தன், நடந்த சம்பவத்தை விளங்கப்படுத்தினார். இதனையடுத்து அதனை ஏற்றுக் கொண்ட கட்சிகளின் தலைவர்கள், மக்களின் நிலங்களை அரச அதிபர் ஊடாக மக்களிடம் பெற்றுக் கொடுக்கவேண்டும் என் றும் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபை சமஷ்டித் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவ்வாறான நிலைப் பாட்டில் இருக்கின்றது. இது தெற்கு மக்களிடையே அச்சத்தை தோற்றுவித்துள்ளது என்பதை எதிர்க்கட்சித் தலைவரிடம் குறித்த குழுவினர் சுட்டிக்காட்டினர். இதற்குப் பதில் வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர், சமஷ்டி பிரிவினை அல்ல என்றும், இதனைக் கடந்த காலங்களில் சிங்களத் தலைவர்களே முன்வைத்தனர் என்பதையும் குறிப்பிட்டார். சமஷ்டி தொடர்பில் சிங்கள மக்களுக்குப் புரியும்படி விளங்கப்படுத்துங்கள். இதற்காகச் சிறந்த சட்டத்தரணியை - விரிவுரையாளரைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துங்கள். இதன் மூலமே, இந்த விடயத்துக்குத் தீர்வுகாண முடியும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனை எதிர்க்கட்சித் தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

மேலும், தங்களை அழைத்துக் கலந்துரையாடி விடயங்களை தெளிவுபடுத்தியமைக்குக் கட்சிகளின் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். அத்துடன் எதிர்க்கட்சித் தலை வராக இருந்து சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(த-வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் செல்வராசா

பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் செல்வராசா 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் செல்வராசாவின் (முன்னாள் உள்ளகப் பரிசோதகர் - வலி.கிழக்கு, வட பகுதி பல.நோ.கூ.சங்கம் அச்சுவேலி) பாசமிகு மனைவியும், கெங்காதரன், பகீரதன், சுமதி, கௌரிமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கம்மா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் சச்சிதானந்தம், வீரசிங்கம், தவமணி, காலஞ்சென்ற சிவகுரு மற்றும் கண்மணி ஆகியோரின் அன்பு மைத்துனி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: [illegible]

கனடா- 0014 1626 53099, பத்தமேனி - 021 300 1452

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சக ஆசிரியை
**மங்கையர்க்கரசி சிவநேசராசன்**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **மகேஸ்வரி சுப்பிரமணியம்**
அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரி கழகம்**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

கோடிபதி ஷனிதா 007 2016-05-03
அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.79,103,860/-
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
T 34 40 71 73
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு. 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 03.05.2016 | வெற்றி வாரம் 1974 | வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 30 38 45 60
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 5,414,860/-
2016-05-06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.

நியத்த ஜய
வெற்றி வாரம் 458
திகதி 03.05.2016
வர்ணம் மஞ்சள்
விஷேட வெற்றி இலக்கம் 1530
எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 11,803,880/=
வெற்றி இலக்கங்கள் 04 22 31 56
ஆங்கில எழுத்து W
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
Tel: 011 4 824 824
06.05.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## மரண அறிவித்தல்



# பஞ்சாட்சரம் ஸ்ரீவரதன் (ரவி)

(ஸ்ரீ வாலாம்பிகை அன் சன்ஸ் உரிமையாளர்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் ஸ்ரீவரதன் 02.05. 2016திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதியின் அன்புக் கணவரும், சங்கீதா, லக்சாயினி, நிலக்சனா, நிதர்சனா ஆகியோரின் பிரியமான தந்தையும், காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் ஸ்ரீரஜனி, ஸ்ரீரங்கன், ஸ்ரீவசந்தன், ஸ்ரீராகினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாவதி, பகீரதன், வசந்தா தேவி, கோணேஸ்வரி, சிவகுமார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் ராஜேஸ்வரி, பரமேஸ்வரன், கணேஸ்வரன், ஞானேஸ் வரி ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05. 2016) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோவில் வாசல்,**
**இணுவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கதிர்காமர் மண்டலேஸ்வரன்

(முன்னாள் இ.போ.ச. சாரதி)

தோற்றம்
20 . 11 . 1962



மறைவு
03 . 05 . 2016

மணியாவத்தை, புலோலி வடகிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமர் மண்டலேஸ்வரன் நேற்று (03.05.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமர் சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், மயூரன் (ஜேர்மனி), ஜெனனி, மதுஷன், மதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன் (உதவி தபால் அதிபர்), மகேஸ்வரன் (ஜேர்மனி), மாங்களேஸ்வரன் (கனடா), மனோகரன் (ஜெனனி வாகன உரிமையாளர்).Dr. மனோன்மணி (வைத்தியர், மந்திகை ஆதாரவைத்திய சாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகேந்திரனின் (லண்டன்) அன்பு மாமனும், கேதாரகௌரி, கலைச்செல்வி, பாமினி, சந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2016) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மணியாவத்தை, புலோலி வட கிழக்கு,**
**பருத்தித்துறை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
மனோகரன் -077 668 6456,
மதுசன் -077 102 8010

---

**வீடு விற்பனைக்குண்டு**

கோப்பாய் வடக்கு வெள்ள வாய்க்கால் ஒழுங்கையில் உள்ள உத்தேசம் 5 பரப்பு 2 குளியில் அமைந்துள்ள வீடு உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: **075 627 2087**

---

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமை புரிந்த

**பஞ்சாட்சரம் ஸ்ரீவரதன் (ரவி)**



அவர்கள் 02.05.2016 திங்கட்கிழமை மரணமடைந்த செய்தி எம்மை எல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாசத்துடன் பழகிய நாங்கள்
ஒரு நொடியில் பறந்து போன
உங்களை மறுபடியும் காண
எம் கண்கள் ஏங்குதையா

**முகாமையாளரும், ஊழியர்களும்**
**வைற் ஹவுஸ் அந்திய கால சேவை**
**180, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

---

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு
20 . 02 . 1983



உதிர்வு
10 . 05 . 2015

**அமரர் விநாயகமூர்த்தி உதயசங்கர்**

அன்பின் உறைவிடமாய்
அனைவர்க்கும் வழிகாட்டியாய்
புன்னகை முகத்தோடு - இப்புவிதனில்
வாழ்ந்தீரே - பிரிவெனும் பெருந்துன்பம்
எங்கள் எல்லோரையும் ஆழ்ந்த வேதனையில் வாட்டுகின்றதே
எங்கள் உயிர் உள்ளவரை உம்மை நாம் மறவோம்

ஓம் சாந்தி

அல்லாரை தெற்கு, மீசாலை. குடும்பத்தினர்.

(C234)(10.17)

---

## கஞ்சா வைத்திருந்த இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 4

சிறிய தொகை கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு மீனவர்களை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும்ஆனைக் கோட்டை-சாவற்கட்டு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களிடமிருந்து சுமார் 1கிராம் நிறையுடைய கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களை இந்த மாதம் 10ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம் உத்தரவிட்டார்.

(த-வ-103)

---

# மரண அறிவித்தல்



## இராமு கந்தவனம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. பணியாளர்)

யாழ். வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், புளியம் பொக்கணைச் சந்தி, பெரிய குளம், கண்டாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற இ.போ.ச பணியாளர் இராமு கந்தவனம் நேற்று (03.05.2016) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி இராமு தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு. திருமதி சங்கரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சின்னத்தங்கத்தின் பாசமிகு கணவரும், திரவியவதனி (வசந்தா-வவுனியா) ஜெகதீஸ்வரன் (லண்டன்) ஜெயவதனி (லண்டன்) ஜெயபவானி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயப்பிரதாப் (சேகர்-ஆர்த்தி டிம்பர் - மகாரம்பைக் குளம்) நாகராசா (லண்டன்) கௌசல்யா, சரவணபவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், அர்சனா, கோகுலன் (லண்டன்) ஜனார்த், மதுரா (பிரான்ஸ்) மனோஜ், றஜிந்தா ஆர்த்தி, நிருஷிகா, தனுஷிகா, கபிசன், கபிசனா, அபிசேகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், யதுகுலன், தரணிகா(லண்டன்) அட்சரன், சேதுரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2016) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பெரிய குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியம் பொக்கணைச்**
**சந்தி, பெரியகுளம்,**
**கண்டாவளை.**

**ஜெகன் : 00447984905990**
**சேகர் : 0775960630**
**நாகராசா : 00447772458787**
**சரவணபவன்: 00447534471720**

தகவல்:
**குடும்பத்தினர்.**

மலர்வு : 04.12.1941 உதிர்வு : 03.05.2016

(J/977) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாள்வெட்டில் படுகாயமடைந்த மாணவன் ஆபத்தான நிலையில்

## தட்டுவன்கொட்டியில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், மே 4

ஆனையிறவு தட்டுவன்கொட்டியில் வீதியில் சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவன் மீது நேற்றிரவு வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

அதனால் தலையில் படுகாயமடைந்த மாணவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச உத்தியோகத்தர்கள் 2 பேர் உட்பட 4 பேரே வாள்வெட்டு நடத்தியுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட மாணவனின் தரப்பினரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் ஆனையிறவு தட்டுவன்கொட்டியில் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த மகாலிங்கம் பவிசன் (வயது 16) என்ற தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவனே ஆபத்தான நிலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது, அவர் மீது குறித்த கொலைவெறித் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்துக்குக் காரணமானவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. ஆனால் அது பற்றிய விசாரணைக்காக, சம்பவ இடத்திற்கு பொலிஸ் பிரிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, கிளிநொச்சி பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர். (வ–4)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா அருளம்பலம்



சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், 687/15, மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அருளம்பலம் (ஓய்வுபெற்ற நூலகர்) நேற்று (03.05.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இராசம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ் சென்ற இராசதுரை (ஆசிரியர்) மற்றும் கணேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சுகன்யாவின் (பேபி) பாசமிகு கணவரும், சுயந்தன் (நிதி உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம்- வேலணை) கடோற்கஜன் (ஆசிரியர், நயினாதீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லக்சனாவின் (ஆசிரியை, யா/திருக் குடும்ப கன்னியர் மடம்) அன்பு மாமனும், காலஞ்சென்றவர்க ளான கணபதிப்பிள்ளை, நாகம்மா, பத்மநாதன், காத்தலிங்கம் மற்றும் வள்ளிப்பிள்ளை சண்முகானந்தம், மாரித்தம்பி, புஸ்ப ராணி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுகு மார் மற்றும் சுகுணலிங்கம் (ஆசிரியர்), மோகன்குமார் (லண் டன்), சசிகலா (ஜேர்மனி) அருட்குமார் (லண்டன்) இளந் திரை (ஆசிரியை, யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்) ஆகியோ ரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2016) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்.**

தகவல்: **அ. சுயந்தன் (மகன்)**

(J/982) (10,17)



### திருமதி கதிர்காமர் மீனாட்சி

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் 24, நக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமர் மீனாட்சி நேற்று (03.05.2016) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி நாக முத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கதிர் காமரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தெய் வானை, சிவகங்கை, பாலசிங்கம், சுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (04.05.2016) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**24, நக்கா வீதி, யாழ்ப்பாணம்.**

(J/983) (10,17)

தகவல்: **க.மரியசீலன்**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நீலாம்பிகை நற்குணசிங்கம்



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நீலாம்பிகை நற்குணசிங்கம் நேற்று (03.05.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

05 ஆம் வட்டாரம், நயினா தீவு.

077 824 7463
021 320 6829

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பூமணி (இராசம்மா) வைரமுத்து



சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி (இராசம்மா) வைரமுத்து நேற்று (03.05.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து வின் அன்பு மனைவியும், தர்மதாஸின் அன்புத் தாயாரும், சசிகலாவின் அன்பு மாமியும், டுஸ்ரிகன், டுஸ்ரிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05. 2016) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை தெற்கு, மானிப்பாய்.**

தகவல்: **குடும்பத்தினர்.**
வை.தர்மதாஸ் (மகன்)
077 994 4442

### திருமதி செல்லம்மா சின்னப்பு



அப்பிளானை கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி செல்லம்மா சின்னப்பு நேற்று (03.05.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்புவின் மனைவி யும், காலஞ்சென்றவர்க ளா ன இளையதம்பி -செல்லாட்சி தம்பதியரின் மகளும், காலஞ் சென்றவர்களான பொன் னையா- அன்னம் தம்பதியரின் மருமகளும், சிவபாலன், சிவபாதம், புவனேஸ்வரி, சிவகுமார், செல்வராசா ஆகியோரின் தாயும், மல்லிகாதேவி, நந்தினி, பேரின்பநாதன், மாங்கனேஸ்வரி ராகினி ஆகியோரின் மாமியும், யசோதை, கீர்திகா, ஜனோஜா, நிரோசிஜா, பிரியந்தன் துஸந்தினி ரசிந்தினி, யசோ, சாம்பவி அனுசன் சுலக்ஷன் உதயபிரபா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, செல்லையா, சிவராசா, சோதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அப்பிளானை, கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

தகவல்: **சி.சிவபாதம்**
**077 124 9875**

(J/977) (10,17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்

(ஓய்வு நிலை ஆசிரியை - யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை)



கோப்பாய் வடக்கு கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் 03.05.2016 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியம் (ஓய்வு நிலை ஆசிரியர் - யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை) அவர்களின் துணைவியாரும் காலஞ் சென்றவர்களான நாகலிங்கம்(யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையின் ஸ்தாபகரும், யா/உரும் பிராய் இந்துக்கல்லூரியின் ஓய்வு நிலை ஆங்கில பாட ஆசிரிய ரும்) - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும் திருமதி மங்கையற்கரசி(ஆசிரியை - யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும் திரு சு.சிவனேசராசன்(ஆசிரியர் - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) அவர்களின் அன்பு மாமியாரும் மயூரன்(மாணவன் - யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாசாலை) அவர்களின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நடேசன், முருகவேள் மற்றும் சிவலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தம்பிஜயா காலஞ்சென்றவர்களான அன்னம்மா, இராசலிங்கம், தர்மலிங்கம், சண்முகலிங்கம், சறோயினிதேவி மற்றும் இராசமலர், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தசுவாமி கோயிலடி, மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**தகவல்: சு.சிவனேசராசன் மருமகன்**

**தொடர்பு: 077 435 1909**

### திருமதி வள்ளியம்மை சின்னையா



ஆவரங்கால் சங்கனாவத்தையைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் 260/03, கச்சேரி நல்லூர் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சின்னையா கடந்த (01.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அண்ணாவியார் வைரவிப்பிள்ளை சம்பரம் தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவ்களான இராமலிங்கம், ஆறுமுகம், இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களாள அன்னம்மா, தெய் வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், பத்மநாதன் (சிறுப்பிட்டி பாலா, முழங்காவில்), பத்மராணி, இரஞ்சினிதேவி, சுகுந்திலநாதன் (ஜேர்மனி), சிவலோகநாதன் (இத்தாலி), வசந்தராணி (திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலாதேவி (கனடா), நித்தியானந்தன் (அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்), கருணாநிதி (ஆசிரியர், யா/நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), விக்னேஸ்வரி (ஜேர்மனி), விஜயலக்ஸ்மி (இத்தாலி), ஜெயசீலன் (சனசவங்கி திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெயசுதா+தேவசகாயம் (கனடா), சர்மிளா + சிறிகாந்தன் (கிளி/கோணாவில் அ.த.க. பாடசாலை), சதீஸ்+ சுவர்ணா (கனடா), செந்தீஸ்+நிஷா (கனடா), யனுஷா+ஜனகஜீபன் (கொழும்பு), யதுர்சன், துசாருசன், சிவானுசன், சாருசன், சாருக்தியா, ஆருக்தியா, பாருக்தியா, சனாருக்திகா, சபீனா, கஜானி, நிஜானி, துசானி, கயோலினா, கிஷாலினி ஆகியோரின் பேர்த்தியும், சிந்துஜா, ரிலக்ஸன், சுவனியா, ருசித்தா, ருசிக்கா, சுஜீ வன், சுவர்ணன், துவாரகன், ஒவியா, வேனுகன், அட்சயா, வைஷ்ணவி, அபிஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.05.2016) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீ.கருணாநிதி.**
**260/3, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**
077 6510100, 077 977 3472

தகவல்: **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கபடி அணியில் தமிழ் வீரருக்கும் இடம்




3ஆவது ஆசிய கபடித் தொடர் பாகிஸ்தான் இஸ்லாமபாத் நகரில் நடைபெற்றுவரும் நிலையில், குறித்த தொடருக்கான இலங்கை தேசிய அணிக்கு தமிழ் வீரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் சிரேஷ்ட கபடி வீரர்களுள் ஒருவரும், முன்னணி கபடி பயிற்றுவிப்பாளராகவும் திகழும் துரைச்சாமி மதன்சிங் என்பவரே அவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளார். மதன்சிங், முதலாவது ஆசிய கபடித் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் அந்தத் தொடரில் இலங்கை மூன்றாவது இடத்தைப் பெற்றிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம)



தலை மன்னாரில் நடத்தப்பட்ட நீச்சல் போட்டியொன்றில் நிர்ணயிக்கப்பட்ட 3 கிலோ மீற்றர் தூரத்தை ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்களில் நீந்திக் கடந்த ஜக்சன் என்ற சிறுவனை புனித லோறன்சியார் விளையாட்டுக் கழகம் கௌரவித்துள்ளது. (ம-21)

# போராடாமல் வென்றது டெல்லி குஜராத்துக்கு மூன்றாவது தோல்வி



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற டெல்லி-குஜராத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 8 இலக்குகளால் வெற்றிபெற்றது டெல்லி.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. குஜராத்தின் பலமே அதன் முன்னணித் துடுப்பாட்ட வரிசைதான். ஆனால் நேற்று அதுவே அந்த அணியின் பலவீனமாக அமைந்தது. ஒரே ஓட்டத்துடன் சகீர்கானின் பந்தில் போல்ட் ஆனார் மக்கலம். சிமித், பின்ஞ் இருவரையும் வெளியேற்றினார் நடீம். குஜராத்தின் முன்வரிசை 34 ஓட்டங் களில் முடிவுக்கு வந்தது. ரெய்னா, கார்திக் இருவரும் இணைப்பாட்டமாக 50 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 24 ஓட்டங்களுடன் இணைப்பாட்டத்தை பிரித்துச் சென்றார் ரெய்னா. மத்திய வரிசையைப் பலப்படுத்தினார் ஜடேயா. அவரது இன்னிங்ஸ் மூலம் டெல்லியின் பந்துவீச்சை ஓரளவேனும் எதிர்த்துப் போராடியது குஜராத். 42 பந்துகளில் அரைச்சதம் கடந்து 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டினேஸ் கார்திக். ஜடேயா தொடர்ந்தும் சில பவுண்டரிகளைப் பதிவுசெய்ய முடிவில் குஜ ராத் 149-7. ஜடேயா 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.
பந்துவீச்சில் டெல்லியின் சார்பாக நடீம் இரண்டு இலக்குகளையும், சகீர்கான், மொறிஸ், சமி, மிஸ்ரா நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கிய டெல்லிக்கு அதன் ஆரம்ப வீரர்களே வெற்றிக்கான அடித்தளத்தை வலிமையாக அமைத்துக் கொடுத்தனர். வழமையாக குயின்டன் அடித்தாட பன்ட் சிறிது நிதானிப்பார். ஆனால் நேற்று குயின்டனை விட அடித்தாடினார் பன்ட். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைக் தொட்டது டெல்லி. பன்டின் அரைச்சதத்துடன் முதல் 10 பந்துப்பரிமாற்றங்களில் டெல்லி 93-0. அணியின் ஓட்டம் 115 ஆக இருந்தபொழுது 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பன்ட். குயின்டன் 4 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டாலும் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தனர் டுமினியும் சாம்சனும்.
பந்துவீச்சில் குஜராத்தின் சார்பாக கௌசிக், ஜடேயா இருவரும் ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம)

## ரணகளமானது

பதற்றத்துடன் காணப்பட்டது.
மோதல் சம்பவத்தில் காயமடைந்த, ஐக்கிய தேசியக் கட்சி யின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்தீப் சமரசிங்க, ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
சபை நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் சபாநாயகரின் அறிவுறுத்தல்களுக்குச் செவிசாய்க்காமல், ஆளுந் தரப்பினரும் மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபை நடுவே மோதிக் கொண்டதால், சபை நடவடிக்கைகளை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார் சபாநாயகர். இதன் பின்னரும் குழப்பம் நீடித்ததால், சபையை இன்று வரை சபாநாயகர் ஒத்தி வைத்தார்.
நாடாளுமன்றம் நேற்றுச் செவ்வாய்க் கிழமை ஒரு மணிக் குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதையடுத்து வாய்மூல விடைக்கான வினாவுக்குச் செல்ல சபாநாயகர் தயாரான நிலையில், ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜ பக்சவின் பாதுகாப்பு நீடிக்கப்பட்டமைக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துப் பிரதமரிடமிருந்து அதற்கான பதிலை எதிர்பார்த்தார்.

**பொன்சேகாவிடம் பந்தை வீசிய ரணில்**

மகிந்தவுக்குப் பொலிஸ் பாதுகாப்பு மட்டுமே வழங்க முடியும் என்று உறுதியாகக் குறிப்பிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பான மேலதிக விளக்கத்தை அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வழங்குவார் என்று கூறி ஆசனத்தில் அமர்ந்தார்.
பிரதமர் உரையாற்றிய சந்தர்ப் பத்திலேயே மகிந்த ஆதரவு தரப்பினர் கூச்சல் - குழப்பத்தை ஆரம்பித்துவிட்டனர்.
அமைச்சரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உரையாற்ற ஆரம்பித்ததுடன் சபையில் எழுந்து நின்று கூச்சல் குழப்பம் ஏற்படுத்திக்கொண்டிருந்த மகிந்த ஆதரவு அணியினர், சபை நடுவே வந்து சபை நடவடிக்கைகளைக் குழப்பும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். பொன்சேகாவின் உரைக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.
இதையடுத்து ஆளுந் தரப்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினரும் சபை நடுவே வந்து மகிந்த அணிக்கு எதிராகக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். கூச்சல் குழப்பம் வாய்த்தர்க் கமாகி மோதலை உருவாக்கியது.

**கடும் சண்டை**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கையை நீட்டிக்கொண்டு கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பிரதி அமைச்சரான பாலித தேவரப்பெரும, மகிந்த அணியின் பிரசன்ன ரணவீரவைத் தாக்கினார். இதையடுத்து இருவரையும் விலக்குவதற்காகக் கூடிய மகிந்த அணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், குழுவாகச் சேர்ந்து மோதிக் கொண்டதால் சிலர் காயமடைந்தனர்.
இரு அணியினரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவர ஒருவரை ஒருவர் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தனர். இதன்போது சண்டையை விலக்கும் பாணியில் ஒருவரை யொருவர் தாக்கியும் கொண்டனர். மோதல் நிலை சபை நடுவே உக்கிரமடைய, மகிந்த அணியின் பியல் நிஷாந்த, ஐக்கிய தேசிய கட்சியின் சந்தித் சமரசிங்க ஆகிய இருவரும் நிலத்தில் விழுந்து கட்டிப் புரண்டு சண்டையிட்டனர்.
இதன்போது அவர்கள் இருவரினதும் சண்டையை விலக்க முயற்சித்த இரு தரப்பினரும் தாக்குதலை நடத்தினர். இதனால் சில நிமிடங்களுக்கு சபை போர்க்களமானது.

**சபையை அமைதிப்படுத்த சபாநாயகர் கடும் முயற்சி**

மகிந்த ஆதரவு தரப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் சபை நடுவே கடுமையாக மோதிக் கொண்டதால், சபை நடவடிக்கைகளை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாததால் உறுப்பினர்களை அமைதியாக இருக்குமாறு சபாநாயகர் பல முறை உத்தரவிட்டார்.
சபாநாயகரின் உத்தரவையும் பொருட்படுத்தாமல், இரு தரப்பினரும் தொடர்ந்து மோதிக் கொண்டிருந்தனர். இரு தரப்பினரும் ஒருவரை [illegible] காலால் உதை[illegible] சபையைக் கட்டுப்படுத்த முடியாத சபாநாயகர் பிற்பகல் 1.35 மணியளவில் 5 நிமிடங்களுக்குச் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்தார்.
ஆளும் மற்றும் மகிந்த அணி சார்பில் சுமார் 50 உறுப்பினர் கள் சபை நடுவில் குழுமியிருந்தனர். சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டதையடுத்து, உறுப்பினர்களுக்கிடையிலான சண்டை முடிவுக்கு வந்தது.
இதையடுத்து, சண்டை பிடித்துக் கொண்டிருந்தவர்கள் ஒருவருக்கொருவர் சமாதானப்படுத்திக் கொண்டும், அடி வாங்கியவர்களை அமைதிப்படுத்திக் கொண்டும் இருந்தனர். இருப்பினும் சபை நடுவே கூச்சல் ஓயவில்லை. குழுமியிருந்தவர்கள் அந்த இடத்தை விட்டு அகலவில்லை. சிறிது நேரம் அப்படியே நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தனர்.

**வெளியேறினார் பிரதமர் ரணில்**

உறுப்பினர்கள் சண்டை பிடித்துக்கொண்டிருந்ததை அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபை ஒத்திவைக்கப்பட்டு ஒரு சில நிமிடங்களில் சபையிலிருந்து வெளியேறினார். இதையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவராக வெளியேறினர்.
மகிந்தவின் பாதுகாப்புக்காகச் சபையில் சண்டை ஏற்பட்டு போர்க்களமான நிலையில், மகிந்தவின் புதல்வரான நாமல் ராஜபக்ச சபை நடுவே ஓரமாக இருந்து சண்டையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.
சண்டை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, ஆளுந்தரப்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருந்து சண்டையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அத்துடன், பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பனவும் மோதலை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தன.
மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதும் சபையில் பதற்ற நிலை அந்தச் சந்தர்ப்பத்தில் ஓயவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினரும், மகிந்த அணியினரும் தத்தம் பக்கங்களில் குழுவாகக் கூடி பேசிக் கொண்டிருந்தனர்.
பிற்பகல் 1.35 மணியளவில் சபை நடவடிக்கைகளை 5 நிமிடங்களுக்கு சபாநாயகர் ஒத்திவைத்தார். இருப்பினும், ஒன்றரை மணி நேரத்தின் பின்னர் பிற்பகல் 3 மணியளவிலேயே சபை கூடியது. இதன் பின்னர் சம்பவத்துக்குக் கவலை தெரிவித்துக் கண்டனம் வெளியிட்ட சபாநாயகர். சபை நடவடிக்கைகளை இன்றுவரை ஒத்தி வைத்தார்.
இதேவேளை, காயமடைந்த ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் சந்தீப் சமரசிங்கவை ஆளும் தரப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## வடக்கிலும்

மாகாணக் கல்வி அமைச்சரை, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கேட்டுக் கொண்டுள்ளார்.
இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் த.குருகுலராஜா குறிப்பிட்டார்.
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கு நேற்றுக் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்திலேயே மேற்படி விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.
வடக்கு மாகாணத்தில் தற்போது அதிகரித்த வெப்பத்துடன் கூடிய காலநிலை நிலவுகின்றது. வெப்பம் காரணமாக ஏனைய இரு மாகாணங்கள் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் போன்று வட மாகாணத்தின் பாடசாலைகளையும் நண்பகல் 12 மணியுடன் சில குறிப்பிட்ட காலத்துக்கு மூடி எமது மாணவச் செல்வங்களின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது பொருத்தமானது.
அதிகரித்த வெப்பத்தால் நண்பகல் 12 மணி வரை வெய்யிலின் கொடுமை, அதன் பிற்பாடு வெய்யிலின் தாக்கத்தினால் நிலமும் சூடானதன் காரணத்தினால் நிலம் மற்றும் வெயில் என்று இரு தாக்கம் நிலவுகின்றது. இது சிறுவர்களை இலகுவில் தாக்கும் என்று கல்வி அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் கேட்டபோது, வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இறுதி முடிவு -என்றார்.

(த-வ-5-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது சென்.பீற்றர்

யாழ்ப்பாணம், மே 4
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையில் நடத்தும் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். பீற்றர் அணி வெற்றிபெற்றுள்ளது.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அ●ாலி பாரதி அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர் அணி மோதிக் கொண்டது. இதில் நவாலி சென். பீற்றர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)


# நடுவர் பயிற்சி வகுப்பு

கரணவாய், மே 4
வடமராட்சி கால்பந்தாட்ட நடுவர் சங்கத்தில் புதிய நடுவர்களை இணைத்துக் கொள்வதற்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் அல்வாய் தெற்கு கிராம அலுவலர் பணிமனையில் மு.ப. 10 மணிமுதல் இடம்பெறவுள்ளது. கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கம் இப் பயிற்சி வகுப்பை ஒழுங்கு செய்துள்ளது. சங்கத்தில் இணைந்துள்ள கழகங்கள் ஆகக்குறைந்தது இருவரை அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார். (ம-108)

# அம்பாள் அபாரம்

யாழ்ப்பாணம், மே 4
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அம்பாள் அணி வெற்றி பெற்றுள்ளது.

நாமகள் வி.கழக மைதானத்தில் மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதியது. இதில் தாவடி காளியம்பாள் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# அசரென்கா அசத்தல் ஆட்டம் மட்ரிட் தொடரில் காலிறுதியில்

மட்ரிட் ரென்னிஸ் தொடரில் லாரா சாப்சனை வீழ்த்தி காலிறுதிக்கு விக்டோரியா அசரென்கா தகுதி பெற்றுள்ளார்.

மட்ரிட் நகரில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் பெலாரஸ் வீராங்கனையான விக்டோரியா அசரென்கா, பிரிட்டனின் லாரா சாப்சனை எதிர்த்து மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6:4 என்ற அடிப்படையில் கைப்பற்றிய அசரென்கா தொடர்ந்து தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி இரண்டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் அவர் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

# கோல் மழை பொழிந்து வென்றன சென்.மேரிஸ், கொலின்ஸ் அணிகள்

கரணவாய், மே 4
திக்கம் இளைஞர் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்களின் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.மேரிஸ், கொலின்ஸ் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

**கொலின்ஸ் - நியூட்டன்**

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்திலேயே தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொலின்ஸ் அணியை எதிர்த்து நியூட்டன் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்த 15ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணியின் வீரர் கோகுலதீபன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். அடுத்த இரு நிமிடங்களிலேயே தார்மீகனின் உதவியுடன் பதிலடி கொடுத்தது நியூட்டன். ஆனால், 20 ஆவது நிமிடத்தில் பானுராஜா, 21 ஆவது நிமிடத்தில் விஜய் இருவரும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவு செய்ய இடைவேளைக்கு முன்னர் கொலின்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியிலும் கொலின்ஸின் ஆதிக்கம் தொடர்ந்தது. அந்த அணியின் சார்பாக விமல்ராஜ் 29 ஆவது, 32ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய 5:1 என்று ஆதிக்கம் செலுத்தியது கொலின்ஸ். நீண்ட போராட்டத்தை வெளிப்படுத்திய நியூட்டன் அணிக்கு தார்மீகன் 35ஆவது நிமிடத்திலும், ரமணன் 42ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்ய முடிவில் கொலின்ஸ் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**சென்.மேரிஸ் - யங்ஹென்றிஸ்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.மேரிஸ் அணியை எதிர்த்து யங்ஹென்றிஸ் அணி மோதியது. 3ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணியின் நிதர்சன் தனது அணிக்கான முதலாவது கோலை பதிவு செய்ய பலத்த போராட்டத்தின் பின் ஹென்றிஸ் அணி வீரர் தனேஸ் தனது அணிக்கான முதலாவது கோலை பதிவு செய்து பதிலடி கொடுத்தார். இருப்பினும் மேரிஸின் ஆதிக்கத்தைத் தடுத்துவிட முடியவில்லை. 22 ஆவது நிமிடத்தில் மதிவதனன் ஒரு கோலைப் பதிவு செய்ய இடைவேளைக்கு முன்னர் சென்.மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் 40 ஆவது நிமிடத்தில் நிதர்சனும், 48ஆவது நிமிடத்தில் ஜக்சனும், 49ஆவது நிமிடத்தில் நிதர்சனும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய 5:1 என்று ஆதிக்கம் செலுத்திய மேரிஸ். 54ஆவது நிமிடத்தில் ஹென்றிஸ் அணியின் தனேஸ் ஓர் கோலைப் பதிவு செய்ய முடிவில் சென்.மேரிஸ் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-108-422)

# கிண்ணம் வென்றது கழுகுகள்

யாழ்ப்பாணம், மே 4
அருளொளி சிறுவர் வி.கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கழுகுகள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

6 வீராங்கனைகள் பங்குபற்றும் 4 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்த இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கழுகுகள் அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 4 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுகிர்தா 21 ஓட்டங்களையும், நிசா 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பொலிகை பாரதி அணியின் சார்பாக வனிசா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பொலிகை பாரதி அணி 3.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 28 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பந்து வீச்சில் கழுகுகள் அணி சார்பாக சுகிர்தா 2 இலக்குகளையும், அஜிதா, கார்த்திகா, கஜனி மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-422)



# ஐ.பி.எல். கிண்ணம்




# சரிவிலிருந்து மீழுவது கடினம் நடப்புச் சம்பியனின் பரிதாபம்

நடைபெற்றுவரும் உலக கார்பந்தயத் தொடரில் சரிவு கண்டுள்ள நடப்புச் சம்பியனான ஹமில்டன், சரிவில் இருந்து மீழுவது கடினம் என வெளிப்படுத்தியுள்ளார். கார்கள் மீதும் அதை ஏற்பாடு செய்பவர்கள் மீதும் அவர் நம்பிக்கையிழந்துள்ளமையே ஹமில்டன் இவ்வாறு வெளிப்படுத்தக் காரணமாகவுள்ளது.

நடப்பு வருடக் கார்பந்தயத் தொடரில் ஹமில்டன் பயன்படுத்திய கார்கள் செயலிழந்தமையால் அவர் தொடர்ந்து சரிவையே சந்தித்து வருகிறார். ரஷ்யாவில் நடைபெற்ற தொடரில் இயந்திரக் கோளாறு காரணமாக, தரவரிசையில் 10ஆவதாகவே ஹமில்டன் பந்தயத்தை ஆரம்பித்திருந்ததோடு, இரண்டு வாரங்களுக்கு முன்னரும் இதே இயந்திரக் கோளாறு காரணமாகப் பந்தயத்தை இறுதி நிலையில் இருந்தே ஆரம்பித்திருந்தார். இதேவேளை, ரஷ்ய பந்தயத்தின் போது பிறிதொரு இயந்திரக் கோளாறையும் ஹமில்டன் எதிர்கொண்டிருந்தார். பந்தயத்தை வெல்லும் வகையில் சென்று கொண்டிருந்த பொழுது, நீர் அழுத்தத்தை காரின் இயந்திரம் இழந் ததால் பின்வாங்குமாறு அவரது அணியால் அறிவுறுத்தப்பட்டிருந்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடங்கள்

உலகளாவிய ரீதியில் 21 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது International pvt கம்பனிக்கு வட மாகாணத்தில், யாழ். மாவட்டத்தில் பணிபுரிய நபர்கள் தேவை.

- தகைமை O/L & A/L
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
- அனுபவம் அவசியமற்றது
- வயதெல்லை 18 - 30
- EPF, ETF, Medical & Insurance செய்து தரப்படும்.

தொடர்புக்கு: 077 2986763 / 0777009820

## இழப்பதற்கு ஒன்றுமில்லை;தெரிவிக்கிறார் மத்தியூஸ்

இங்கிலாந்துக்கு எதிரான தொடர்களில் பங்கெடுப்பதற்காக இலங்கை அணி இங்கிலாந்துக்கு பயணமாகவுள்ள நிலையில், தற்போதைய இலங்கை அணியிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லை என்றுள்ளார் மத்தியூஸ். அனுபவமில்லாத இளம் வீரர்களைக் கொண்ட அணியாக இலங்கை உள்ளதைக் கருத்தில் கொண்டே மத்தியூஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். முதலாவது டெஸ்ட் ஆட்டம் இந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. குறித்த தொடர் தொடர்பாக மத்தியூஸ் தெரிவித்ததாவது- இங்கிலாந்தை இங்கிலாந்தில் வைத்து சந்திப்பது சவாலானது. அத்தகைய பெரும் சவாலை அனுபவமற்ற இளம் வீரர்களைக் கொண்ட எமது அணி எதிர் கொள்ளப்போகிறது. அனுபவமற்ற இந்த அணியிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. இத்தகைய தன்மையில் சிறந்த தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்த அதிக வாய்ப்புக்கள் இருக்கும். அதைச் செய்யக் காத்திருக்கிறோம்- என்றார். (ம)

### வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி அண்டிய பகுதிகளில் 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 86 230 79

### தவறிவிட்டது

கந்தசாமி துருசந்தன் ஆகிய எனது 951591955 V இலக்கமுடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் கசூரினா கடற்கரையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 41 29 287

### அட்ஷய திருதியை அழைப்பிதழ்
09.05.2016



அழகிய நவீன சிங்கப்பூர் நகைகளுக்கு

# சிங்கப்பூர் ஜுவல்லறி

அட்ஷய திருதியையன்று நகைகளை கொள்வனவு செய்யும் அன்பான வாடிக்கையாளர் அனைவருக்கும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்.

Sinkapoore Jewellery



நிகழும் மங்கலகரமான துர்முகி வருஷம் சித்திரை மாதம் 26ஆம் நாள் (09.05.2016) திங்கட்கிழமை அட்ஷய திருதியை என்னும் பொன்னான நாள் வருகின்றது. அன்றைய தினம் நீங்கள் வாங்கும் நகைகள் என்றும் உங்கள் வாழ்க்கையில் நிலைத்து நிற்கும். நாமும் இந்த அட்டிய திருதியை வரவேற்க இருப்பதனால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறையாத செல்வத்தை வளமாக அள்ளி வழங்கும் பொன்னான திருநாள் அட்ஷய திருதியையன்று சொந்தமாக்கிடுங்கள் சிங்கப்பூர் ஜுவல்லறியின் தங்க நகைகளை

021 4590 260 / 021 222 3327

இல.28, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
No.28, Kasthuriar Road, Jaffna.

USAID FROM THE AMERICAN PEOPLE
"Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

மகளிர் அபிவிருத்தி நிலையம் வன்முறைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு இலவச சட்ட சேவைகளை நடத்தி வருகிறது

தொடர்புகளுக்கு:
இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144
மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா,மட்டக்களப்பு மாவட்டங்களில்
(59259) (45.3.7)

### SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர், யுவதிகள், O/L,A/L எழுதியோர், தொழில்தேடுவோர் தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் உங்களால் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 07.05.2016 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வாரநாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள்
காலை 10.00-12.00

07.05.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும். ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

### வேலைவாய்ப்பு

Hotel அனுபவமுள்ள மும்மொழிகளிலும் பேசக்கூடிய முகாமையாளர் (Manager) தேவை.

077 724 2427, 077 741 2713

### வாடகைக்கு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகில் சிறிய வீடொன்றும் அறைகளும் வாடகைக்கு உண்டு.

077 724 2427, 077 741 2713

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாட்கள் நிரம்பிய, தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட Original Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

077 800 5420

### பொருளியல்

Personal Class
A/L - 2018, A/L-2017, A/L- 2016
K. Jasotharan BBA
T.P: 077 44 37 947

### உடன் தேவை

சாரதி அனுமதிப்பத்திர முடைய நகைவியாபாரத்தில் அனுபவமுள்ளவர் உடன் தேவை.

075 042 2389

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகிறோம்.

GUNA BEST PC Computer Repair
077 9086737
50/12, Hospital Road Jaffna. (Vairavar Kovil lane)

## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), சுன்னாகம் 31.07.2011 இல் உள்ளவாறான கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்

சங்கத்தின் 2010/2011 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது மீதியினை உறுதிப்படுத்திக்கொள்ள அக்காலத்துக்குரிய கணக்குப் புத்தகங்களுடன் கீழ்க் குறிப்பிட்ட நாள்களில் கிராமிய வங்கிக்கு சமுகமளித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் கணக்குகளை உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் மீதிகள் சங்கப் பேரேடுகளின்படி சரியானதென உறுதிப்படுத்தப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| இல | கிராமிய வங்கியின் பெயர் | பார்வையிடும் திகதி | பார்வையிடும் நேரம் |
|---|---|---|---|
| 1 | இணுவில் கிராமிய வங்கி | 10.05.2016 - திங்கள் | காலை 9.00- பிற்பகல் 3 |
| 2 | சுன்னாகம் கிராமிய வங்கி | 10.05.2016 - திங்கள் | காலை 9.00- பிற்பகல் 3 |
| 3 | குப்பிளான் கிராமிய வங்கி | 10.05.2016 - திங்கள் | காலை 9.00- பிற்பகல் 3 |
| 4 | ஏழாலை கிராமிய வங்கி | 11.05.2016 - செவ்வாய் | காலை 9.00- பிற்பகல் 3 |

பொதுமுகாமையாளர்
(C/20975) (11,17,18)

## தோழியாகச் செயற்படக் கூடிய உதவியாளர் தேவை

யாழ் நல்லூரைச் சேர்ந்த (இந்து சமயம்) தற்போது இங்கிலாந்துப் பிரஜாவுரிமையுடன் அங்கு வாழும் குடும்பத்தினரின் ஒரே மகளானவர் இந்தியாவில் கல்லூரியில் கல்வி கற்பதற்கு அவருடன் கூடச் செல்வதற்கும் உதவியாக இருப்பதற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயதுக்குட்பட்ட பெண்பிள்ளை தேவை. போக்குவரத்து, விசா அனைத்தும் செய்து தரப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 076 920 0114
077 021 0255

# வினோ நகைப்பூங்கா

என்றும் குறையாத ஐஸ்வர்யத்தை அள்ளித் தரும் அக்ஷய திருதியை திருநாளாம் 09.05.2016 அன்று எமது வினோ நகைப் பூங்காவில் தங்க நகைகளை கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தை அள்ளிச் செல்ல அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

அக்ஷய திதி அன்று காலை 7 மணிமுதல் மாலை 9 மணிவரை வாடிக்கையாளரின் நன்மை கருதி கடை திறந்திருக்கும்.



குறிப்பாக 08.05.2016 அன்று வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது ஸ்தாபனம் திறந்திருக்கும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
எமக்கு வேறு கிளைகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 5394
021 222 9494
Fax: 021 222 2824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.